869
16.x.07

வெளியீடு : 1-8-2007

Issued : 1-8-2007

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 30, 2007—தொகுதி 23—எண் 2

Friday the 30th March, 2007 —Volume 23—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

தமிழ்நாடு ... காப்பகம்
சென்னை-600 008
எழும்பூர்

30–3–2007

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 255,256, 260-261

(ஆ) கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து

திரு. ஞா. ஜாண் ஜோசப் — 261

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 261

**2. முன்பண மானியக் கோரிக்கைகள், 2007–2008, அளித்தல்—**

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 256-260

**3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதமும் பதிலுரையும்—** — 261-262,263-358

திரு. ஜி.கே. மணி — 262,263-271

*திரு. டி. சுதர்சனம் — 271-291,312-313

திரு. ஓ. பன்னீர்செல்வம் — 279,291-296, 300-304, 308-310, 312-334,345

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 294-295,296, 302-305, 308-310,312, 334-355

பக்கங்கள்

**4. அரசினர் தனித் தீர்மானம்—**

உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பு–நாடாளுமன்றத்தைக் கூட்டி முடிவெடுக்க மத்திய அரசை வலியுறுத்தல் — 262-263

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 262

**5. அறிவிப்புகள்—**

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006–2007, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.) — 358-359

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.) — 363

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2007–2008, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.) — 364-365

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.) — 370

**6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006–2007, வாக்கெடுப்பு—** — 359-363

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 359

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2007 — 364

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2007 — 370-371





பக்கங்கள்

**8. முன்பண மானியக் கோரிக்கைகள், 2007–2008, வாக்கெடுப்பு—** — 365-370

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 365

**9. அரசினர் தீர்மானம்—**

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — 371-372

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2007 — 372-373

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 372,373

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2007 — 374-375

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 374-375

**11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 376

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 16, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மார்ச் 30, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்."

அனைத்து மக்களும் சமம் எனினும், அவரவர்க்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்

#### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளதற்கு. . .

**திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, . .

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டில் மீனவர்கள் இறந்தது குறித்து விவாதிக்க வேண்டும்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, . .

[2007 மார்ச் 30

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை. நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்தும் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. வருகின்ற இரண்டாம் தேதி எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

## 2. முன்பண மானியக் கோரிக்கைகள், 2007–2008, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவைமுன் வைக்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

***2007—2008 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்***

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 4,97,16 | — | — |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 4,31,99 | — | — |
| 3 | நீதி நிருவாகம் | 56,53,13 | — | — |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 153,63,78 | 5,74,90 | — |
| 5 | வேளாண்மைத் துறை | 271,99,08 | 20,32,23 | — |

காப்பகம்
227562
சென்னை-600 008
நூலகம்



2007 மார்ச் 30]

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 54,78,22 | 31,29 | — |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 24,01,13 | 3,71,39 | — |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 4,63,71 | 1 | 7,18,25 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 88,38,06 | 8,11,93 | — |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 46,88,02 | — | — |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 33,65,22 | — | — |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 100,14,83 | 331,41,79 | 54,94 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 840,41,96 | 77,20 | 240,00,00 |
| 14 | எரிசக்தித் துறை | 289,57,42 | 25,00,00 | 1 |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 73,30,26 | 57,39,53 | — |
| 16 | நிதித் துறை | 116,15,02 | 1 | 4,20,88 |

[2007 மார்ச் 30

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 17 கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 130,74,78 | — | 1 |
| 18 கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 14,37,61 | 27,50 | — |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 557,79,98 | 13,66,95 | — |
| 20 உயர் கல்வித் துறை | 258,57,75 | 5,03,45 | — |
| 21 நெடுஞ்சாலைகள் துறை | 480,72,91 | 1,102,30,38 | — |
| 22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 481,87,70 | 51,75,00 | 25,00 |
| 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 28,72,84 | 2,22,35 | — |
| 24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 22,49,95 | 1,59,36 | — |
| 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 15,39,12 | — | — |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 76,94,28 | 129,96,97 | 27,12,50 |
| 27 தொழில் துறை | 17,29,57 | 12,20,25 | 28,00,00 |
| 28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 8,35,59 | 21,90 | — |



2007 மார்ச் 30]

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 29 சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 16,29,71 | 3,47,25 | — |
| 30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 16,33,27 | 2 | — |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 191,74,87 | — | — |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 90,53,32 | 88,79 | — |
| 33 சட்டத் துறை | 3,30,83 | — | — |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 481,59,65 | 145,60,07 | 37,98,37 |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 8,14,34 | 3,95 | — |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 9,79,01 | 3,90,94 | — |
| 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 10,86,65 | — | — |
| 38 பொதுத் துறை | 33,60,26 | 1,25,00 | — |
| 39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 52,56,99 | 121,44,54 | — |
| 40 பாசனம் (பொதுப் பணித் துறை) | 258,42,56 | 219,66,82 | — |
| 41 வருவாய்த் துறை | 587,27,64 | 23,65 | — |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 666,06,62 | 201,52,54 | — |

[2007 மார்ச் 30

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 1,723,65,07 | 40,47,71 | 1,37 |
| 44 | சிறுதொழில்கள் துறை | 15,78,22 | 8,92 | — |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 369,67,42 | 21,25 | — |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 6,14,59 | — | — |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 9,62,61 | 26,81 | — |
| 48 | போக்குவரத்துத் துறை | 84,11,22 | 18,80,64 | 18,75,00 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 11,27,37 | 1 | 62,50 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 1,546,04,78 | — | — |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 69,61,50 | — | — |
| | பெருமொத்தம் | 10,519,19,57 | 2,529,93,30 | 364,68,83 |

## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்திருக்கின்ற கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகள் அனைத்துமே என்னுடைய பரிசீலனையில் இருக்கின்றன. வரும் இரண்டாம் தேதி எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஏப்ரல் இரண்டாம் தேதி எடுத்துக்கொள்ளப்படும். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)



2007 மார்ச் 30]

### (ஆ) கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மீனவர்கள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த பரபரப்போடும், ஆவலோடும், எழுப்பியிருக்கின்ற இந்தப் பிரச்சினை, எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்துள்ள ஒரு பிரச்சினை. அவர்கள் எழுப்புகின்ற இந்தப் பிரச்சினை குமரிமுனையிலே நடைபெறுகின்ற கொலைகள், சிங்கள இராணுவத்தால் நடத்தப்படுகின்ற வன்முறைச் சம்பவங்களைப் பற்றியதாகும். இதுகுறித்து உடனடியாக, விவரங்களை அறிந்துவர அந்த வட்டாரத்திலே உள்ள நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களை இன்று காலையிலே அனுப்பி வைத்திருக்கின்றேன். அங்கிருந்து அவர்கள் செய்திகளைச் சேகரித்துத் தருவார்கள். இதுகுறித்து நான் மத்திய சர்க்காரோடும் தொடர்பு கொண்டிருக்கின்றேன். விவரங்கள் வந்தபிறகு, இன்றைக்கே இந்த விவரங்கள் வந்தாலும்கூட, இடையிலே இந்த அவையிலே சொல்கின்றேன். இல்லாவிட்டால், நாளை அல்லது நாளை மறுநாள் இந்த அவையிலே இதைப் பற்றி விவாதிக்கலாம் என்று நம்புகின்றேன். (குறுக்கீடுகள்)

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 27 சதவிகித இட ஒதுக்கீடு சம்பந்தமாக முதல்வர் அவர்கள். . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் சார்.

## 3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதமும் பதிலுரையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உயர் கல்வி நிறுவனங்களில் வழங்கப்பட்டிருந்த 27 விழுக்காடு இட ஒதுக்கீடு சட்டத்திற்கு இடைக்காலத் தடையை விதித்திருக்கிறது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) இது இந்திய ஜனநாயகத்திற்கும், நம்முடைய நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும், ஒரு கறுப்பு நாள். ஒட்டுமொத்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இந்திய நாட்டிற்குமான கறுப்பு நாள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நாங்கள் கறுப்புச் சட்டையை அணிந்து வந்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*முற்பகல் 9-35*

## 4. அரசினர் தனித் தீர்மானம்

### உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பு—நாடாளுமன்றத்தைக் கூட்டி முடிவெடுக்க மத்திய அரசை வலியுறுத்தல்

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு, இந்தப் பேரவையின் அனுமதியோடு, எல்லோருடைய அனுமதியும் நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு, ஒரு தீர்மானத்தை இந்தப் பேரவையிலே வைக்க விரும்புகின்றேன்.

"29-3-2007 அன்று உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இட ஒதுக்கீடு குறித்த இடைக்காலத் தீர்ப்பு, கல்வியிலும், சமூக முன்னேற்றத்திலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பின்னடைவை உருவாக்க வழிவகுப்பதால், நாடாளுமன்ற உரிமையைப் பாதிக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ள அந்தத் தீர்ப்பு குறித்து விவாதித்து நல்ல முடிவெடுக்க நாடாளுமன்ற இரு அவைகளையும் உடனே கூட்டவேண்டும் என்றும், அந்தத் தீர்ப்பினால் அடித்தட்டில் வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய முடிவுகளை எடுக்கவேண்டும் என்றும், இந்தப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. வரவு—செலவுத் திட்டம், 2007—2008, பொது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம்-தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய நாடாளுமன்றம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உயர் கல்வி நிறுவனங்களில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிய சட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. நான் முன்பு குறிப்பிட்டமாதிரி இது இந்திய நாட்டினுடைய ஜனநாயகத்திற்கும், இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும் ஒரு கறுப்பு நாள், இந்திய நாட்டு மக்களின் கறுப்பு நாள் என்பதை உணர்த்துகின்ற வகையில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நாங்கள் இன்று கறுப்புச் சட்டை அணிந்து இந்த ஆதங்கத்தை, வேதனையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிற இந்த வேளையில், இந்திய நாட்டிலே வாழக்கூடிய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஆறுதல் அளிக்கிற வகையில், மேலும் இந்த இட ஒதுக்கீடு நிலைபெறும், அதற்கு நான் இருக்கிறேன், நான் இந்திய நாட்டிற்கு வழிகாட்டியாக இருப்பேன் என்று, நேற்று வந்த இடைக்காலத் தடை தொடர்பாக நம்முடைய சட்டப் பேரவையில் ஏகமனதாகத் தீர்மானம் கொண்டுவருவதற்குக் காரணமாக இருந்த முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், முதலமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாடாளுமன்றத்திற்கு வேண்டுகோள் வைக்கிற இத்தீர்மானத்தில் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளையும் கூட்ட வேண்டும், உடனடியாக நல்ல தீர்வினை அளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால், இந்த இடைக்காலத் தீர்ப்பு வந்தவுடனே இட ஒதுக்கீட்டின் பிறப்பிடமான தமிழ்நாட்டில், சமூக நீதிக்கு வித்திட்ட தந்தை பெரியார் இன்று இருந்திருப்பாரானால், தன்னுடைய தடியைக் கையிலே எடுத்துக் கொண்டு நாடு முழுவதும் சுற்றி, கிளர்ச்சியிலே ஈடுபட்டிருப்பார். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இருந்திருப்பார் என்று சொன்னால், இதற்கு மிகப் பெரிய முடிவினை இந்திய அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என்று பொங்கி எழுந்து நின்றிருப்பார். பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருப்பாரானால், தமிழ்நாட்டு மக்களையெல்லாம் ஒன்றுசேர்த்து இந்தியாவிற்கு வழிகாட்டியாக, முதல்கட்ட இயக்கத்திற்கு வித்திட்டிருப்பார். தந்தை பெரியாராக, பெருந்தலைவர் காமராஜராக, பேரறிஞர் அண்ணாவாக, ஒட்டுமொத்த மூவரின் உருவமாக இருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்தப் பிரச்சினையைக் கையிலே எடுத்திருப்பது தமிழ்நாட்டிற்குப் பெருமை, சமூக நீதிக்குப் பெருமை, இந்திய நாட்டிற்கு வழிகாட்டி என்பதை மீண்டும் ஒருமுறை பாராட்டி, எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியும் இந்த சமூக நீதிப் போராட்டத்திற்கு உங்கள் பின்னாலே அணிவகுத்து நிற்கிறோம் என்ற உறுதியை உங்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, இங்கே இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும், பேதம் இல்லாமல் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக ஆதரித்ததற்கு, சட்டப் பேரவையில் இடம்பெற்றிருக்கிற அத்தனை அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40

அதுமட்டுமல்ல, நேற்று நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, "நாளை, 31 ஆம் தேதி, சனிக்கிழமை பொது வேலைநிறுத்தம்" என்ற ஓர் அறிவிப்பைச் சொல்லி, அதேநேரத்தில், தமிழ்நாட்டினுடைய



பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற அ.இ.அ.தி.மு.க.-வும், ம.தி.மு.க.-வும், தே.மு.தி.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் இதற்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்திருப்பது அவருடைய பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, ஒட்டுமொத்த ஆறரை கோடித் தமிழ் மக்களும் இந்தப் பொது வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு முழு ஆதரவு அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கு முன்வைக்கிறேன். இப்படி உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருப்பது இந்திய நாட்டின் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு பேரிடியாக அமைந்துள்ளது.

அத்தீர்ப்பிலே மூன்று காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். பழைய அளவுகோலின் அடிப்படையில் சட்டமாக்கப்பட்டது, வாக்கு வங்கிக்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது, ஜாதிகளிடையே பிளவு ஏற்படுத்துகிறது என்ற மூன்று காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இது எவ்வளவு வேதனையான அம்சம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

27 சதவிகித இட ஒதுக்கீடு செல்லும் என்பது மண்டல் குழு பரிந்துரைமீது ஒன்பது நீதியரசர்களைக் கொண்ட அந்த அமர்வு எடுத்த முடிவு. அதிலே மாண்புமிகு நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்களும் இடம் பெற்றிருந்தார்கள் என்பது தமிழகத்திற்குப் பெருமை. ஆகவே, ஒன்பது பேர் கொண்டிருந்த அந்த அமர்வைக் கொச்சைப்படுத்தக்கூடிய வகையிலே இப்போது எந்த அளவுகோல் என்று கேட்கிறார்கள். மண்டல் குழு பரிந்துரையை ஆய்வு செய்த 9 பேர் கொண்ட அந்த அமர்வுதான் 27 விழுக்காட்டிற்குப் பரிந்துரை செய்தது. ஆனால், இப்போது இது சாதியின் பெயரால் பிளவுபடுத்துகிறது என்று கூறி மக்களை மோதவிடுகிற, தூண்டிவிடுகிற ஒரு போக்கிலே உச்ச நீதிமன்றம் ஈடுபட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், வாக்கு வங்கிக்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்று சொல்வதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதிலே உச்ச நீதிமன்றம் அரசியல் சித்து விளையாட்டு விளையாடுகிறது. இட ஒதுக்கீடு என்பது அரசியல் நோக்கம் கொண்டதல்ல, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினை. ஆகவே, இந்த இடைக்காலத் தீர்ப்பு என்பது இந்திய நாட்டில் இருக்கிற அத்தனை மக்களுக்கும் மிகப் பெரிய வருத்தத்தை, வேதனையை அளிக்கிறது என்பதை

இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதேநேரத்தில், 9 பேர் கொண்ட அமர்வுக்குப் பதிலாக இரண்டு பேர் கொண்ட அமர்வு நேற்று இடைக்காலத் தீர்ப்பு அளித்துள்ளது இன்னும் மிகப் பெரிய அதிர்ச்சியை, வேதனையை அளிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்த 27 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பது பாதுகாக்கப்பட வேண்டும்; நிலை நிறுத்தப்பட வேண்டும். இப்பிரச்சினையில் இந்திய நாட்டிற்கு எடுத்துக்காட்டாக, வழிகாட்டியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானத்தைக் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றியதும், நாளை பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருப்பதும், இந்திய நாட்டிற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டி என்பதை உறுதிப்படுத்துகிறது என்பதை மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோளை வைக்கிறேன். நீங்கள் இன்று இந்திய அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, இந்திய நாட்டிலே இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளுக்கும் வழிகாட்டியாக இருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. நீங்கள் வேண்டுகோள் வைத்தால், பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநில முதலமைச்சர்—இதற்காக வேண்டுகோள் வைப்பதிலே தவறு இல்லை—பக்கத்திலே புதுவை முதலமைச்சர், உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சர், பீகார் மாநில முதலமைச்சர், இப்படி எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் நீங்கள் வேண்டுகோள் வைத்தால் அவர்கள் உங்கள் பின்னாலே நிற்பார்கள்; அந்த மாநிலங்களிலும் முழு அடைப்பை நடத்துவதற்கு, வேலை நிறுத்தத்திலே ஈடுபடுவதற்கு ஆதரவு அளிப்பார்கள். அந்த வேண்டுகோளையும் நீங்கள் முன்வைக்க வேண்டும். இந்திய நாடு முழுவதுமாக ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு நீங்கள் வழி காண வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, ஒட்டுமொத்தமாக இந்த 27 விழுக்காடு நிலை பெற வேண்டும், அதற்கு எடுத்திருக்கிற முயற்சிக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே மீண்டும் ஒருமுறை முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி, நன்றி, நன்றி என நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில பிரச்சினைகளை இங்கே நான் சுருக்கமாகச் சொல்லிவிட்டு அமர விரும்புகிறேன்.



கடந்தமுறை, 1996-2001-ல் முதலமைச்சராக இருந்த நேரத்தில், முதல்வர் அவர்கள் இதைப்போல சமூக நீதிக்கு மிகப் பெரிய ஒரு நல்ல காரியத்தைச் செய்தீர்கள். நாங்களெல்லாம் சட்டமன்றத்திலே பேசினோம். இன்று மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு முழுமையான இட ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை. காலிப் பணியிடங்களை நிரப்பவேண்டும். அதற்காக வெள்ளை அறிக்கை வேண்டுமென்று கேட்டோம். வெள்ளை அறிக்கையை வழங்கினீர்கள். எங்கள் வேண்டுகோளை ஏற்று, இட ஒதுக்கீட்டுக்காக சட்டமன்றத்தைக் கூட்டி, தனி விவாதத்தையே நடத்திய பெருமை உங்களுக்கு இருக்கிறது. ஒரு நாள் இதை விவாதித்தீர்கள். அப்போது பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்புவதாக வாக்குறுதி அளித்தீர்கள். அதற்கிடையிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் அது நின்றுபோய்விட்டது. இப்பொழுது மீண்டும் அந்தப் பின்னடைவுக் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். ஆதி திராவிட மக்களுக்கும், பழங்குடியினருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் உள்ள இடங்களை நிரப்பவேண்டும். கடந்த முறை அளித்த வெள்ளை அறிக்கையிலேகூட அதில் சில அம்சங்கள் முழுமையாக இடம் பெறவில்லை. மீண்டும் அவற்றை ஆய்வு செய்யவேண்டும். ஆய்வு செய்த பிறகு அவற்றை நிரப்பவேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்கிறேன்.

இட ஒதுக்கீட்டிலே மிக முக்கியமானது தற்காலிகப் பணி நியமனம். கடந்த ஆட்சியிலும் சரி, இப்பொழுது நடந்திருந்தாலும் சரி, இவற்றிலெல்லாம் இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது) எல்லா நிலைகளிலும் இட ஒதுக்கீடு வேண்டும். அதிலேயும் கவனம் செலுத்தவேண்டும். அதைப்போல தனியார் துறையில் இட ஒதுக்கீடு மிக முக்கியமானது. தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்று சொல்கின்ற நேரத்திலே, தனியார் கல்லூரிகள், பள்ளிகள் என இவற்றிலெல்லாம் இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வரவேண்டும். குறிப்பாக இஸ்லாமியர்களுக்கும்; கிறிஸ்துவர்களுக்கும், அதாவது சிறுபான்மையினருக்கான இட ஒதுக்கீட்டை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே ஐக்கிய நாட்டு சபையின் உலக உணவுத் திட்ட அமைப்பு ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறது. இலங்கைவாழ் தமிழர்கள் பட்டினிச் சாவின் விளிம்பிலே

இருந்துகொண்டிருக்கின்றார்கள். இன்னும் ஏப்ரல் வரையிலே இந்த நிலை நீடித்தால், ஆப்பிரிக்க நாடுகளிலே நடந்ததைப்போல, அங்கே பட்டினிச் சாவு நடைபெறும். ஆகவே, உலக நாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை அனுப்பி வையுங்கள், மருந்தை அனுப்பி வையுங்கள் என்ற வேண்டுகோளை வைத்திருக்கிறது ஐ.நா. சபை. ஆகவே, இந்தச் சூழ்நிலையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்திய அரசிடம் சொல்லி, வலியுறுத்தி, உணவுப் பொருட்களையும், மருந்தையும் அனுப்பி வைக்கவேண்டும். அவற்றை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலமாக அனுப்பவேண்டும். அவை முறையாக அங்குள்ள தமிழர்களை, பட்டினியிலே இருக்கின்ற தமிழர்களைச் சென்றடைய வழி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சில்லரை வணிகத்தைப் பொறுத்தவரை பெருமுதலீட்டாளர்களால் ஏகப்பட்ட சில்லரை வணிகர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இப்பொழுது பார்த்தால், சென்னையிலே ரிலையன்ஸ் கடையைத் திறந்துவிட்டார்கள். மிகப் பெரிய பாதிப்பு சில்லரை வணிகர்களுக்கு உண்டாகிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்த ரிலையன்ஸ் கடை தமிழ்நாட்டிலே இருக்கக்கூடாது. சில்லரை வணிகர்களைப் பாதுகாக்க அவற்றைச் சென்னையை விட்டு அகற்றுவதற்கு நீங்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.

இப்பொழுது நம்முடைய சட்டப் பேரவையிலே பல்கலைக்கழகங்களுக்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட இருக்கிறது. அதை வரவேற்கின்றோம். அதைக் கொண்டுவரக்கூடிய வேளையிலே—தனியார் பல்கலைக்கழகம் என்று சொல்லப்படுகிற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இங்கு இருக்கிறது. அது தனியார் பல்கலைக்கழகம் அல்ல. அரசினுடைய உதவியைப் பெறுகிறது. ஆனால், தன்னிச்சையாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அது வணிக நோக்கத்தில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், நல்ல தீர்வினை உண்டாக்குகின்ற வகையில், இந்தப் பல்கலைக்கழக திருத்தச் சட்டத்தின்கீழ் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தையும் உள்ளடக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்கள், அங்கிருக்கக்கூடிய எல்லோரும் அவ்வாறு சொல்கிறார்கள். ஆகவே, அதற்கு வழி காணவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.



தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் கரும்பைப் பயிரிட்டுவிட்டு, இன்றைக்கு வெட்ட முடியவில்லை; பதிவு இல்லையென்று சொல்லி எல்லாக் கரும்பும் காய்ந்துகொண்டிருக்கிறது. வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சேலம், கடலூர், விழுப்புரம் போன்ற எல்லா மாவட்டங்களிலும் ஒட்டுமொத்தமாக இந்த நிலை இருக்கிறது. ஆகவே, கரும்பு விவசாயிகள் மேலும் பாதிப்படையாமல், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கிட, பயிரிட்ட கரும்பை வெட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். காவல் துறையிலே காவலர் பணி மிகக் கடுமையான தன்மையைக் கொண்டது. அவர்களுக்கு வேலை நேரம் என்பதே இல்லை. எந்த நேரத்திற்கு வேண்டுமானாலும் பணிக்குக் கூப்பிடுகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, காவல் ஆணையம் அமைத்திருக்கிறீர்கள், வரவேற்கிறோம். இருந்தாலும்கூட, காவல் துறையிலே, காவலர்கள், முதல்நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், துணைக் கண்காணிப்பாளர்கள் என எல்லா நிலைகளிலும் இருக்கின்ற அவர்களுக்கு பணி நேரம் வரையறுக்கப்படவேண்டும். மற்றவர்களுக்கு இருப்பதைப் போல 8 மணி நேர வேலை என்று வரையறுக்க வேண்டும். அவர்களுடைய பணியின் தன்மையை அறிந்து ஊதிய உயர்வு வழங்கவேண்டும். அவர்கள் பணி சிறப்பதற்கு ஊக்கத் தொகையாக அதிக ஊதியம் வழங்கவேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கிறேன்.

முற்பகல் 9-50

மக்கள் நலப் பணியாளர்கள் உங்களால் வாழ்வு பெற்றவர்கள். மக்கள் நலப் பணியாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. அவர்களது சம்பள உயர்வுக்கு வழிகாணவேண்டும். நியாய விலைக் கடையிலே எடையாளர்கள், விற்பனையாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் உள்ளது; 1,750 ரூபாய், 2,000 ரூபாய்தான் அவர்களது சம்பளம். ஆனால், அதே வேலையைச் செய்யக்கூடிய, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்றவர்களுக்கு 7,000 ரூபாய் சம்பளம் இருக்கிறது. அதிக வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல அரசுக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளில் கணினி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. அவர்களைக் காலமுறை

ஊதியத்திற்கு மாற்றியிருக்கிறீர்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வும் வழங்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். அதேபோல, வேளாண் பட்டப்படிப்பு முடித்தவர்கள், பட்டயப் படிப்பை முடித்தவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். கைத்தொழில் ஆசிரியர்கள் நியமனம் தேவை.

சாலைப் பணியாளர்கள் வாழ்வு பெற்றார்கள், தங்கள் திருக்கரத்தால். முன்பு எத்தனையோ பேர் செத்தார்கள்; மீண்டும் வாழ்வு அளித்திருக்கிறீர்கள். அவர்களுக்கு கருணை உள்ளத்தோடு ஊதிய உயர்வு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்துவிடுகிறேன். சத்துணவு, ஊட்டச் சத்து வழங்கும் திட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலே அந்த ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கினீர்கள். மாணவர்களுக்கு வாரத்திற்கு மூன்று முட்டை வழங்கினீர்கள். அந்தப் பணியைச் செய்யக்கூடியவர்கள், இப்போது ஓய்வுபெறக்கூடிய நிலைக்கு வந்துவிட்டார்கள். அவர்களுக்கு வயதாகிவிட்டது. அவர்களுக்குச் சம்பளம் குறைவு. ஆகவே, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.

அடுத்து, என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளைச் சொல்வதற்கு முன்னர், முக்கியமாக போக்குவரத்துக் கழகத்தில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று இருந்து, பிறகு 5 ஆண்டு, 6 ஆண்டுகள் என்றாகிவிட்டது. மீண்டும் அதை 3 ஆண்டுகளுக்கொரு முறை என நிர்ணயிக்கவேண்டும். அவர்கள் ஓய்வூதியம் பெறுவதிலே சிக்கல்கள் இருக்கின்றன. தடை இல்லாமல் ஓய்வூதியம் பெறுவதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்திலே தற்காலிகப் பணியாளர்களாக இருப்பவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, அதைப்போல கூட்டுறவு வீட்டு வசதிக் கடன் பெற்றவர்கள், பண்ணை சாராக் கடன் பெற்றவர்கள் மிகுந்த கஷ்டத்தில் இருக்கிறார்கள். தொடர்ந்து எல்லோரிடமும் கோரிக்கை வைக்கின்றார்கள். அந்தக் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்பற்றி தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் வயிற்றில் பால்வார்க்கிற வகையிலே, முதலமைச்சர்



அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பினைச் செய்திருக்கிறார்கள். தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் சார்பிலே முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி அந்தப் பணியை விரைவிலே தொடங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னையில் விதிக்கப்படும் குடிநீர்க் கட்டணம். குடிநீர்க் கட்டணம் கட்டவில்லை என்றுச் சொல்லி எல்லா இடங்களிலும் இப்போது ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு தண்டம், வட்டி போடுவது, அபராதம் போடுவது, கந்து வட்டியை விட அதிகமாகப்போய்விட்டது. ஆகவே, அந்தத் தண்டத்தையெல்லாம் குறைத்து உண்மையான கட்டணத்தைக் கட்டுவதற்கு ஒரு காலக்கெடுவை நிர்ணயித்துச் சொன்னால் உடனே கட்டி விடுவார்கள். அதற்கு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மிக முக்கியமான பிரச்சினை ஒன்றுள்ளது. மேட்டூர் நகரத்திலே ஆயிரக்கணக்கான வீடுகள் இருக்கின்றன. அந்நிலங்களுக்குப் பட்டா இல்லை. எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, பொதுப் பணித் துறை ஒப்புதல் அளித்து அந்த நிலங்களுக்கும் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற தொகுதி பிரச்சினைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நிவர்த்தி செய்துதர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலையின் தொடக்கம் முதல், 1984-லிருந்து, சுமார் 2,000 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களை நிரந்தரம் செய்யவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து இந்த வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த

நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆட்சி பொறுப்பேற்று இரண்டாவது நிதிநிலை அறிக்கையை, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இரண்டரை மணி நேரம் இங்கே நின்றுகொண்டு வாசித்தார்கள். அந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் பல்வேறுபட்ட கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 9-55*

இந்தப் பேரவைத் தொடங்கிய காலத்திலிருந்து சுமார் 50 ஆண்டுகாலம் இந்த மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, இன்றும் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர், முத்தமிழறிஞர் அவர்கள், முதலமைச்சராக இருந்துகொண்டிருக்கிற காலத்திலே நாங்களும் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறோம் என்பதிலே பெருமைப்படுகிறோம். அதற்கான விழா 10 ஆம் தேதி இந்த மன்றத்திலே நடைபெறவிருக்கிறது. அதில் இந்திய ஜனாதிபதி அவர்கள், கலைஞர் அவர்களைப் பாராட்டி உரை நிகழ்த்தவிருக்கின்றார்கள். அந்த நிகழ்ச்சியிலும் நாங்களெல்லாம் கலந்துகொள்கிற வாய்ப்பைப் பெற்றமைக்காக நாங்கள் பெருமைப்படுகிறோம்.

அதேநேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே இதற்கு முந்தைய நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோதே இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள், சமுதாயத்திலே வாழ்விழந்து, பலமிழந்து, கூனிக் குறுகி இருந்த மக்களுக்கு, அன்றாடம்காய்ச்சிகளாக இருந்த மக்களுக்கு, உணவில்லாமல் இருக்கிற வறியவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தின் அடிப்படையிலே நீங்கள் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குக் கொடுத்தீர்கள்.

அதுமட்டுமல்லாமல், படிக்கின்ற மாணவர்களுக்குச் சத்துணவு கொடுக்க வேண்டும் என்று சொல்லி வாரத்திற்கு 2 முட்டைகளைக் கொடுத்தீர்கள். தரிசு நிலத்தை மேம்பாடு செய்து ஏழைகளுக்கு 3 கட்டங்களாக இப்போது கொடுத்திருக்கிறீர்கள். 685 கோடி ரூபாய் ஒதுக்கி முதல் ஆண்டிலேயே எல்லா மக்களும் பயன்பெறுகின்ற வகையில், ஏழையெளிய மக்கள் உலக நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ள, தெரிந்துகொள்ள வேண்டி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை நீங்கள் வழங்கினீர்கள்.



தாய்மார்களை மனம் குளிர வைப்பதற்கு இலவச எரிவாயு அடுப்பை வழங்கினீர்கள். திருமண உதவித் திட்டம், மகப்பேறு உதவித் திட்டம், முதியோர் நிதியுதவி இரண்டு மடங்காக உயர்வு, வேலையில்லாத இளைஞர்களுக்கு நிதியுதவி என்று இப்படிப் பல்வேறு வகைகளிலே நீங்கள் உதவி செய்து, இப்போது இரண்டாம் கட்டமாக இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறீர்கள்.

இந்த இரண்டாமாண்டு நிதிநிலை அறிக்கை தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள சவால்களை நீக்குவதற்கு இந்தத் திட்டங்கள் பெரிதும் பயன்படும். சமூக நீதியோடுகூடிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும். இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ள நலத் திட்டங்களுக்கு நல்லாட்சி நடத்தி வரும் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல செயல் வடிவம் கொடுத்துள்ளார்கள்.

இது ஒரு வரியில்லாத பட்ஜெட். பயிர்க் கடன் வட்டி குறைப்பு; பள்ளிக் குழந்தைகளுக்கு வாரத்திற்கு 3 முட்டைகள்; ஹெல்மெட் கட்டாயம் அணிதல்; 5 ஆண்டுகளில் மெட்ரோ இரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு; வரும் மே, ஜூன் மாதங்களில் கூட்டுறவுத் தேர்தல்; ஏழை மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே பருப்பு, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் ரேஷன் கடைகளில் வினியோகம்; உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு; சென்னையில் இரண்டாவது டைடல் பார்க்; திருநெல்வேலியிலே I.T. Park; விருதுநகரிலே சிறப்புப் பொருளாதார மண்டலம்; பத்திரப் பதிவில் புதிய திட்டம்; சாலை-பாலங்களுக்கு 3,527 கோடி ரூபாய் ஒதுக்கீடு; நீதித் துறைக்கு ரூபாய் 270 கோடி; 50 விரைவு நீதிமன்றங்கள்; பல்வேறு பொருட்களுக்கு வரி குறைப்பு; சர்வதேசத் தரத்தில் சென்னையிலே நூலகம்; 48 கோவில்களுக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு; பத்திரிகையாளர்களுக்கு நல வாரியம்; அடித்தட்டு மாணவர்களுக்கு உயர் கல்வி இலவசம்; பள்ளி வாகனங்களுக்கு இருக்கை வரி குறைப்பு; தாமிரபரணியில் வீணாகும் தண்ணீரை வறண்ட பகுதிகளுக்கு அனுப்ப ஆய்வு; சினிமாத் தொழிலாளர்களுக்கு விரைவில் வீட்டு நிலங்கள்; உள்ளாட்சிகளுக்கான அரசின் நிதி ஒதுக்கீடு 9 சதவிகிதமாக உயர்வு; திருவாரூர், தருமபுரி நகரங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள்; வண்டலூரிலே வண்ணத்துப் பூச்சிப் பூங்கா; சென்னை-மாமல்லபுரம் சாலையில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்; போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தீர்க்க ஆலோசனைக் குழு; மெரினா உள்ளிட்ட

பகுதிகளை அழகுபடுத்த 25 கோடி ரூபாயில் திட்டம்; கல்வி, சுகாதாரத்திற்காக ரூபாய் 10 ஆயிரம் கோடி; அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு மற்றும் விடுமுறைக் கால பயணச் சலுகை; தமிழில் படிப்பவர்களுக்கு பத்தாம் வகுப்பு மற்றும் ப்ளஸ்-2 தேர்வுக் கட்டணம் இரத்து; அரசுக் கல்லூரிகளிலே எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி; நெல்லையிலே அண்ணா பல்கலைக்கழகம்; கடலூர் மாவட்டத்திலே கப்பல் கட்டும் தொழிற்சாலை; உயர்நிலைக் கண்காணிப்புக் குழு என்று இப்படிப் பல்வேறு நலத் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே பேராசிரியர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-00

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி தமிழகத்திலே இருக்கின்ற அத்தனைப் பத்திரிகைகளும், குறிப்பாக தினத் தந்தி, தினமலர், தினகரன், மாலை முரசு, மாலை மலர், மக்கள் குரல், The Hindu, Indian Express, Deccan Chronicle, தொலைக்காட்சிகள், உலகத்திலே உள்ள ஊடகங்கள் அனைத்துமே பாராட்டியிருக்கின்றன. தினமலர் பத்திரிகைகூட இது ஒரு ஜில்லென்று இருக்கின்ற பட்ஜெட் என்று அறிவித்திருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் அவர்கள், ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கை வணிக வரி நிறுவனத்தின் ஆண்டு வரவு-செலவுக் கணக்குபோல இருக்கிறது என்று முன்னாள் முதல்வர், 10 ஆண்டு காலம் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்தவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி விமர்சனம் செய்திருக்கின்றார்கள். ஒரு தலைவர் 'இந்த நிதிநிலை அறிக்கை ஒரு காகிதப் பூ' என்று சொல்லியிருக்கின்றார்கள். இன்னொரு நண்பர், பயன்படாத பட்ஜெட் என்று சொல்லியிருக்கிறார். இந்த மூன்று பேர்கள்தான் இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை கூறியிருக்கின்றார்களே தவிர, வேறு யாரும் இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை கூறவில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, இது விவசாயிகளை முன்நிறுத்தி இருக்கின்ற நிதிநிலை அறிக்கை. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் விவசாயிகள் வாழ்க்கையை வளமாக்க, வறுமையில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற விவசாயிகளின் குடும்பங்களில்



விளக்கேற்றும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், ரூபாய் 7 ஆயிரம் கோடிக்கு விவசாயக் கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்து, அதன்மூலமாக 22,39,487 விவசாயிகள் பயன்பெற்றார்கள். சென்ற நிதிநிலை அறிக்கையிலேயே அவர்கள் பயிர் செய்வதற்கு 1,153 கோடி ரூபாய் ஒதுக்கி, 9 சதவிகித வட்டியிலேயிருந்து 7 சதவிகிதமாகக் குறைத்து, அவர்கள் வாழ்க்கையிலே ஒளி சேர்த்திருக்கிறீர்கள். இந்த ஆண்டு, புதிதாக, பயிர்க் கடனுக்காக ரூபாய் 1,360 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். இந்த ஆண்டு விவசாயிகளுக்குப் பயிர்க் கடனுக்கு வட்டியை 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறீர்கள். அதற்காக, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், வாயார, மனமார, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும், தமிழக நிதியமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக ஒட்டுமொத்த விவசாயப் பெருங்குடி மக்கள், 4 சதவிகித வளர்ச்சி அடைய வழிவகை செய்திருக்கின்றீர்கள். அதனால், விவசாயப் பெருங்குடி மக்கள், இந்த அரசை மனதார மிகவும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதேபோன்று, இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனே, நன்கு படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில், புதிதாகத் தொழில் முனைவோர்களையெல்லாம் அடையாளம் கண்டு, அந்தத் தொழில் முனைவோர்கள் எல்லாம் இந்த அரசை எளிதாக அணுகக்கூடிய வகையிலே, அவர்களெல்லாம் அணுகி, மோட்டரோலா, அப்போலோ டயர்ஸ், டெசால்வ், டெல் கம்ப்யூட்டர்ஸ், குரோத் லிங்க், சாம்சங், மஹிந்திரா-ரெனால்ட்-நிஸ்ஸான் மற்றும் சுபாரோ ஆகிய புதிய தொழிற்சாலைகளை சுமார் ரூபாய் 7 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் நீங்கள் கொண்டு வந்திருக்கின்றீர்கள்.

எண்ணூர் துறைமுகப் பகுதியிலும், கடலூர் மாவட்டத்திலும் கப்பல் கட்டும் தளங்கள், ரூபாய் 3,700 கோடியில் தனியார் துறையில் அமைக்கப்பட உள்ளன. இதனால் சுமார் 25,000 இளைஞர்கள் வேலைவாய்ப்பை நேரடியாகப் பெறுவார்கள்.

சிவகங்கையிலே கிராபைட் கனிம வளத்தை முழுமையாகப் பயன்படுத்தும் நோக்கில் தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து சர்வதேசத் தரத்தில் உயர் தொழில்நுட்பத்துடன் கிராபைட் சுத்திகரிக்கும் தொழிற்சாலையை உருவாக்க இருக்கிறீர்கள்.

இந்த வகையில் விருதுநகர் மாவட்டத்தில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தையும் நீங்கள் அமைக்க இருக்கிறீர்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-05

இன்றைக்கு தமிழகத்திலே பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், இந்த L.T.T.E. பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. இந்த L.T.T.E. பிரச்சினையிலே, சமீப காலமாக இலங்கைக்கு, தமிழ்நாட்டிலே இருந்து ஆயுதங்கள், வெடி மருந்துகள், மூலப் பொருட்கள் மற்றும் அலுமினிய உருளைகளைக் கடத்துவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு சிலரைச் சிறையிலேகூட அடைத்து வைத்திருக்கிறார்கள். இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம், தமிழகத்திலே உள்ள அனைவருக்கும் உண்டு. ஆனால் தமிழகத்திலே தீவிரவாதம் பரவக்கூடாது. தீவிரவாத சக்திகளை தலை தூக்கவிடக் கூடாது. அவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். அதைப்போலவே, தமிழகத்திலே அந்தத் தீவிரவாதச் சக்திகளுக்கு யார் துணை போனாலும், அவர்களை இனம் கண்டு, தமிழக முதல்வர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, காவிரிப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, பாலாறு பிரச்சினை என்று பல பிரச்சினைகள் நம்மை வாட்டிக் கொண்டிருக்கின்றன. காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரை கடந்த 38 ஆண்டு காலமாக கர்நாடகத்தோடு நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். புதிதாக ஆந்திர மாநிலத்தோடு பாலாறு பிரச்சினை நமக்கு வந்திருக்கிறது. கேரள மாநிலத்தோடு சமீபத்தில் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை வந்திருக்கிறது.

பூகோள ரீதியாகக் கேரளம், ஆந்திரம், தமிழகம், கர்நாடகம் என்று 4 மாநிலங்கள் தனியாக இருந்தாலும்கூட, இந்த 4 மாநில மக்கள் ஒன்றாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கர்நாடகத்திலே தமிழர்கள் வாழ்கிறார்கள், தெலுங்கர்கள் வாழ்கிறார்கள், கேரளத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். தமிழகத்திலும் அதேபோன்று பிற 3 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது உணர்ச்சிபூர்வமான ஒரு பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கில் 32 ஆண்டுகளாக



நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்தப் பிரச்சினையில் ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. 1892 ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தம், பிறகு 1924 ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தம் ஆகியவை 1974 ஆம் ஆண்டோடு முடிவடைந்து விட்டன என்று சொன்னாலும்கூட, இந்தத் தீர்ப்பின்மூலமாக இது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

காவிரி ஆணையத் தீர்ப்பிலே பல சாதகங்கள் இருக்கின்றன, சில பாதகங்கள் இருக்கின்றன. அந்தச் சாதகங்களையும், பாதகங்களையும் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டும் என்று 19-2-2007 அன்று சென்னை தலைமைச் செயலகத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தனது தலைமையிலே, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்திலே அத்தனை பேரும் கருத்தைத் தெரிவித்தார்கள். காவிரிக் குடும்பம் என்று சொல்லுகின்ற விவசாயச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், இப்படிப்பட்ட ஒரு நல்ல தீர்ப்பு வந்திருக்கிறது என்றுகூட அந்தக் கூட்டத்திலே தெரிவித்தார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர், நம்முடைய எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும், வழக்கறிஞர் திரு. ஜோதி அவர்களும் இந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டார்கள். கலந்துகொண்டு ஏகோபித்த ஒரு முடிவெடுத்தோம். அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து நமக்கு இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் விளக்கி, மேல் முறையீடு செய்ய வேண்டும் என்ற ஒரு நிலையினை எடுத்து, அது ஏகமனதாக ஒத்துக்கொள்ளப்பட்ட நிலை.

அதற்குப் பின்னாலே தமிழகத்திலே என்ன நடைபெற்றது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். உணர்ச்சிபூர்வமாக பல்வேறு காரியங்கள் தமிழகத்திலே நடைபெற்றிருக்கின்றன. இங்கே நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள், உண்ணாவிரதம் இருந்தார்கள். எதற்காக உண்ணாவிரதம் என்று கேட்கின்றபோது, இந்த காவிரி நதிநீர் ஆணையத்தினுடைய தீர்ப்பை மத்திய அரசு கெஜட்டிலே வெளியிட வேண்டும் என்று சொன்னார்கள். அதிலேகூட, சிலபேருக்கு மாறுபட்ட கருத்து இருக்கலாம். ஆனால் அதையும் நாம் ஒன்றாகக் கூடி உட்கார்ந்து பேசி அந்தப் பிரச்சினையில் முடிவு எடுத்து இருக்கலாம். எப்படிக் கர்நாடகத்திலே பிரச்சினை வருகின்றபோது, அங்கே ஆளுகின்றவர்கள் யாராக இருந்தாலும், நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் நேற்று குறிப்பிட்டதைப் போன்று அங்கே கர்நாடகத்திலே இருக்கின்ற. . . (குறுக்கீடு)

[2007 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் அவர்கள் பேசுகிறபோது உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கு முன்னால், எல்லோரும் கலந்து அதிலே ஏதாவது முடிவு செய்து இருக்கலாம் என்று சொன்னார்கள்.

இந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலும் நேற்றையதினம் நீங்கள் அறிவாலயத்திலே கூடி தனியாக முடிவு செய்தீர்கள். அதைப்போல நாங்கள் என்ன செய்வது என்பதுதான் எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, கூட்டியது யார் என்பதை நீங்கள் முதலிலே தெரிந்து அதை விளக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**திரு. டி. சுதர்சனம்:** நேற்று அறிவாலயத்திலே நடைபெற்ற கூட்டம் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய கூட்டம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சிகளினுடைய கூட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக்கூட நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கின்றார்கள். தான் சட்டமன்றத்திற்கு ஏன் வரவில்லை என்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், அவர் சொல்லிவிட்டார் இல்லையா? நேற்று கூட்டியது தி.மு.க. கூட்டணியினுடைய கூட்டம். ஆனால், காவிரிப் பிரச்சினைக்காகக் கூட்டியது அனைத்துக் கட்சியினுடைய கூட்டம் என்று தெளிவாகச் சொல்லிவிட்டார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐக்கிய முன்னணியைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய தோழமைக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நேற்று முடிவு செய்ததாகச் சொல்லி ஓர் அறிவிப்பினையும் வெளியிட்டிருக்கிறீர்கள். இந்த நாட்டினுடைய தலையாயப் பிரச்சினையாக இருக்கிற இந்தப் பிரச்சினையில் அனைத்துக் கட்சிகளையும் அழைத்து இதிலே என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, அவற்றை எப்படி நிவர்த்தி செய்யவேண்டும் என்பதை ஏன் கேட்கவில்லை



2007 மார்ச் 30] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

என்பதை மட்டும்தான் நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எழுகின்ற பிரச்சினைகள், அவை பொதுப் பிரச்சினையாக இருந்தால் ஒட்டுமொத்தமாக அனைவரின் குரலும் ஒரே குரலாக ஒலிக்க வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளினுடைய பிரதிநிதிகளும் நல்ல பல கருத்துகளை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். 27 சதவிகிதம் உயர் கல்வியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தரப்பட வேண்டுமென்ற சமூக நீதியைக் காப்பதற்காக இயற்றப்பட்ட மத்திய அரசினுடைய சட்டத்திற்குத் தடையை உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கின்றது. இந்தப் பிரச்சினை, சமூக நீதியைக் காப்பதற்கு உரிய அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கான பொதுப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் ஒருமித்த கருத்தைப் பெறவேண்டுமென்று உண்மையிலேயே தமிழக அரசும், தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் விரும்பியிருந்தால் எங்களுக்கும் கால அவகாசம் கொடுத்து, எங்களையும் அழைத்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தினைக் கூட்டி இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. கூட்டத்தைக் கூட்டி, நடத்தி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பெற்று அதற்கு நீங்கள் ஆதாவு தா வேண்டுமென்றுதான் கடிதம் அனுப்பியிருக்கின்றார்களேயொழிய, எங்களைக் கூட்டம் கூட்டுவதற்கு முன்பாக அழைத்துப் பேசவில்லை. இதில் யார் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றார்கள் என்பதனை நாடு நன்றாகவே அறியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையைப் பற்றி கூட்டப்பட்ட கூட்டம், தமிழக அரசினுடைய, முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் இங்கே கூட்டப்பட்ட கூட்டம். அதிலே அனைத்துக் கட்சித் தலைவர்களும் அழைக்கப்பட்டார்கள். அரசு நடத்திய கூட்டம் அது. ஆனால், நேற்று நடத்தப்பட்ட கூட்டம், நேற்று மதியம் அந்தத் தீர்ப்பு வந்தது என்று அறிந்தவுடன்,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சிக் கொறடா பேசிவிட்டார். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிவிட்டார். நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? அமைதியாக உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** நேற்று மாலையே, இந்தத் தீர்ப்பு வந்த ஒரு மணி நேரத்திலேயே தோழமைக் கட்சித் தோழர்களை எல்லாம் அழைத்து, என்ன பேசுவது, என்ன செய்வது என்று பேசி முடிவு எடுக்கக் கூட்டப்பட்டது அந்தக் கூட்டம். உங்களையெல்லாம் அழைத்துப் பேச வேண்டுமென்ற எண்ணம் முதலமைச்சருக்கு இல்லாமல் இல்லை. பெருந்தன்மையோடுதான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். உங்களையெல்லாம் அழைப்பதற்காகத்தான் இந்த அடையாள வேலைநிறுத்தத்திலே நீங்களும் கலந்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கும் சேர்த்து வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அதிலே நீங்களும் தயவுசெய்து கலந்துகொண்டு தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த எதிர்ப்பையும் தெரிவிக்க வேண்டுமென்று உங்களைப் பணிவாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-15*

இந்தக் காவிரிப் பிரச்சினையில் அத்தனைபேரும் சேர்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினோம். சாதக, பாதகங்களை விளக்கி மேல்முறையீடு செய்வது என்று முடிவெடுத்து அதற்குப் பின்னாலே காந்திய வழியிலே, அஹிம்சா முறையிலே நீங்கள் உண்ணாவிரதம் இருந்தீர்கள். எங்களுக்கு அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. உண்ணாவிரதம் இருப்பது என்பது உங்களுடைய உரிமை. ஆனால், இங்கே உண்ணாவிரதம் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே இருக்கின்ற தமிழர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை உருவாகிறது. அங்கே இருக்கின்ற தமிழர்களுக்குப் பாதுகாப்பை யார் கொடுப்பது? அந்த அரசுதானே கொடுக்க வேண்டும்? அந்த அரசை எதிர்த்து நாம் உண்ணாவிரதம் இருந்தால், நான்கு தென் மாநிலங்களிலே இருக்கின்ற தமிழர்கள் பாதிக்கப்படுவார்கள். அப்படிப் பாதிக்கப்படுகின்ற தமிழ் மக்களுக்கு, அவர்களுடைய பொருளுக்கு, உடைமைக்கு யார் பாதுகாப்பு அளிக்க முடியும்? இடைக்காலத் தீர்ப்பு வந்தபோது அங்கே கர்நாடகத்திலே என்ன நடைபெற்றது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். தமிழர்களின் வீடுகள் சூறையாடப்பட்டன. தமிழர்களுக்கு பல்வேறு துன்பங்கள் அங்கே இழைக்கப்பட்டன. அதனால்தான்



நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கன்னட நடிகர் இராஜ்குமார் அவர்கள் கடத்தப்பட்டபோது, அங்கே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு எந்தவிதமான இன்னல்களும், இடையூறுகளும், துன்பங்களும், துயரங்களும் நிகழ்ந்துவிடக் கூடாது என்றுதான் இரண்டு முறையோ, மூன்று முறையோ கர்நாடகத்திற்குச் சென்று அங்கே அந்த குடும்பத்தினரை எல்லாம் சந்தித்து அன்றைய முதலமைச்சர் கிருஷ்ணா அவர்களோடு பேசி, சுமுகமான ஒரு தீர்வைக் கண்டார்கள். எதற்காக? அங்கே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு எந்தவிதமான இன்னல்களும் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் அவர்கள் செய்தார்கள்.

நான் இங்கே சட்டமன்றத்திலே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், எப்படிக் கர்நாடகத்திலே பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த அனந்தகுமார் அவர்கள், நாடாளுமன்றத்திலே இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்கப்பட வேண்டும் என்று சொல்கிறாரோ, அதைப்போன்று நாம் அனைவரும், தமிழகத்தினுடைய அத்தனைக் கட்சிகளும் ஓரணியிலே நின்று, இந்த காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை இன்றைக்கு வந்திருக்கிறது. இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையிலே தமிழ்நாடு பல்லாண்டு பழமையான வரலாற்றைக் கொண்டது. 1927-ல் இருந்தே இதற்கான முனைப்பும் முயற்சியும் தமிழகத்திலே இருந்துதான் பிறந்தது. 1950-ல் அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தது. இட ஒதுக்கீட்டுக் கொள்கை அரசாணைக்கு எதிராக செண்பகம் துரைராஜ், சி.ஆர். சீனிவாசன் என்ற இரண்டு பேர் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார்கள். அப்போது தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம், Communal G.O. செல்லாது என்று தீர்ப்பளித்தது. அப்போது தமிழக முதலமைச்சராக திரு. குமாரசாமி இராஜா இருந்தார், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக பெருந்தலைவர் காமராஜர் இருந்தார். அந்தச் சூழ்நிலையில் Communal G.O. செல்லாது என்று உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து அரசு உச்ச நீதிமன்றத்திலே அப்பீல் செய்தது. சுப்ரீம் கோர்ட்டும் Communal G.O. செல்லாது என்று தீர்ப்பளித்தது. அன்றைய சூழ்நிலையில் தமிழகமே கொந்தளித்தது. பல்வேறு திசைகளில் மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். தந்தை பெரியார் போராட்டம் நடத்தினார். இந்தச் சூழ்நிலையில்தான்

இந்தியாவின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள கட்டத்திற்கு வருகிறோம். காங்கிரஸ் பேரியக்கத்தின் பெருந்தலைவராக விளங்கிய கறுப்பு காந்தி பெருந்தலைவர் காமராஜ், அன்றைய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவுடன் பேசி முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தம், First Constitutional Amendment கொண்டுவந்தார்கள். அப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட லோக் சபா கிடையாது. அரசியல் நிர்ணய சபைதான் இருந்தது. பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனுக்காக காங்கிரஸ் பேரியக்கம் கொண்டுவந்த முதல் அரசமைப்பு சட்டத் திருத்தம் சமூக நீதி வாலாற்றில் முக்கியமான முதல் மைல் கல்லாகும். சமூக நீதியைக் காப்பாற்றியது காங்கிரஸ் அரசு. செய்து முடித்தவர் பண்டித ஜவஹர்லால் நேரு. தூண்டுகோலாக இருந்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பின் பலமாக இருந்து போராட்டம் நடத்தியவர் தந்தை பெரியார் அவர்கள்.

அதோடு மட்டுமல்லாமல், இட ஒதுக்கீட்டுக்கு அதிகமாக வரலாற்றில் பதிவு செய்தவர் காங்கிரஸ் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார். இதற்காக விமர்சனம் செய்தவர்கள்கூட, பெரியார் ஈ.வே.ரா. அவர்களையும் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களையும் ஒப்பிட்டு அவர் தாடி இருக்கிற இராமசாமி, இவர் தாடி இல்லாத இராமசாமி என்று விமர்சனம் செய்தார்கள்.

முற்பகல் 10-20

இன்றைய சூழ்நிலையில் இட ஒதுக்கீட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதேபோல, தன்னை சமூக நீதிக்காக அர்ப்பணித்துக்கொள்பவர் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்கள் என்றால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விஷயத்திலும், சமூக நல நோக்கம் கொண்ட அத்தனை விஷயங்களிலும் காங்கிரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயல்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு அறிவித்துள்ள முழு கடையடைப்பிற்கு தமிழக காங்கிரஸ் கட்சி முழு ஒத்துழைப்பைக் கொடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின், 'பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டைத் தர நீதிமன்றம் உட்பட அனைத்து களங்களிலும் மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும்



எடுத்துக்கொள்ளும்' என்ற அறிவிப்பை நாம் முழு மனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, இன்றைக்கு பல்வேறுபட்ட பிரச்சினைகள் தமிழகத்திலே இருந்து வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளிலே, 2001-லேயிருந்து 2006 வரை, அரசுக்குச் சொந்தமான சிட்கோ, டிட்கோ இன்னும் பல்வேறு நிறுவனங்களிலே எந்தப் புதிய தொழிற்சாலையும் துவங்கப்படவில்லை என்பதை நாம் நன்றாக அறிவோம். இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே, பல்வேறு புதிய தொழில்கள், டிட்கோ நிறுவனத்தின் மூலமாக, சிட்கோ நிறுவனத்தின் மூலமாக, படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு, பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும்; எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும்; அதனாலே இந்த நாட்டிலே வளர்ச்சி காண வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில், இந்தப் பத்து மாத காலத்திலே பல்வேறு அறிவிப்புகளைக் கொடுத்து இன்றைக்கு புதிய தொழில்களையெல்லாம் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக இந்தத் தமிழக அரசை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியிலே வேலைவாய்ப்புத் தடைச் சட்டம் என்ற ஒன்று கொண்டு வரப்பட்டது. ஆண்டொன்றுக்கு 70,000 பொறியியல் மாணவர்கள் தமிழகத்திலே படித்துவிட்டு வருகிறார்கள். ஆண்டொன்றுக்கு 3,000-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் படித்துவிட்டு வேலை தேடி வருகிறார்கள். ஆண்டொன்றுக்கு 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எம்.ஏ., பி.எஸ்.சி., பி.ஏ., இப்படிப் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை. ஆனால், வேலைவாய்ப்புத் தடைச் சட்டத்தைச் சென்ற அரசு கொண்டுவந்த காரணத்தினால், ஒருவருக்குக்கூட அப்போது வேலைவாய்ப்புக் கொடுக்க முடியவில்லை.

தமிழக அரசுப் பணிக்கு பணியாளர்களை அமர்த்துவதற்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்ற ஓர் அமைப்பு உள்ளது. அந்த அமைப்பிலே 12 பேர் உறுப்பினர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாதச் சம்பளம் ரூபாய் 40,000-க்கு அதிகமாக வாங்குகிறார்கள். அவர்களுக்காக நிறையவே, ஆண்டொன்றுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்துக்

கொண்டிருக்கிறார்கள். அந்த தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக 2001 முதல் 2006 வரை எத்தனைபேர் பணியிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்? இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்தப் பத்து மாத காலத்தில் இந்தத் தேர்வாணையம் எத்தனைப் பேருக்குப் பணி பெற்றுத் தந்திருக்கிறது? இன்றைக்கு அரசுக்குப் பல்வேறு துறைகளிலே ஆட்கள் தேவைப்படுகிறார்கள். அந்தக் கமிஷனிலே 12 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. அதுமட்டுமல்ல, அந்த அலுவலகத்திலேயிருந்து அரசுக்கு பணியாளர்கள் எத்தனை பேர் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள், இந்தப் பத்து மாத காலத்திலே? அதற்கு சம்பந்தப்பட்ட அந்த உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செய்து எத்தனை இளைஞர்களை இந்த அரசுக்குத் தேர்வு செய்து அனுப்பியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு தமிழகத்தினுடைய நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே தெரிவிக்க வேண்டுமென்று நான் பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-25*

அதுமட்டுமல்ல, இன்றைக்கு சென்னை மாநகரத்திலே மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது கட்டடங்களை வரன்முறைப்படுத்துவது. 1999-ல் அன்றையதினம் ஆட்சியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு; சென்னை மாநகர எல்லைக்குள்ளே இருக்கிற தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் திட்டமிடுதல் சட்டத்தின் விதிகளை மீறிக் கட்டப்பட்ட சுமார் 3 இலட்சம் கட்டடங்களை எப்படி வரன்முறைப்படுத்துவது என்பதை நிபுணர்கள், அறிஞர்கள், நகரமைப்பு ஆய்வாளர்களைக் கலந்துகொண்டு சட்டத் திருத்தத்தினை நிறைவேற்றியது. இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் 1-9-1999-க்கு முன்பு கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்த விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. எதிர்பார்த்த அளவிலான விண்ணப்பங்கள் வராத காரணத்தினால், வரன்முறைப்படுத்தும் கட்டணத்தினை 50 சதவிகிதமாகக் குறைத்து 31-12-2000 வரை அரசு கால நீட்டிப்பு செய்தது. இந்த இரண்டாவது திட்டத்தின்படி 31-8-2000 வரை கட்டப்பட்ட மற்றும் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் வரன்முறைப்படுத்தத் தகுதிவாய்ந்தவையாக அறிவிக்கப்பட்டன. அதன் பின்னர், 11,314 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 2,85,000 கட்டடங்கள் வரன்முறைப்படுத்த விண்ணப்பிக்காத நிலை இருந்தது. தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட



முன்னேற்றக் கழக அரசு 9-8-2001-லே மற்றொரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து 30-11-2001 வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டு, மேலும் 10 சதவிகிதக் கட்டணத்தைக் கூட்டி விதிகளை அந்த அளவுகோலின்படி திருத்தியது. அதனடிப்படையில் 31-7-2001 வரை கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களுக்கும் அடுக்குமாடி மற்றும் தனிக் குடியிருப்புகளுக்கும் சேர்த்து விண்ணப்பங்கள் வாங்கப்பட்டன.

மீண்டும் அன்றைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 30-11-2001-ல் மற்றும் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்தது. 31-10-2001 வரை கட்டப்பட்ட மற்றும் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களுக்கு 31-12-2001 வரை விண்ணப்பம் செய்ய அனுமதிக்கப்பட்டது. இந்த வரன்முறைப்படுத்தும் திட்டத்தினை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், சென்னை உயர் நீதிமன்றத்தினால் 23-2-2006 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் வரன்முறைப்படுத்தும் திட்டத்தினை 1999 ஆம் ஆண்டு வரைதான் அனுமதிக்கலாம் என்றும், அதன்பிறகு கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்துவது செல்லாது என்றும் அனைத்து ஆணைகளையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உயர் நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்பே இத்திட்டத்தின்கீழ் சுமார் 252.8 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது. இதில் 240.50 கோடி ரூபாய் அரசின் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின் காரணமாக வரன்முறைப்படுத்துவதற்கு அரசின் சட்டங்களை நம்பிப் பணம் கட்டிய இரண்டரை இலட்சத்திற்கும் அதிகமான கட்டட உரிமையாளர்களும் தங்கள் குடியிருப்புகளுக்கும், கட்டடங்களுக்கும் என்ன நடக்குமோ என்று அஞ்சிக் கொண்டிருக்கின்றனர்.

வரன்முறைகளுக்குட்படாத கட்டடங்களை முதலில் கட்ட அனுமதித்துவிட்டு, அப்படிக் கட்டியவர்களுக்கு மின் இணைப்பு, குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளை வழங்கிவிட்டு, இலட்சக்கணக்கான ஏழை மக்கள், நடுத்தர மக்கள், தங்களது வாழ்வின் சேமிப்புகளை அரசின் சட்டங்களை நம்பி குடியிருப்புகளிலும் மற்ற கட்டடங்களிலும் முதலீடு செய்த பிறகு, இப்படியொரு நிச்சயமற்ற தன்மை உருவாகியிருப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இன்னும் 10 நிமிடங்கள் வேண்டும். சென்னை மாநகரிலே இருக்கிற வரன்முறைப்படுத்தப்படாத குடியிருப்புகள் மற்றும்

வணிக வளாகக் கட்டடங்களை இடித்துத் தள்ளுவது என்று முடிவு எடுக்கப்படுமானால் அது சென்னை மாநகரத்தின் பொருளாதார அடிப்படையையே அழித்துவிடக்கூடிய அபாயத்தினை உருவாக்கிவிடும். அரசின் சட்டங்கள் மற்றும் நமது சட்டமன்றத்தின் அதிகாரத்தினை நம்பித் தங்கள் வாழ்வின் சேமிப்புகளைக் கொடுத்து குடியிருப்புகள் மற்றும் கட்டடங்களை வாங்கிய இலட்சக்கணக்கான ஏழை மற்றும் நடுத்தர மக்கள் தெருவுக்கு வந்துவிடுவார்கள். வரன்முறைக்கு உட்படாத வணிக வளாகங்கள் அனைத்தும் இடிக்கப்படுமானால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து பெரும் சிரமத்திற்குள்ளாவார்கள். தமிழகத்தில் வியாபாரமே ஸ்தம்பித்துவிடும். குறிப்பாக, பாண்டி பஜார் போன்ற இடங்களிலே உள்ள வணிக வளாகங்கள் மற்றும் அங்காடிகளில் ஆசிய நாடுகள் அனைத்திலிருந்தும் வரப்பெறும் பல்வேறு வகையான வாடிக்கையாளர்களுக்கு வணிக சேவை செய்து கொடுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த இடங்களுக்கு எல்லாம் சேதம் வருமாயின் சென்னை நகரமே அமங்கலமாகக் காட்சியளிக்கக்கூடிய சூழ்நிலைதான் உருவாகும். இதற்காக விதிகளுக்குட்பட்ட கட்டடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை தேவையில்லை என்று நான் கூறமாட்டேன்.

அதைப்போன்ற கட்டடங்கள் இருப்பது சென்னை மாநகரில் மட்டும் உள்ள பிரச்சினை அல்ல. இன்று டெல்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத் போன்ற பெருநகரங்களில் எல்லாம் இப்பிரச்சினை இருக்கிறது. எனவே, அவர்களுடைய அனுபவத்தினை வைத்துக்கொண்டு இப்பிரச்சினையை நாம் எப்படித் தீர்க்கலாம் என்று பார்க்க வேண்டும். கர்நாடகாவிலே விதிமுறைகளுக்கு உட்பட்டு வராத கட்டடங்களை முறைப்படுத்துகின்ற பணியை நமக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பே 1991 ஆம் ஆண்டு, **Karnataka Regulation of Unauthorised Urban Buildings Act,** 1991 என்று நிறைவேற்றி, 1991 முதல் 2004 வரையிலான பதினைந்து ஆண்டுகளுக்கான அச்சட்டத்தினை அவ்வரசு அமலிலே வைத்தது. விதிமுறைக்கு உட்பட்டுவாராத கட்டடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. ஆந்திராவிலே 3-3-2006-லே கூட வரன்முறைப்படுத்த முடியாத கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்கு புதிய விதிகளை அரசாணை ஒன்றின் மூலம் பிறப்பித்துள்ளனர். அதில் வரன்முறைப்படுத்த வேண்டிய கட்டடத்திற்கான அபராதத்தினை F.S.I. அடிப்படையிலே நிர்ணயித்துள்ளனர். ஆந்திரா, கர்நாடகா போன்ற வளர்ந்து வரும் மாநிலங்களுக்கு அனுமதிக்கப்படும் விதிகள் தமிழ்நாட்டில் மட்டும் ஏன் அனுமதிக்கப்படவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.



முற்பகல் 10-30

இதற்கிடையில், கடந்த 20 ஆண்டுகளாக, சென்னை மாநகரத்திற்கு மாஸ்டர் பிளான் என்று அழைக்கப்படும் பெரும் திட்டம் வரைவு செய்யப்படாமலேயே இருந்து வருகிறது. இப்போது அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கி இருக்கின்றன. அந்த மாஸ்டர் பிளான் வரைவுப் பணிகள் முடிந்த பின்னர்தான், தற்போதைய வரன்முறைக்குட்படாத கட்டடங்களை எப்படி வரன்முறைப்படுத்துவது என்பதை நிர்ணயிக்க இயலும். தமிழக சட்டமன்றம் இதற்கான தகுந்த சட்டத் திருத்தம் ஒன்றை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வரன்முறைத் திட்டத்தின்கீழ் வரும், விதிமுறைகளை மீறி கட்டிய கட்டடங்களை வரன்முறைப்படுத்துகின்றபோது, கட்டடத்தின் உயரத்திற்கேற்ப, மிகப் பெரிய கூடுதலான அபராதத் தொகையை விதித்து, வசூல் செய்து, பின்வரும் காலங்களில் இதுபோன்ற வரன்முறைகளை மீறிய கட்டடங்கள் வராமல், கட்டப்படாமல் தடுக்கலாம். விரைவில் அறிவிக்கப்படவுள்ள மாஸ்டர் பிளானில் தொடர் வர்த்தக வளர்ச்சிக்கேற்ப தி.நகர், உஸ்மான் ரோடு, புரசைவாக்கம், அண்ணா நகர் போன்ற வர்த்தகப் பகுதிகளை தொடர் வர்த்தகப் பகுதிகளாக அறிவித்து, அங்கே பொது மக்களுக்கு எவ்வாறான வசதிகள் செய்து கொடுக்க முடியும் என்பதனைப் புதிய தொழில்நுட்பங்கள்மூலம் ஆராயலாம்.

அப்பகுதியிலே போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு, அவர்களது வாகனங்களை, கார் மற்றும் இரு சக்கர வாகனங்களை நிறுத்தம் செய்ய வேண்டிய தானியங்கி அடுக்கு மாடிக் கட்டட வசதிகளை நமது சென்னை மாநகர பெரு நகர வளர்ச்சிக் குழுமம்மூலம் செய்து கொடுக்கலாம். அதற்காகும் செலவினங்களை விதிகளை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களின் உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாறி வரும் காலத்திற்கேற்பவும், தேவைக்கேற்பவும், புதிய சூழ்நிலைகளுக்கேற்பவும் பெருகி வரும் தேவைகளை அனுசரித்து, அதற்கெல்லாம் உகந்த வகையில் சட்டம் இயற்றும் உரிமை சட்டமன்றத்திற்கு மட்டுமே உண்டு. பொது மக்களின் பிரதிநிதிகளாகிய நாம், இந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஒரு நல்ல முடிவினை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசை நான் அன்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, துணை நகரம் மற்றும் சென்னை விமான நிலைய விரிவாக்கப் பிரச்சினை. சென்னை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை நாங்கள் அறிவோம். அதிலே சில பிரச்சினைகள் இருப்பதும் எனக்குத் தெரியும். இருந்தாலும், சென்னை விமான நிலையம் நிச்சயமாக விரிவுபடுத்தப்பட வேண்டியது அவசியம். இன்றைக்கு ஹைதராபாத் விமான நிலையம், பெங்களூர் விமான நிலையம் மற்றும் மதுரை விமான நிலையம்கூட விரிவு செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், சென்னை விமான நிலையம் விரிவு செய்யப்படவில்லை. நிலப் பிரச்சினை என்று சொல்கிறீர்கள். அதற்குப் பல்வேறு இடையூறுகள் இருப்பதாகவும் தெரிகிறது. அதனாலே, சென்னைக்கு அருகிலேயே வேறொரு இடத்தை நீங்கள் தேர்வு செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே அலமாதி என்ற ஓர் இடம் இருக்கிறது. அதற்கு அம்பத்தூரிலிருந்தும் வழி இருக்கிறது, ஆவடியிலேயிருந்தும் வழி இருக்கிறது. சுமார் 2,000 ஏக்கர், 3,000 ஏக்கர் தரிசு நிலம் அங்கே இருக்கிறது. சில உரிமையாளர்கள் இருக்கிறார்கள். அந்த இடத்தை நீங்கள் கையகப்படுத்தி, அங்கே ஒரு பன்னாட்டு விமான நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால், வண்டலூருக்குப் பக்கத்திலே இருக்கின்ற காசங்கால் என்ற இடம், முதன்முதலாக டி.வி. பெட்டி கொடுத்த இடம். அதற்கு முன்னாலே நிறைய நிலங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு இடங்களில் ஒன்றை நீங்கள் தேர்வு செய்து, புதிய விமான நிலையம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துணை நகரங்கள் அமைக்கின்ற முயற்சி வரவேற்கப்படக்கூடிய முயற்சி. என்னுடைய பூவிருந்தவல்லி தொகுதியிலே 3 போகம் விளையக்கூடிய விளைநிலங்கள் கொண்ட திருமழிசை, நெடுஞ்சேரி, செம்பரம்பாக்கம், மேட்டுத்தாங்கல், இருளப்பாளையம், வெள்ளவேடு ஆகிய 6 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பகுதியிலே வீட்டு வசதி வாரியம் இப்போது நிலங்களைக் கையகப்படுத்தி, அந்த 3 போகம் விளைகிற நஞ்சை நிலங்களை எடுத்து, அங்கு மக்களிடத்திலே பெரும் குழப்பத்தை விளைவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அந்த நிலங்கள் கையகப்படுத்தப்பட மாட்டாது என்ற அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், அரசு அதிகாரிகள், வீட்டு வசதி வாரிய அதிகாரிகள் அங்கே சென்று, பல பிரச்சினைகளை



உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள். திருமழிசையில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு Phase-I, Phase-II என்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-35*

***மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்றபடி திருமழிசையில் ஆர்ஜிதம் செய்யப்பட்டது 1,694 ஏக்கர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையைக் கேட்டு, சுமார் 1,200 ஏக்கர் நிலம் கைவிடப்பட்டுவிட்டது. ஆனால், 1996 ஆம் ஆண்டு நிலம் எடுக்கப்பட்டு தீர்வாணம் வழங்கப்பட்ட 466.49 ஏக்கர் நிலம் உள்ளது. அதைப்பற்றிப் பரிசீலித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கும், உத்தரவுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்கள் சொல்வதை முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். அங்கு Phase-I, Phase-II, Phase-III, Phase-IV, Phase-V என்று எடுத்தார்கள். Phase-I என்ற பகுதியில் சென்ற ஆட்சிக் காலத்திலே ஒரு தனியாருக்காக சுமார் 120 ஏக்கர் நிலம் இதிலிருந்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. அதேபோல, நெமிலிச்சேரி என்ற பகுதியில், என்னுடைய தொகுதியில் நிலங்களை வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நிலத்திற்கும் விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. அந்த Phase-I-க்கு மட்டும் விதிவிலக்கு கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு ஏன் விதிவிலக்கு கொடுக்கப்படவில்லை என்பதை நான் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

இன்றைக்குத் துணை நகரம் வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். திருவள்ளூருக்குப் பக்கத்திலே வெங்கல் என்ற இடம் இருக்கிறது. அந்த வெங்கலுக்குப் பக்கத்திலே பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட இடம் உள்ளது. மெய்யூர் என்ற அந்தப் பகுதியிலே 2,000 அல்லது 3,000 ஏக்கர் நிலம் காலியாக இருக்கிறது. அதிலே ஒரு

மிகப் பெரிய துணை நகரம் அமைக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தியாகிகள் மானியம். மத்திய அரசு தியாகிகளுக்கு மானியம் கொடுக்கிறது. மாநில அரசும் தியாகிகளுக்கு மானியம் கொடுக்கிறது. இந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகள் சுமார் 1,112 பேரே இன்று உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த 1,112 பேர்களுக்கு மாதம் ஒன்றுக்கு நீங்கள் 3,000 ரூபாய் மானியமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மத்திய அரசு மானியம் பெறுகின்றவர்களுக்கு வெறும் 500 ரூபாய் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு ஓய்வூதியத்தை 3,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக இந்த அரசு உயர்த்திக் கொடுத்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அதேபோன்று இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு வித்திட்டவர்கள், 80 வயதுக்கும் மேலாக இருப்பவர்கள் அவர்கள் 1,112 பேர்களுக்கு தமிழக முதலமைச்சர் டாக்டா கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலனை செய்து—பேராசிரியரிடத்திலும் சொல்லி இருக்கிறேன்—அந்த சுதந்திரப் போராட்டத்—தியாகிகள் 1,112 பேர்களுக்கு நீங்கள் நிச்சயமாக அவர்களுடைய பென்ஷனை ரூபாய் 3,000/-த்திலிருந்து உயர்த்தித் தரவேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய சட்டமன்றத் தொகுதிகள் எல்லாம் இன்றைக்குப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு இடங்களிலே நாடாளுமன்றத் தொகுதிகளும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சட்டமன்றத் தொகுதிகளில், நாடாளுமன்றத் தொகுதிகளில் பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக முன்பு இருந்த நிலை மாறி இருக்கிறது. அந்தப் பிரிவினையிலே ஆதிதிராவிட மக்களுக்கு நாடாளுமன்றத் தொகுதிகள் மாநிலத்தின் வடக்குப் பக்கத்திலே வந்திருக்கிறது, தெற்குப் பகுதியிலே இல்லை என்ற ஒரு நிலை இருக்கிறது. குறிப்பாக என்னுடைய பூவிருந்தவல்லி தொகுதிகூட அதிலே இல்லை, வேறு நாடாளுமன்றத் தொகுதிக்கு மாறிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு அந்தத் தொகுதி மறு சீராய்வுக் குழுவை, உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி திரும்பவும சீரமைக்க வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை வைககக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



கடைசியாக ஒரேயொரு வேண்டுகோள். திருவள்ளூர் மாவட்டத்திற்கென தொழிற்சாலைகளே கிடையாது. எல்லாத் தொழிற்சாலைகளும் காஞ்சிபுரம் மாவட்டத்திலே இருக்கின்ற, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் யசோதா அம்மையாருடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கே போய்க்கொண்டிருக்கின்றன. அதனாலே, திருவள்ளூர் மாவட்டத்தையும் நீங்கள் தயவுசெய்து கவனிக்க வேண்டும். அங்கு நிறைய காலி இடங்கள் இருக்கின்றன. இடங்கள் இல்லை என்று யாரும் சொல்லவில்லை. அந்த இடங்களையெல்லாம் தேர்வு செய்து தொழிற்பேட்டைகளை நீங்கள் திருவள்ளூர் மாவட்டத்திலே உருவாக்க வேண்டும். திருவள்ளூரிலே அரசு மருத்துவமனை இருக்கிறது. அடுத்த ஆண்டு நிச்சயமாக நீங்கள் திருவள்ளூரிலே ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று திருவள்ளூரிலும், பூவிருந்தவல்லியிலும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை வைத்து, வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

*முற்பகல் 10-40*

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடக்குமுறை, அடாத பழி, கொடுஞ்சிறை இவற்றையெல்லாம் தாண்டி தமிழ் மக்களின் நலனுக்காக, தமிழ் மண்ணின் நலனுக்காக தனது இன்னுயிரை வேண்டினும் அதையும் தருவேன் என்று இன்முகத்துடன் தூய தொண்டாற்றி வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பாதம் பணிகின்றேன். எனக்கு சட்டமன்றத்தில் இரண்டாம் முறையாக அமர்வதற்கு வாய்ப்புக் கொடுத்த, தேர்தலில் நான் வெற்றி பெறுவதற்கு உழைத்திட்ட இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் விசுவாசமிக்கத தொண்டனாக இருப்பேன் என்று கூறி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய சட்டப் பேரவைத் தலைவருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட, தி.மு.க தலைமையிலான தமிழக அரசு, விவசாயிகள் 7,000 கோடி ரூபாய், கூட்டுறவு வங்கிகளில் பெற்றக் கடன்களை தள்ளுபடி செய்துவிட்டதாக ஓர் அறிவிப்பையும் செய்து அவர்கள் அந்தக் கூட்டுறவு நிறுவனங்கள், தொடக்க வேளாண்மை வங்கிகள். . .(குறுக்கீடுகள்)

*(மாண்புமிகு முதலமைச்சர் அவையிலிருந்து வெளியே சென்றார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகிறார். வேறு யார், பின்னால் இருந்து பேசுவது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உட்கார்ந்து கொண்டு, அதிலும் முதலமைச்சர் அவர்கள் வெளியிலே செல்லுகிறபோது, இப்படிப்பட்ட ஒரு comment-ஐ அடிப்பது சரிதானா என்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பி அடித்தால் தாங்க மாட்டீர்கள், ஜாக்கிரதை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஐயா, உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பொறுப்பில் இருக்கின்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 'ஜாக்கிரதை' என்ற வார்த்தையை சட்டமன்றத்தில் உபயோகப்படுத்துவது சரியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்கள்தான் பேசினர். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போல் ஒரு காலத்தில் அமைச்சராக இருந்தவர் அடித்த அந்த comment-ஐக் கேட்டால், 'ஜாக்கிரதை' என்று சொன்னது மென்மை. இதைவிட அதிகமாகச் சொல்லியிருக்க வேண்டும். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார், நீங்கள் உட்கார்ந்துகொண்டு பேசியதே தவறு முதலில். (குறுக்கீடு) தெரிகிறதா? நீங்கள் உங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகிறபோது உட்கார்ந்துகொண்டு comment அடிப்பது என்ன முறை? நான் எச்சரிக்கிறேன், உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தக் கடன்களெல்லாம் ரூ.7,000 கோடி அளவுக்குத் தள்ளுபடி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கடன்களை வழங்கிய கூட்டுறவு நிறுவனங்களுக்கு. . . (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*(மாண்புமிகு முதலமைச்சர் அவைக்குள் நுழைந்தார்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னங்க இப்போது? பிரச்சினை முடிந்துபோய்விட்டது. மறுபடியும் மறுபடியும் அதையே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவையிலே எப்போதும் மரியாதைக் குறைவாக நடந்துகொள்ள மாட்டேன்; அதுவும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர், முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் பேசும்போது நான் எழுந்து செல்லவேண்டிய அவசியமும் இல்லை; அப்படி அவரை மரியாதைக் குறைவாக நடத்தவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது. நான் வெளியே சென்றது எதற்காக என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். எல்லோருக்கும் இயற்கை, உபாதை என்று ஒன்று உண்டு. நான் வெளியே சென்றதற்குக் காரணம், இங்கே யாரையும் அவமதிப்பதற்காகச் செல்லவில்லை, வெளியே அனுப்புவதற்காகச் சென்றேன். (சிரிப்பு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 7,000 கோடி ரூபாய் அளவுக்கு அந்தத் தொடக்க வேளாண்மை வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், விவசாயப் பெருமக்களுக்குத் தந்த அந்தக் கடன்களை, தமிழக அரசு ஐந்து தவணைகளில் தருவதாகச் சொல்லி, அதை ஐந்தாகப் பிரித்துத் தருகின்ற ஒரு முயற்சியிலேயும் இறங்கி, இந்த வருடம் 2006-2007-க்கு ரூ.1,135 கோடியையும் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளபடியே விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாயத்தில் ஈடுபடுகின்றபொழுது, அவர்களுக்கு ஏற்படுகின்ற சுமைகளை, பொருளாதாரச் சுமைகளை, பணச் சுமைகளை, ஓரளவாவது குறைக்க வேண்டுமென்றுதான் அரசு இம்மாதிரியான கூட்டுறவு வங்கிகளையும், தொடக்க வேளாண்மை வங்கிகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கூட்டுறவு அமைப்புகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற நல்ல பெயரும் நமக்கு இருக்கிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் அந்தக் கூட்டுறவு அமைப்புகள் ஒரு மிகப் பெரிய தோல்வியை அடைந்து மீளமுடியாத ஒரு துயரத்தில்தான் மற்ற மாநிலங்களில் இருக்கின்ற கூட்டுறவு நிறுவனங்கள் இயங்குகின்ற ஒரு நிலை இருக்கின்றது. அம்மாதிரியான ஒரு நிலைமை தமிழகத்திலே இருக்கின்ற கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வந்து சேருகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. தமிழக அரசு, அவர்களுக்குச் சேர வேண்டிய 7,000 கோடி ரூபாய்களையும் ஒரே தவணையில் செலுத்தாமல் ஐந்து தவணைகளில் பிரித்துக் கொடுப்பதால், விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டிய கடன்கள், பணத் தேவைகள் முழுவதுமாக மறுக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றது என்பதனை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உரையாற்றுகிறபோது நான் குறுக்கிடுவதற்குப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அமைச்சராக இருந்த ஒருவர்; முதலமைச்சராக இருந்த ஒருவர்; கூட்டுறவுத் துறை எந்த முறையிலே இயங்குகிறது என்பது அவர் அறிந்திருக்க வேண்டிய ஒன்று. கூட்டுறவு அமைப்புகள் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் கடன்கள் கொடுக்கின்றன. கடன் இரத்து செய்த 6,800 கோடி



ரூபாய்க்கும் மொத்தமாக அரசு பொறுப்பேற்றுக்கொண்டு, அந்தக் கடன் இரத்து செய்யப்பட்டு, கடன் பெற்ற விவசாயிகளுக்கெல்லாம் 'உங்களுடைய கடன் இரத்து செய்யப்பட்டது' என்று அத்தனைபேருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் சார்பாக உரிய முறையில் அறிவிப்பும் தரப்பட்டுவிட்டது.

முற்பகல் 10-50

அந்தக் காலகட்டத்தில் கடன் வாங்கியவர்கள் அனைவரும் கடன் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது என்பதால், அந்தக் கடனிலேயிருந்து விடுவிக்கப்பட்டார்கள். என்ன நோக்கம் என்று கேட்டால், மறுபடியும் விவசாயம் செய்ய வேண்டுமானால், அவர்கள் கடன் வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஏற்கெனவே, கடன் இருக்குமானால், மறுபடியும் அவர்கள் கடன் பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள். விவசாயத்திற்குப் புத்துயிர் ஊட்ட வேண்டுமென்பதற்காக அவர்கள் கடன் பெறுவதற்கு ஏதுவாக அவர்களுடைய கடனை இரத்துச் செய்து, அவர்கள் வாங்கிய கடனைத் தமிழக அரசு தன் பொறுப்புக் கடனாக ஏற்றுக்கொண்டது. அதன் காரணமாக, கூட்டுறவு அமைப்புகள் இயங்கமுடியாத நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காகவும், கூட்டுறவு அமைப்புகள், உலக வங்கி அல்லது NABARD போன்ற அமைப்புகளுக்குத் தரவேண்டிய பணத்தைக் காலத்தில் தருவதற்கும், தமிழக அரசு பொறுப்பேற்று, ரூ.1,200 கோடி, ரூ.1,500 கோடி போன்று ஒரு குறிப்பிட்ட அளவில், கடந்த ஆண்டில், எவ்வளவு பேருக்கு, எவ்வளவு தொகை கடன் தேவைப்பட்டதோ, அந்தத் தொகை அளவிற்கு, நிதியும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, வழிவகை முன்பணம் என்பதுபோல அந்தப் பணம் வழங்கப்பட்டதுடன், இன்னொரு பக்கம், அந்த வங்கிகள் NABARD-க்குச் செலுத்தவேண்டிய அந்தப் பணம் அல்லது ரிசர்வ் வங்கிக்குச் செலுத்தவேண்டிய அந்தப் பணத்தையும் ஆண்டுதோறும் கட்டவேண்டிய பணத்தையும் தமிழக அரசு கட்டுகிறது. அதற்கான முழு விவரமும் இந்த அவையில் வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கத்தினை இங்கே தந்தார்கள். பொதுவாக, கூட்டுறவு நிறுவனங்கள், NABARD வங்கியிலிருந்தும், ரிசர்வ் வங்கியிலிருந்தும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, விவசாயிகளுக்குத் தருவதை வழக்கமாகக்

கொண்டிருக்கின்றன. அதைப்போல, விவசாயிகளிடமிருந்து டெபாசிட்களையும் கூட்டுறவு நிறுவனங்கள் பெற்று, அதையும் விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கின்ற ஒரு நிலையில்தான், கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இப்போது கூட்டுறவு நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டிய தொகையினை ஒட்டுமொத்தமாகத் தமிழக அரசு செலுத்தாத காரணத்தினால், தவணை முறையில் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட காரணத்தினால், டெபாசிட் செய்த டெபாசிட்தாரர்களுக்குச் சேரவேண்டிய நிதி, கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகப் போய்ச் சேரமுடியாத ஒரு நிலை இருக்கின்றது. நீங்கள் ஒரு புரட்சிகரமான திட்டத்தினை அறிவித்ததாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். சரி, அந்தத் திட்டத்தின்மூலமாகக்கூட டெபாசிட்தாரர்களுக்குப் பணம் வந்து சேரும் என்ற ஒரு மகிழ்ச்சியை அவர்கள் அடைந்திருந்த நிலையில், ஐந்து தவணைகளில் டெபாசிட்தாரர்களுக்குத் தரவேண்டிய பணம் வருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றபோது, டெபாசிட்தாரர்கள், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற நேரத்தில், அந்தப் பணத்தை எடுக்கமுடியாத ஒரு சூழ்நிலை அங்கே நிலவுகிறது என்பதனை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதுபோல, டெபாசிட் செய்தவர்களுக்கு, தாங்கள் டெபாசிட் செய்த பணத்தை வாங்குவதற்கு விண்ணப்பிக்கிறபோது, கொடுக்கமுடியாத நிலைமை கூட்டுறவுச் சங்கங்களுக்கு இல்லை. (குறுக்கீடு) அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்குமானால், அந்தச் சங்கங்கள் அரசுக்குத் தெரிவிக்குமானால், எவ்வளவு தொகை வேண்டுமானாலும், அரசு ஈடு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகிற முறையில், செயலாற்றுகிற முறையில், ஆண்டுதோறும் அவர்களிடத்தில் டெபாசிட் வருகிறது; டெபாசிட்டைத் திருப்பித் தருகிறார்கள். Working Fund எவ்வளவு தேவையோ, அந்த Working Fund அரசாங்கத்தால் நிச்சயமாக வழங்கப்படும். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்தான் கேள்வி கேட்டார் அல்லவா?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, ஒரே நிமிடம், ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்தான் clarification கேட்டார்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, டெபாசிட் செய்திருக்கின்ற யார் கேட்டாலும், எந்தச் சங்கத்திலே நிதியில்லை என்றாலும், இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள். டெபாசிட் செய்திருக்கின்றவர்கள் யார் வேண்டுமானாலும், அவர்களுடைய டெபாசிட்டில் குறிப்பிட்ட காலம் முடிந்ததற்குப்பிறகு, கேட்கின்றபோது வழங்குவதற்கு, அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இந்த அரசு ஓர் உத்தரவை வழங்கி—அந்தச் சங்கத்திலே எத்தனையோ பேர் கேட்கிறார்கள் (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தெரியாது. அதனுடைய கஷ்டம் உங்களுக்குத் தெரியாது. (குறுக்கீடுகள்) உங்களுக்கு என்ன தெரியும்? உங்களுக்கு எங்கே தெரியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளிலே டெபாசிட் செய்யக்கூடியவர்கள் மத்தியில், ஒரு அச்சம் ஏற்படக்கூடிய வகையிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன். கூட்டுறவு சொசைட்டிகளிலோ அல்லது வங்கிகளிலோ டெபாசிட் செய்தவர்களுடைய பணம் எப்போது கேட்டாலும் கொடுப்பதற்கு அந்த வங்கிகளிலே பணம் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** ஒரு Clarification...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இதைவிட என்ன clarification வேண்டும் உங்களுக்கு.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதுமட்டுமல்ல. மத்திய கூட்டுறவு வங்கிகளிலே மட்டும் கிட்டத்தட்ட 10,500 கோடி ரூபாய்

இன்றைக்கும் மக்களுடைய பணம் டெபாசிட்டாக இருக்கிறது. எங்கேயாவது வங்கிகளுக்குப் பணம் தேவைப்பட்டால் அவர்களும் கடன் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் டெபாசிட் செய்தவர்களுடைய பணம் எந்த நேரத்திலே கேட்டாலும் இந்த ஆட்சியில் திருப்பித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன் *(குறுக்கீடுகள்)* இருக்கட்டும். அரசு பெரிய உறுதிமொழியே கொடுத்தாகிவிட்டது. பிறகு என்ன இருக்கிறது? உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டெபாசிட் திரும்பத் தருவது என்ற பிரச்சினை இந்த 10 மாத ஆட்சிக் காலத்தில் மட்டும் ஏற்பட்டது அல்ல. ஏற்கெனவே நடைபெற்ற ஆட்சியில் இப்படி fixed deposit போட்டுத்தான் திரும்ப வருகிறது; கணக்கு இருக்கிறது. இது ஒன்று. இரண்டாவதாக, ஏற்கெனவே 5 ஆண்டுக்காலம் தொடர்ந்து—இப்போது நாங்கள் 7,000 கோடி ரூபாய் அறிவித்திருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார்—ஏற்கெனவே, 5 ஆண்டுக்காலம் இதே சட்டமன்றத்தில் நாங்களெல்லாம் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம். ஆண்டாண்டு இப்படித்தான் வட்டிச் சலுகை தருகிறோம், தள்ளுபடி என்று தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி அறிவிக்கப்பட்ட தொகை 4,213.32 கோடி ரூபாய். அந்த அளவிற்கு அறிவிப்புச் செய்யப்பட்டது. அப்படி அறிவித்தபடி 5 ஆண்டுக்காலம் கொடுத்திருந்தால் இந்த டெபாசிட்டை எல்லாம் அப்போதே ஒவ்வொரு தொடக்கக் கூட்டுறவு வங்கியும் திரும்பக் கொடுத்திருக்கும். அறிவிக்கப்பட்டது 1,213.32 கோடி ரூபாய். ஆனால், அந்த அரசாங்கம் ஐந்து ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக 508.36 கோடி ரூபாய்தான் அனைத்து வங்கிகளுக்கும் கொடுத்தார்கள். அதனால்தான் இந்த



டெபாசிட்டைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. எனவே, இது இந்த 10 மாத கால ஆட்சியில் ஏற்பட்டது அல்ல. *(குறுக்கீடு)*

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** ஒரு clarification மட்டும்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் clarification சொன்னதற்குப் பிறகும் நீங்கள் திரும்பத் திரும்பக் கேட்டால் என்ன அர்த்தம்? என்ன திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் போடப்பட்ட வைப்பு நிதிகள் முறையாக வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே குற்றம் சாட்டினார்கள். கூட்டுறவுச் சங்கங்களில், வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருந்த தொகைகளில் எவ்வளவு தொகை வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருந்தாலும், ஒரு நேரத்தில் 20,000 ரூபாய்க்கு மேல் திரும்ப வழங்கப்படாது என்கிற அரசாணை ஏதாவது கடந்த ஆட்சியின்போது பிறப்பிக்கப்பட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, டெபாசிட்தாரர்கள் யார் யாருக்கெல்லாம் எந்தெந்த கூட்டுறவு வங்கிகள் தரவில்லையோ, அதைச் சொன்னால் நாங்கள் தருவோம் என்று இங்கே சொல்லியிருக்கின்றார்கள். என்னுடைய திண்டிவனம் தொகுதியிலே ஆலகாம் சொசைட்டியிலே டெபாசிட்தாரர்களுக்குத் தராதது மட்டும் அல்ல; கரும்பு விவசாயிகள் போட்ட கரும்புக்கு ஆலைக்காரர்கள் பணம் கட்டி விட்டார்கள். அந்தக் கூட்டுறவு வங்கியிலே அது கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஓராண்டு காலமாக அந்தப் பணத்தை அந்த சொசைட்டியிலே, இதுவரைக்கும்—அவர்களுடைய கடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அவர்களது கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான பத்திரமும் நீங்கள் கொடுத்துவிட்டீர்கள்—ஆனால், ஆலை அதிபர்கள் கட்டிய பணத்தை இன்றுவரை, ஓராண்டு காலமாக அந்த சொசைட்டியிலே

கொடுக்கவில்லை. இப்படி விழுப்புரம் மாவட்டத்திலே பல்வேறு கூட்டுறவு வங்கிகளிலே பணம் கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு 2006 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி பொறுப்பேற்றது. அரசாங்க ஆணை என்ன சொல்கிறதென்று சொன்னால், 31-3-2006 வரை கடன் பெற்றவர்களுக்குத் தள்ளுபடி என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. 31-3-2006-க்குப் பின்னால் 13-5-2006 வரை இந்த இடைப்பட்ட 1½ மாத காலத்திலே இந்தக் கரும்பு விவசாயிகளுடைய கடன்கள் வங்கிக் கணக்கிலே வரவு செய்யப்பட்டது. அந்தப் பணத்தை விவசாயிகள் திரும்பக் கேட்டார்கள். அதற்கு அரசாங்கம் ஒரு ஆணை பிறப்பித்தது. ஆக, ஏற்கெனவே அரசாங்கமும் 31-3-2006-க்கு முன்னால் இருக்கிற விவசாயிகளுக்குத்தான் சலுகை என்ற அறிவித்துவிட்ட காரணத்தினால், இந்த 1½ மாத காலத்திலே கரும்பு விவசாயிகளுடைய பணம் பின்னால் வந்த காரணத்தினால், வைப்புத் தொகையாக அதைக் கணக்கெடுத்து அவர்களுக்கெல்லாம் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. அது முதிர்வடைந்தவுடனேயே அதற்குரிய பணத்தை இந்த அரசாங்கம் கட்டாயம் தரும். (குறுக்கீடு)

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் அரசுக்குச் சாதகமான ஒரு பதிலை இங்கே சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், உண்மையில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் உண்மை. (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உட்காரச் சொல்லுங்கள், இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் எப்படிங்க?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள். உங்கள் நேரம் போகிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எங்களது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் ஓலை வந்து கொண்டே இருக்கிறது. அதில் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். புதுக்கோட்டை மாவட்டம், நம்மம்பட்டி, 108-கவரப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் டெபாசிட் செய்த ப. தங்கவேலு என்பவருக்கு ரூ.20,000/-மும், அவர் திரும்பவும் டெபாசிட் செய்த ரூ.10,000/-மும், ஆறுமுகம் என்பவருக்கு ரூ.15,000/-மும் முதிர்வுற்ற காலம் முடிந்தும் இன்னும் அவர்களுக்கு டெபாசிட் பணம் தரப்படவில்லை. இதைப்போல நிறைய கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறீர்கள், டெபாசிட்தாரர்களுக்குக் காலதாமதமில்லாமல் தரப்படும் என்று. தந்தால் நன்றி, வாழ்த்துகள்.

10,500 கோடி ரூபாய் என்ற அளவில் டெபாசிட்தாரர்களின் பணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் இருக்கின்றது என்ற தகவலையும் இங்கே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 10,500 கோடி ரூபாய் டெபாசிட்தாரர்கள் பணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் இருந்தால், கூட்டுறவுத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்களே ஊழியர்கள், கடந்த ஏழு மாதங்களாக அவர்களுக்குச் சம்பளம் ஏன் போடப்படவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலையில்தான் கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்லி இந்த அளவில் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றேன்.

இன்றைக்கு அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளினுடைய நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக, வரும் நிதி ஆண்டில் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்மூலமாக 100 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்படும் என்ற அறிவிப்பு வந்திருக்கின்றது. சுமார் 45,000 கோடி ரூபாய் அளவிற்குத் தயாரிக்கப்பட்டிருக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாயை ஒதுக்கி இருப்பது எந்தவகையில் நியாயம் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான்கு கோடி பேருக்கு மேலாக விவசாயத் தொழிலில், 65 சதவீதத்திற்கு மேலான மக்கள் ஈடுபட்டிருக்கின்ற தமிழகத்தில், 100 கோடி ரூபாய் கடனுதவி என்பது பத்தாத நிதியாகத்தான் இருக்கின்றது என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

227562
சென்னை-600 009

மேலும், 10 இலட்சம் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு செய்துகொள்ள நிதி உதவி அளிக்கப்படும் என்றும், அதற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும் இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்து இருக்கின்றது. 10 இலட்சம் விவசாயிகள் என்பது ஒரு சதவிகிதம் அளவுகூட இல்லை. 100 சதவிகிதம் கொண்ட விவசாயப் பெருமக்களில் ஒரு சதவிகிதம் பேருக்குமட்டும் பயிர்க் காப்பீடு அளித்தால், 99 சதவிகிதம் இருக்கின்ற விவசாயிகளுக்கு யார் காப்பீடு வழங்குவது என்ற கேள்வி எழுகிறது. அந்த நிலையை இந்த அரசு உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல விவசாயத் துறையை வலுப்படுத்த வேண்டுமென்றால், உழவர்களுக்குப் போதுமான அளவிற்குக் கடன் கொடுக்க வேண்டும். அவர்களுடைய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, 7 சதவிகிதமாக இருந்த வட்டி 5 விழுக்காடாக குறைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் 14 விழுக்காடு வட்டி என்பதனை 9 விழுக்காடாக மாண்புமிகு அம்மா அவர்கள் குறைத்து (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுடைய துயரைத் துடைத்தார்கள். ஆனால், கடந்த ஆண்டு 9 விழுக்காடு வட்டியை 7 விழுக்காடாகக் குறைத்தோம் என்று சொல்லுகின்ற தமிழக அரசு, நீங்களாக அந்த இரண்டு சதவிகித வட்டியைக் குறைக்கவில்லை. மத்திய அரசு ஒரு மானியத்தின்மூலமாகக் குறைத்தது. அதைத்தான் நீங்கள் குறைத்ததாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளிலே தரப்பட்ட கடன்களுக்கு 9 விழுக்காடு வட்டி என்பதைக் குறைப்பதற்கு மத்திய அரசு ஒத்துக்கொள்ளவில்லை. மத்திய அரசின் நிதித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அந்த வட்டிக் குறைப்பு என்பது, மற்ற மத்திய வங்கிகளுக்குத்தான், மத்திய அரசு சார்புடைய வங்கிகளுக்குத்தான் பொருந்தும் என்று கூறி, இதை முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் 9 விழுக்காடு வட்டியைக் குறைக்க ஒப்புக் கொள்ளாத



நிலையில், கூட்டுறவு வங்கிகளுக்காக மட்டும், தமிழக மாநில அரசு, நம்முடைய நிதியிலேயிருந்து, 9 விழுக்காட்டை 7 விழுக்காடாகக் குறைத்துக் கொள்வதற்கு முதலில் நாம் ஆணையிட்டோம். பின்னர் மத்திய அரசு, சில திங்களுக்குப் பின்னர், கூட்டுறவு வங்கிகளுக்கும், அந்த 7 விழுக்காடு அளவிற்கு வட்டியைக் குறைத்துக்கொள்ள அனுமதி வழங்கினார்கள். அப்படி, கூட்டுறவு வங்கிகளுக்கு, அவர்கள் 7 விழுக்காட்டிற்கு அனுமதி வழங்கியதற்குப் பின்னர், மாநில அரசு முன்கூட்டியே 2 விழுக்காடு குறைத்து அறிவித்ததன் காரணமாக உள்ள பலனையும் விவசாயிகள் பெறவேண்டும் என்பதற்காக, சற்று வித்தியாசமான ஒரு முறையில், யார் யார் குறித்த காலத்தில் கட்டணம் செலுத்துகிறார்களோ, அவர்கள் 7 விழுக்காடு வட்டிக்குப் பதிலாக, 5 விழுக்காடு வட்டி செலுத்தினால் போதுமென்று அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இது விவசாயிகளுக்குக் கிடைத்த double advantage. மத்திய அரசு, ஒரே காலத்தில் அறிவிக்காத காரணத்தால், மாநில அரசு பொறுப்பெடுத்துக்கொண்டு, அந்த 7 விழுக்காட்டை அறிவித்து, பின்னர் மத்திய அரசு ஒப்புக்கொண்ட காலத்தில், வட்டியை 5 விழுக்காடாகக் குறைத்து, இன்னாருக்குத்தான் அந்த 5 விழுக்காடு பயன் என்று ஒரு condition அல்லது ஒரு விதியையும் நிர்ணயித்து அரசு அறிவித்திருக்கிறது. ஆக மாநில அரசு, இடையிலே அந்த 2 விழுக்காட்டைத் தனக்கு இலாபமாகப் பயன்படுத்திக் கொள்ளாமல், அத்தொகை மறுபடியும் விவசாயிகளுக்கே போய்ச் சேருவதற்கு வழி வகுத்தது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தை இங்கே தந்தார்கள். காலநேரத்திற்குள் செலுத்துகின்ற விவசாயிகளுக்கு மட்டும் அந்த 2 சதவிகித வட்டி, ஆதாயமாக வழங்கப்படும் என்ற கருத்தினை இங்கே சொல்லியிருக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். ஏன் அந்த இரண்டு சதவிகித வட்டியைக் கடன் பெறுகிற அனைத்து விவசாயிகளுக்கும் கொடுக்க முடியாது? கொடுக்க வேண்டும் என்ற கருத்தினை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அரசாங்கம் அதன் நிதியை ஏமாந்து கொடுத்துக்கொண்டிருக்கக்கூடாது. அரசாங்கம் என்பதை எங்களுக்குப் பின்னால் வருகிறவர்களும்—யாரோனும் ஆட்சிக்கு வரலாம். அவர்களும்—தொடர்ந்து நடத்த

[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 மார்ச் 30

வேண்டும். அப்படிக் கருதாமல், நாங்கள் 5 விழுக்காடாக்கி, நீங்கள் 3 விழுக்காடாக்கி, பின்னர் ஒரு விழுக்காடு வட்டி வராமல், co-operative இயக்கமே நசிந்துபோக அனுமதிக்கக்கூடாது. ஆகவேதான், அது ஒரு incentive முறையாக, 5 விழுக்காடு விகிதத்தை, அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக வழங்கியிருக்கிறோம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, ஏற்கெனவே பலமுறை இங்கே பேசி விவாதிக்கப்பட்டிருக்கின்ற ஒன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு பதிலை இங்கே பதிவு செய்திருக்கின்றார்கள். மீண்டும் நான் இதை இங்கே சொல்வதற்குக் காரணம், இந்த நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம், இலவசமாக வழங்கப்படும் என்பதனை நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்கள். கேட்டால், "நீங்கள்தானே சொன்னீர்கள், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது என்று'' என்ற அந்தப் பதிலையே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை வந்த அதே நேரத்திலே, மாண்புமிகு அம்மா அவர்கள், "50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் அரசிடம் இல்லை. அரசு நிலம் 50 இலட்சம் ஏக்கர் இருந்தால்தானே நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்க முடியும்'' என்ற தகவலையும் அந்த நேரத்திலே சொன்னார்கள். "இல்லை, இல்லை. நாங்கள் வந்தால் உறுதியாகத் தருவோம்" என்று சொன்னீர்கள். அதற்குப் பின்னால் பல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அப்பொழுது திரு. பொன்னையன் அவர்கள் நிதியமைச்சராக இருந்தார் என்பதையாவது ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகின்றேன். ஏனென்றால், நிதிநிலை அறிக்கையில், அ.தி.மு.க. ஆட்சியினுடைய நிதிநிலை அறிக்கையில், திரு. பொன்னையன் அவர்கள் இந்த அவையிலே வைத்த அந்த அறிக்கையில், 50 இலட்சம் ஏக்கர், அதாவது 25 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலம் இருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார். அதைத்தான் நான் குறிப்பிட்டேனே தவிர, வேறல்ல.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....



2007 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சும்மா, நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, இல்லை. பேப்பரிலே இருக்கிறது.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தெளிவான விவரம் சொன்ன பிறகும், திரும்பவும் அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருந்தீர்கள் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகிறபோது—இது முரசொலியிலே வந்திருக்கிறது, 11-4-2005-ல். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை—தமிழ்நாட்டில் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் கணக்கெடுக்கப்பட்டு, அவை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தபோதுதான் தி.மு.க. ஆட்சி முடிவுற்றது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, தி.மு.க. ஆட்சியில் இந்தக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பத்திரிகை எந்தத் தேதியிலே வந்தது என்பதை அவர் பார்த்தால் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அந்தப் பத்திரிகையை முதலில் கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** 55 இலட்சம் ஏக்கர் என்று பேச்சில், உரையாடலில் வருகின்ற அளவுக்கு பட்ஜெட்டிலே இருந்து, அது விவாதிக்கப்பட்ட காரணத்தால், அந்த அடிப்படையில் பேசப்பட்ட பேச்சு (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) நான் பேசிக்கொண்டிருக்கிறேன், தயவுசெய்து நான் பேசி முடித்தபின்னர் யார் வேண்டுமானாலும் எழுந்து பேசுவதைப்பற்றி எனக்குத் தடையில்லை. குறுக்கிட்டுப் பேசுவதன் மூலமாக என்னுடைய பேச்சைத் தடுத்துவிட தயவுசெய்து எண்ணாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன், அமைச்சர் எழுந்து பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் அதிகமாகப் பேசுகிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் செங்கோட்டையன் அவர்கள் வாசகத்தையே தவறாகப் படித்திருக்கின்றார். நான் பேசியது, முரசொலியிலே வந்திருப்பது—அதற்குப் பிறகு இந்த ஆட்சி வந்தது—"முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள்—பத்திரிகையிலே இருக்கின்றது, படிக்கிறேன்" சட்டசபையிலே சொன்னார். இந்த 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை நாங்கள் மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னார். ஆனால், எந்த மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று நினைத்தார்கள் என்றால், நான்கே நான்கு முதலாளிகளுக்கு, பணக்காரர்களுக்கு இந்த 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தைப் பிரித்துக் கொடுக்கத் திட்டமிட்டார்கள். நல்லவேளை, தேர்தல் வந்துவிட்டது. ஆட்சி மாறப்போகிறது, அப்படி மாறினால் நான்கு முதலாளிகளுக்கு அவற்றைக் கொடுக்காமல், ஏழையெளிய, நிலமில்லாத உழவர்களுக்கு அந்த 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை... (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இன்னும் படிக்கவேயில்லை. (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. செங்கோட்டையன், போதும், உட்காருங்கள், உட்காருங்கள். முதல்வர் தெளிவாகச் சொல்லிவிட்டார். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள் சார் (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே ஒவ்வொரு கட்சிக்கும் நேரம் ஒதுக்கி, இன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒன்றரை மணி நேரம் பேசவேண்டும் என்று நீங்கள் நேரத்தை ஒதுக்கித் தந்தீர்கள். அதற்குப் பிறகு நம்முடைய நிதியமைச்சர் பதில் சொல்லவேண்டும். இன்று நிதி ஒதுக்கீட்டிற்கான வாக்கெடுப்பும் நடத்தவேண்டும். அது ஒன்றரை மணிக்குள்ளாக முடிக்கவேண்டும். எனவே, இதையெல்லாம் மனதிலே கொண்டு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தயவு செய்து, ஒன்றரை மணி நேரம் வரையில் பேசி முடித்து, அதற்குப் பிறகு நிதியமைச்சர் பேசுவதற்கு நீங்கள் அனுமதி தந்தால்தான் இன்றைய நடவடிக்கைகள் குறித்த காலத்திலே முடிவடையும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு Guillotine time என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். நான் பேசிக்கொண்டிருக்கிறேன் அல்லவா? முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Guillotine time தெரியும் அல்லவா? அதனால் நான் சொல்கிறேன், தேவையில்லாமல் குறுக்கீடு செய்யாதீர்கள், துணைத் தலைவர், சீக்கிரம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) இந்த நேரம் முழுவதும் உங்கள் நேரத்திலேயிருந்துதான் எடுக்கப்படும். அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள் நீங்கள். அனுமதி இல்லை, உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். No, no, no. Not allowed. எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள் (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் அமைதியாக இருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசக்கூடிய கருத்தைச் சொல்லுங்கள். உங்கள் நேரம் போகிறது. He is taking your time. அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) He is taking your time. நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) No, not allowed. உட்காருங்கள். நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். அனாவசியமாக இடையிலே இருக்கிறவர்கள் குறுக்கிடாதீர்கள். இது அவருடைய நேரத்தில்தான் கழிக்கப்படும். அதனாலே யாருக்கும் அனுமதி கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) நீங்கள் முதலிலே அந்தப் பத்திரிகையை என்னிடம் காண்பித்துவிட்டுப் படித்திருக்கவேண்டும். தெரியுமா? அதுதான் மரபு. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது ஒரேயொரு கேள்விதான். இந்த 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாக அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கையிலே அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது உண்டா, இல்லையா? ஒரு ஆட்சியினுடைய, அதிகாரபூர்வமான, நிதியமைச்சர் படித்தளித்த, நிதிநிலை அறிக்கையை நாங்கள் நம்புவதா, இல்லையா? (குறுக்கீடுகள்) அதை நம்பித்தான், அந்த ஆட்சியாளர்கள் அளித்த நிதிநிலை அறிக்கை உண்மை என்று நம்பித்தான், நாங்கள் விவசாயிகளுக்கு வாக்குறுதி அளித்தோம். அதற்குப் பிறகு பார்த்தால் அதிகாரிகள் அளந்து பார்த்து, அமைச்சர்கள் சென்று பார்த்து, ரெவின்யூ இலாகா ஆராய்ந்து, அவ்வளவு நிலங்கள் இல்லை, அந்தக் கணக்கு தவறு என்று சொன்னபிறகுதான், இருக்கிற நிலத்தைப் பகிர்ந்து அளிப்போம் என்ற முறையிலே இப்போது அளித்துக்கொண்டிருக்கின்றோம். அதுதான் உண்மையேதவிர, நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் வெளியிட்ட அந்தக் குறிப்பை நீங்களும் மறுத்துப் பயனில்லை, நானும் அதை வேண்டுமென்றே மறுக்கவில்லை. உண்மையைத்தான் சொல்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள். திரு. பாண்டுரங்கன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்குக் கட்டுப்பட்டு நடங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாங்கள் மறுக்கவில்லை என்ற கருத்தினை இங்கே பதிவு செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கை வந்தவுடனே மறுத்தார்கள் என்பது உண்மை என்பதை மட்டும் இந்த அளவில் சொல்லி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கை வந்தவுடன், அ.தி.மு.க.-வினுடைய தலைவர் மறுத்தார் என்பதிலே எங்களுக்கு ஒன்றும் மாறுபாடு இல்லை. நாங்கள் சொல்வது, அந்தக் கருத்து, நிதிநிலை அறிக்கையை அடிப்படையாக வைத்து திராவிட முன்னேற்றக் கழகம்



தெரிவித்த கருத்து. நிதிநிலை அறிக்கையை ஒரு ஆதாரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று நீங்கள் கருத மாட்டீர்கள். நான் தருகின்ற நிதிநிலை அறிக்கையை அப்படி நீங்கள் ஆதாரமாக எடுத்துக்கொண்டு வாதாடலாம். எனவே, நீங்கள் தந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் நம்பி அந்த அறிவிப்பைச் செய்தது எங்களுடைய தவறாக இருக்கலாம். ஆனால், உங்களை நம்பியது தவறு என்பதை நாங்கள் பின்னால்தான் உணர்ந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, "அடடா, இந்தத் திட்டம் தோல்வியடைந்தது" என்று மனதளவிலே நினைத்துக்கொண்டுதான் "கையளவு நிலமாவது கொடுப்பேன்" என்று சொல்லி, 77,117 ஏக்கர் தரிசு நிலம், 71,755 ஏழை விவசாயிகளுக்குத் தரப்பட்டிருப்பதாக, இங்கே நிதிநிலை அறிக்கையிலே செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், அந்த 77,117 ஏக்கர் தரிசு நிலத்தில், விவசாயிகளுக்குச் சொந்தமாக இருந்த நிலம் எவ்வளவு, ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலம் எவ்வளவு, அரசு எடுத்து சீர்படுத்திய நிலம் எவ்வளவு, ஏற்கெனவே விவசாயிகள் செம்மைப்படுத்தி பயிர் செய்து வந்த நிலம் எவ்வளவு என்ற விவரத்தை இங்கே அரசு அளிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்ததாக, நம்முடைய பொது விநியோக முறையில் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-20

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவரங்களை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்ட காரணத்தினால், பின்னர் நான் விடை சொல்கிறபோது, பல செய்திகள் இதில் மறந்து விடும் என்ற காரணத்தால், இப்பொழுதே சொல்லிவிட விரும்புகிறேன். 17-9-2006 அன்று இத்திட்டம் முதற்கட்டமாக தொடங்கப்பட்ட போது, தமிழகம் முழுவதிலும் 25,282 ஏக்கர் நிலம் 24,358 குடும்பங்களுக்குப் பல்வேறு மாவட்டங்களில் வழங்கப்பட்டன. 17-12-2006 அன்று இத்திட்டத்தின்கீழ் இரண்டாவது கட்டமாக நிலம் வழங்கப்பட்டபோது, தமிழகம் முழுவதிலும் 25,806 ஏக்கர் நிலம் 26,749 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. 17-3-2007 அன்று இத்திட்டத்தின்கீழ் மூன்றாவது கட்டமாக நிலம் வழங்கப்பட்டபோது,

தமிழகம் முழுவதிலும் பல்வேறு மாவட்டங்களில் 26,030 ஏக்கர் நிலம் 20,648 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. ஆக மொத்தம், 77,118 ஏக்கர் 71,755 குடும்பங்களுக்கு, ஆங்காங்கே நிலம் இருந்த அந்த அளவு அடிப்படையில்—நிலம் ஒரே இடத்தில் சேர்ந்தாற்போல் இருப்பதும் அல்ல; மொத்தத்தை வகுத்துக் கொடுக்கிற அந்த முறையில் பிரிக்கவும் முடியாது—நிலம் ஓர் ஏக்கர், இரண்டு ஏக்கர், 7 ஏக்கர், 30 ஏக்கர் என்று பல்வேறு வகையில் ஆங்காங்கே உள்ள நிலத்தைப் பண்படுத்திக் கொடுத்த முறையில், நிலம் அவர்களுடைய சொந்த நிலமாக இருந்தால், அந்த நிலத்தைப் பண்படுத்தி அவர்களுக்கே வழங்கப்பட்டது. அரசு நிலமாக இருந்த நிலம் அல்லது அரசு, விலைக்கு வாங்கித் தாக்கூடியது போன்ற பட்டா நிலங்களாக வழங்கக்கூடிய நிலம், அவாவர்களுக்கே தேவை என்று கேட்காத நிலை இருக்குமானால், அது ஏழைகளுக்கு ஆங்காங்கே பிரித்துத் தாப்பட்டது. அப்படி மொத்தம் 71,755 குடும்பங்களுக்கு இந்தப் பண்படுத்திய நிலத்தால் பயன் கிடைத்திருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், 1.88 கோடி குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்ற கணக்கு இருக்கின்றது. அந்த வகையில், வழங்கப்பட்டிருக்கின்ற குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் நாம் அரிசியை வழங்குகின்றபொழுது, அது 3.75 இலட்சம் டன் அரிசியாக இருக்கும் என்று கணக்கு சொல்கின்றது. ஆனால், மாநில அரசு 2.8 இலட்சம் டன் அரிசியைத்தான் பெற்றுவருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதிலிருந்து என்ன தெரிகின்றது? 2 ரூபாய்க்கு அரிசியைத் தந்த போதிலும், 3.75 இலட்சம் டன் அரிசியைப் பெறவேண்டிய மக்கள், 2.8 இலட்சம் டன் அரிசியைத்தான் பெறுகின்றார்கள் என்றால், அந்த அரிசி தாமுள்ள அரிசியாக இருக்குமா என்ற சந்தேகம் இன்றைக்கு வலுவாக எழுந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே மாதம் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திவிட்டு, ஜூன் மாதம் offtake எடுக்கிறபொழுது, 3 இலட்சத்து 8 ஆயிரம் மெட்ரிக் டன்கள் முதன்முதலாக வழங்கப்பட்டது. அதனுடைய தொடர்ச்சியாக, ஆங்காங்கே போலி கார்டுகள் உலவுகின்றன என்பதை



இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கண்டறிந்து, நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று, ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் இப்பணி முடுக்கி விடப்பட்டது. அதன் மூலமாக, ஒவ்வொரு கடைகளிலும் இந்த முறையற்ற அட்டைகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கெல்லாம் அரிசி கொடுக்கக்கூடாது என்று 10 சதவிகிதம், 7 சதவிகிதம் என்று ஒவ்வொரு தணிக்கையின்போதும் குறைக்கப்பட்டது. அப்படிக் குறைக்கப்பட்டதிலே, தொடர்ந்து 2,85,232 டன்கள் என்ற அடிப்படையிலே அரிசி நுகர்வுகள் ஏற்பட்டன.

அதோடு மட்டுமல்ல, தவறான முறையிலே அரிசி கடத்துபவர்களை, தொடர்ந்து இந்த அரசு கண்காணித்து புகார் பதிவு செய்து வழக்குகள் போட்டது. ஏற்கெனவே 2006 ஜனவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 5-வது மாதம் வரை நீங்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருந்தபோது 11 வழக்குகள்தான் அப்போது பதிவு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ச்சியாக இந்த 10 மாதக் காலத்திலே, காவல் துறை கடுமையாக, வேகமாக நடவடிக்கை எடுத்ததன்மூலமாக 52 வழக்குகளைப் பதிவு செய்து, குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். 5 பேர்கள்மீது குண்டர் சட்டம் பாய்ச்சப்பட்டு, அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வருடம் ஜனவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 3 மாத காலத்திலே 20 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி கட்டுப்படுத்துவதன்மூலமாக, தவறான அரிசிப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தியதன் மூலமாக, தவறான கார்டுகளைக் கண்டுபிடித்து அங்கே offtake-ஐக் குறைத்ததன் மூலமாக இந்த அரிசி நுகர்வு அளவு குறைந்திருக்கிறதேயொழிய, மக்கள் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

அதோடுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, ஆங்காங்கு, ஏதாவது தவறு நடைபெறுகிறது என்று சொன்னால், அமைச்சர் அலுவலகத்திலே அதற்கென்று ஒரு Fax வைத்து, ஒரு நேர்முக உதவியாளரை வைத்து, தவறை 48 மணி நேரத்தில் களைகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இதுவரைக்கும், எந்த எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரும் புகார் கொடுத்தது இல்லை. ஆனால், தோழமைக் கட்சி, ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்

இப்படி Fax-இலே செய்தி சொல்கிறார்கள்; 48 மணி நேரத்தில் அந்தத் தவறைக் களைகிறோம். அதை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2 ரூபாய் அரிசியை வாங்குகிற நோக்கில், ஒரு குடும்பத்திற்கு 3 ரூபாய் 50 காசு என்ற விலையிலிருந்து 2 ரூபாய்க்கு நாம் வழங்குகிறபோது, ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 30 ரூபாய், பழைய கணக்கிலிருந்து புது கணக்கிற்கு மிச்சம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அரசு கடந்த சில தினங்களுக்கு முன்பாக நுகர்வோர் பயன்படுத்துகின்ற பால் விலையை ஒரு ரூபாய் 25 காசு என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறது. சராசரியாக, ஒரு குடும்பத்திற்கு 2 குழந்தைகள் இருக்குமேயானால், ஒரு லிட்டர் பால் அவசியம் தேவைப்படுகிறது. அந்த ஒரு லிட்டர் பாலை 30 நாட்களுக்கு நாம் வாங்குகிறபோது, 37 ரூபாய் 50 காசு கூடுதலாக அந்தக் குடும்பத்திற்குச் செலவழிக்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டுவிட்டது. முதல் 10 கிலோ அரிசி, 3 ரூபாய் 50 பைசாவிற்கும், அடுத்த 10 கிலோ அரிசி, 6 ரூபாய்க்கும் வாங்க வேண்டுமென்று ஆணையிட்டபோது, எவ்வளவு விலை குறைவாக அவர்களுக்கு அரிசி கிடைத்தது என்பதைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம். (குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் எழுந்து நின்றால் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும், அவர் எழுந்து நின்றால் கொடுக்கக்கூடாதா? (குறுக்கீடுகள்) நீங்கள் எழுந்து நின்றால் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும், அவர் எழுந்து நின்றால் கொடுக்கக்கூடாதா? என்ன இது?

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் கொள்முதல் என்பது முழுக்க முழுக்க விவசாயிகளுக்கு



ஆதாரமாக இருக்கிற ஒரு சிறுதொழில். ஒரு லிட்டர் சாதாரண தண்ணீர் இப்போது 15 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால், மாடு பிடித்து, அதற்கு புல் போட்டு, (குறுக்கீடுகள்) பிண்ணாக்கு வைத்து மாட்டிலே பால் கறந்து, இப்படி விவசாயிகள் படுகின்ற கஷ்டம் மிகவும் மோசமாக இருக்கிறது. அதனாலே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், விவசாயிகளுக்குப் பால் விலையை உயர்த்திக் கொடுத்ததை எதிர்க்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி, கூட்டணி தர்மத்தை 100-க்கு 100 சரியாகச் செய்து கொண்டிருக்கிறது, வாழ்த்துகள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டணி தர்மத்தை நாங்கள் சரியாகச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போதாவது இந்த அரசு ஒரு மைனாரிட்டி அரசு என்று சொல்வதை அவர்கள் கைவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரப்போகிறதை எதிர்பார்த்து இப்போதே அது மைனாரிட்டி அரசு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பொது நுழைவுத் தேர்வை இரத்து செய்ததாக, அந்தச் சாதனையை நாங்கள்தான் செய்து முடித்திருக்கிறோம் என்ற தகவலும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களும் பிளஸ்-2 உயர்நிலைக் கல்விக்குப் பிறகு பொது நுழைவுத் தேர்வினை இரத்து செய்தார்கள். ஆனால், சில சட்ட நுணுக்கங்களினால் பொது நுழைவுத் தேர்வை இரத்து செய்து அம்மா அவர்கள் கொண்டு வந்த அந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கிற அந்தத் திட்டத்தின்மூலம், இன்றைக்குக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோமே, கல்வியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 சதவிகிதம் வேண்டுமென்று, அந்த சமூக நீதியை, நீங்கள் கொண்டுவந்திருக்கிற இந்த நுழைவுத் தேர்வு இரத்து என்ற இந்தத் திட்டத்தின்மூலமாக அடைய முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-30

98 சதவிகித மாணவர்கள், தமிழ்நாட்டில் இருக்கின்ற பாடநூல்களில் வருகின்ற இந்தப் பாடத் திட்டத்தின் வழிதான் பொதுத் தேர்வினை எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், 2 சதவிகித மாணவர்கள், கிட்டத்தட்ட 25 ஆயிரம் மாணவர்கள் என்று எண்ணுகின்றேன், அவர்கள் Central Board Syllabus, Matriculation Syllabus என்பது போன்ற மற்ற தேர்வுகளை எழுதுகின்ற மாணவர்கள். அவர்களெல்லாம் மிக வசதியோடு ஆரம்பக் கல்வியிலிருந்து நல்ல நிலையிலே படித்த மாணவர்கள். அனைவருடைய பாடத் திட்டத்தினையும் சேர்த்து, பொதுத் தேர்வு மார்க்குகளை கணக்கிலே எடுக்கின்றபோது, நம்முடைய தமிழ்நாட்டு பாடத் திட்டத்தில் எழுதுகின்ற 98 சதவிகித மாணவர்களைக் காட்டிலும், 2 சதவிகித மாணவர்கள் பெறுகின்ற மார்க்குகள் கூடுதலாக வருகின்ற ஒரு சூழ்நிலை உறுதியாக வரும். அப்பொழுது மருத்துவப் படிப்பு, தொழிற் கல்வி ஆகிய கல்லூரிகளில் நுழைகின்ற மாணவர்கள் அவர்களாகத்தான் இருப்பார்களே ஒழிய, தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்தின்படி பொதுத் தேர்வு எழுதுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை மிக, மிக, மிக, மிகக் குறைவாக இருக்கும் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எந்த அடிப்படையில் இந்தக் கருத்தைச் சொல்கின்றார் என்றே எனக்குச் சரியாக விளங்கவில்லை. குறிப்பாக, 98 சதவிகிதம் பேர் நம்முடைய syllabus-ல் பரீட்சை எழுதினாலும்கூட, standardisation என்ற ஒன்றையும் சட்டத்திலேயே சொல்லியிருக்கிறோம் அதன்படி, 2 சதவிகித மாணவர்கள் C.B.S.E. syllabus-ல் அவர்கள் எழுதுகின்றபோது, அவர்கள் 100 மார்க் உயர் மார்க்காக வாங்கியிருந்தாலும், நம் மாணவர்கள் 100 மார்க் வாங்கியிருந்தாலும், எல்லா மார்க்கும் ஒன்றாகத்தான் இருக்கும். அவர்கள் 98 சதவிகிதம வாங்கியிருந்தால், 100-ஐயும், 98-ஐயும் equal செய்து போடுகிறோம். இதுவரையிலே, பெரும்பாலும கடந்த 5, 6 ஆண்டுகளில் உள்ளதைப் பார்க்கும்போது, இரண்டு பேருக்கும் ஒரே மாதிரிதான் இருக்கிறது; அதிக வித்தியாசம் ஒன்றும் கிடையாது. அதோடு இதுவரையிலே கடந்த ஐந்தாண்டுகளிலே சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையைப்



பார்த்தீர்கள் என்றாலே, C.B.S.E. மாணவர்கள் மிக, மிக, மிகக் குறைவுதான். அவர்கள் யாரும் அதிகமாகச் சேர்வது கிடையாது. மருத்துவக் கல்லூரிகளைப் பார்த்தீர்களானால், 4, 5 பேர்கூட சேர்ந்தது கிடையாது. எனவே, இந்த 2 சதவிகிதம் பேருக்காக, 98 சதவிகிதம் பேர் Entrance Test எழுத வேண்டுமா என்பதுதான் அடிப்படையான கேள்வி. அதைத்தான் உங்களுடைய அரசிலும் சொன்னீர்கள், நாங்களும் எடுத்திருக்கிறோம். ஆகையால், இந்த இரண்டு சதவிகித மாணவர்களுக்குத்தான் கிடைக்கும் என்ற வாதம் சரியான வாதம் அல்ல. ஏனென்றால், இரண்டையும் standardisation process-ல் சுப்ரீம் கோர்ட் உத்தரவின்படி அதற்கும் இந்தச் சட்டத்தில் இடம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆக, எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது.

நீங்கள் இட ஒதுக்கீடு என்று சொன்னீர்கள். எல்லா இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையும் இதிலும் உண்டு. இப்போது என்ன செய்யப்போகிறோம் என்றால், 27.5 சதவிகிதம் எப்படி வரும் என்று நீங்கள் சொன்னீர்களே அதற்குத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) என்ன, நீங்கள் 27 சதவிகிதம் என்று சொன்னீர்களே? அதுபோன்ற பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பே கிடையாது என்று. அதையெல்லாம் கேட்டுதான், கடந்த ஆட்சிக் காலத்தில் நீங்கள் குடியரசுத் தலைவர் அவர்களுடைய கையெழுத்தை வாங்காமல், அந்த standardisation திட்டத்தையும் புகுத்தாமல் போனதால்தான், அந்தச் சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு, நீதிமன்றத்தில் அது செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். ஆக, அவர்கள் சுட்டிக்காட்டிய இவற்றையெல்லாம் இட்டு நிரப்பி, standardisation process-ஐயும் கொண்டு வந்து, குடியரசுத் தலைவர் கையெழுத்தையும் வாங்கி, உண்மையிலேயே எந்தக் காரணத்தினாலும் தடைபட்டு விடக் கூடாது என்ற உள்ளுணர்வோடு அனைவருடனும் ஆய்ந்து, ஒரு குழுவையும் நியமித்து, அவர்கள் சொன்ன கருத்துகளின் அடிப்படையிலும் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சட்டபூர்வமாக, முழுமையாக, அறிஞர்களையும் ஆலோசித்துக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டம் இது. ஆகவே, யாருக்கும் இதனால் பாதிப்பு ஏற்படாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் விளக்கத்தினைத்

தந்தார்கள். அவர்கள் மீண்டும் இதை ஆய்வு செய்யவேண்டும். தமிழ்நாட்டு பாடத் திட்டத்தின்கீழ் பொதுத் தேர்வு எழுதுகின்ற மாணவர்களைக் காட்டிலும் Central Syllabus, Matriculation Syllabus தேர்வு எழுதுகின்ற மாணவர்கள் அதிக மார்க் பெறுகின்ற சூழ்நிலை வரும் என்ற தகவல் வருகிறது. இதை ஆய்வு செய்யவேண்டும். நான் சமூக நீதி என்று சொனனது, அதிகமாக கிராமப்புறங்களில் படிக்கின்ற மாணவர்கள் நம்முடைய தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்தின்கீழ் தேர்வு எழுதுகின்றவர்கள். அவர்கள் அந்த உரிமையை இழந்துவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில்தான் சொல்கிறேன். ஆகவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதை ஆய்வு செய்து கிராமப்புறங்களில் படிக்கின்ற மாணவர்கள் அந்த உரிமையை இழந்திடாதவாறு, பொதுத் தேர்வில் அவர்கள் பெறுகின்ற மார்க்கின் அடிப்படையிலும் Central Syllabus, Matriculation Syllabus தேர்வில் அந்த மாணவர்கள் பெறுகின்ற மார்க்கின் அடிப்படையிலும் நீங்கள் ஆய்வு செய்து ஒரு நல்ல முடிவினை எடுக்கவேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-35

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் சொன்னதுபோல் இலவச கலர் டி.வி. வழங்குகின்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய இந்தத் திட்டத்தின்மூலம் ஒரு கோடி பேர்களுக்கு கலர் டி.வி. வழங்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று அரசின் சார்பாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. மிக்க சந்தோஷம். ஆனால், இன்றைக்கு அந்த நிலையில் இருந்து நாம் பார்க்கின்றபோது சன் டி.வி. போன்ற நிறுவனங்கள் அந்தச் சேனலை கட்டணச் சேனலாக மாற்றம் செய்திருக்கிறார்கள். அவர்கள் அதற்குரிய கட்டணங்களையும் உயர்த்தி இருக்கின்ற சூழ்நிலையும் தற்போது ஏற்பட்டிருக்கிறது. குறைந்தபட்சமாக ஒரு டி.வி. கனெக்ஷனுக்கு 100 ரூபாய் என்ற அளவிற்கு அவர்கள் கட்டணத்தை உயர்த்தினால் ஒரு கோடி டி.வி.க்கும் எந்த அளவிற்குப் பணம் அந்த நிறுவனத்திற்குப் போய்ச்சேரும்? அதனுடைய துணை நிறுவனமாக இருக்கின்ற சுமங்கலி கேபிள் விஷன்தான் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற பெரும்பான்மையான இணைப்புகளைப் பெற்றிருக்கின்றது. ஆகவே, நான் இந்த அரசை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வது, நீங்கள் வழங்குகின்ற கலர். டி.வி.யினுடைய நோக்கம், ஏழையெளிய மக்கள் பயன்பட வேண்டுமென்ற நோக்கம் அல்ல; அவர்கள் டி.வி.யை வாங்கி வைத்துக்கொண்டு ஒரு மாதத்திற்கு 100 ரூபாய் என்று கட்டணம்



செலுத்துகின்றபோது மூன்றே ஆண்டுகளில் அந்த டி.வி.க்குரிய முழுத் தொகையையும் கட்டவேண்டிய ஒரு சூழ்நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள், கேபிள் டி.வி.யை அரசே ஏற்று நடத்தும் என்ற திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். இந்த அரசும் கேபிள் டி.வி.யை அரசே ஏற்று நடத்தும் என்ற திட்டத்தினைக் கொண்டுவரவேண்டுமென்று நான் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு, முதலீட்டாளர்களுக்கு பல்வேறு சலுகைகளைத் தருகின்ற நேரத்தில்தான் தொழில் வளர்ச்சி சீரான முறையிலே நாட்டிலே ஏற்படுகின்ற நல்ல வாய்ப்பு இருக்கின்றது. அதிலும் குறிப்பாக இங்கே வந்து பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை முதலீடு செய்கின்ற வெளிமாநிலத்திலிருந்து வருகின்றவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்களுக்கும் தேவையான உள் கட்டமைப்பு வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, அவர்களுக்குத் தேவைப்படுகின்ற நிலம் ஆகியவற்றை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சா அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இங்கே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். கேபிள் டி.வி. என்பதை, ஏதோ சன் டி.வி., அதனுடைய நிறுவனங்கள் மட்டும்தான் நடத்துகிறது என்பதல்ல. அதை தினத் தந்தி போன்ற நிறுவனங்களும் நடத்துகின்றன. அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்களும் கேபிள் டி.வி.யை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனாலே வருமானம் சன் டி.வி.-க்குப் போவது அல்ல. யார், யார் கேபிள் டி.வி. நடத்துகிறார்களோ அவர்களுக்குத்தான் அதிகமான கட்டணம் போகிறதே தவிர சன் டி.வி.-க்கு போவது ஒரு ஐந்து சதவீதம்தான் இருக்கும். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். சன் டி.வி.-க்கு மட்டுமல்ல. (குறுக்கீடுகள்) ஏறக்குறைய 85 சேனல்கள், 100 சேனல்கள்கூட இப்போது பார்க்க முடிகிறது. அந்தச் சேனல்களுக்கு எல்லாம் கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள்தான் அதை வசூல் செய்கிறார்களே தவிர, சன் டி.வி. நிறுவனம் வசூல் செய்வதில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சென்ட்ரல் சப்ஜெக்ட், (குறுக்கீடு) அது சென்ட்ரல் சப்ஜெக்ட். (குறுக்கீடுகள்) ஸ்டேட் சப்ஜெக்டே கிடையாது அது. (குறுக்கீடுகள்) தெரியாமல் சொல்கிறீர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எந்த நிறுவனமாக இருந்தாலும் மாண்புமிகு மின் துறை அமைச்சரே சொன்னார்கள். அதிக அளவு கட்டணம் அவர்களுக்குப் போய்ச்சேர்கிறது என்று சொன்னார்கள். நாம் ஏன் அதை அனுமதிக்கவேண்டும்? அதனுடைய பலனை மக்களே அனுபவிக்கின்ற வகையில் அரசே ஏற்று நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் மிடாஸ் என்ற நிறுவனங்கள் எல்லாம் சில்லரைக் கடைகளையெல்லாம் அரசுடைமை ஆக்கிவிட்டு, மொத்தக் கடையெல்லாம் வைத்திருந்தார்களே அதையெல்லாம் அரசுடைமை ஆக்க உங்களால் முடியவில்லையே, ஏன்? அதை ஏன் செய்யவில்லை? அந்த மாதிரிதான் எல்லாம். (குறுக்கீடுகள்) பிசினஸ் வேறு. அதாவது, வியாபாரம் என்பது வேறு. அரசுடைமை ஆக்குவது என்பது வேறு, நீங்கள் மிடாஸிலே என்ன செய்தீர்கள்? (குறுக்கீடுகள்) வியாபாரம், பிசினஸ் என்பது வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.வி. நிறுவனங்களைப் பொறுத்தவரையில் கேபிள் டி.வி.-யாக இருந்தாலும் சரி, டி.வி. நடத்துவதற்கான அனுமதி வழங்குவதாக இருந்தாலும் சரி, அதை மத்திய அரசாங்கம்தான் வழங்குகிறதே தவிர, மாநில அரசிற்கும், அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. (குறுக்கீடுகள்) உங்களுடைய ஆட்சிக் காலத்திலேகூட நீங்கள் ஒரு சட்டம் கொண்டு வந்தீர்கள். ஆனால், அதை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருந்தால் அது அப்போது அமல்படுத்தப்பட்டிருக்கும். (குறுக்கீடுகள்) மாநிலத்திற்கு இல்லாத ஒரு அதிகாரத்தை நீங்களே எடுத்துக் கொண்டு, நீங்களே ஒரு சட்டம் கொண்டு வந்து, அதை எப்படியாவது அமல்படுத்த வேண்டும் என்று நினைத்தீர்கள். ஆனால், மாநிலத்திற்கு அந்த அதிகாரம் இல்லை என்பதை மட்டும் எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6,985 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க கடந்த ஓராண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருப்பதாக வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த அளவிற்கு முதலீடு வந்து சேர்வதற்கு மூல காரணம் என்ன என்பதனை நான் இந்த சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு தமிழகம் அமைதிப் பூங்கா மாநிலமாகத் திகழ்கின்ற சூழ்நிலையில் இருந்தால்தான் வெளி மாநிலங்களிலிருந்தோ, வெளிநாட்டிலிருந்தோ தொழில் முதலீட்டாளர்கள் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை இங்கே கொண்டு வந்து முதலீடு செய்வதறகு முன்வருவார்கள். அந்த வகையில்தான் 5 ஆண்டு காலம் மாண்புமிகு அம்மா அவர்கள தமிழகத்தினை ஒரு அமைதிப் பூங்கா மாநிலமாக உருவாக்கிக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலும் சரி, இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆரம்பக் காலகட்டமானாலும் சரி இன்றைக்கு நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்களே 6,985 கோடி ரூபாய் முதலீடு என்று, அந்த முதலீட்டிற்கு மூல காரணமே மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், தமிழகத்தினை மின்சாரத் தட்டுப்பாடில்லாத மாநிலமாக 5 ஆண்டு காலம் நடத்திக் காட்டினார்கள்.

வருகின்றவர்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி, மின்சார வசதி, உள் கட்டமைப்பு வசதி, சாலை வசதிகள் இப்படி அவர்களுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கின்ற நல்ல அரசாக எங்கள் அரசு இருந்த ஒரே காரணத்திற்காகத்தான் இவ்வளவு முதலீடும் இங்கே வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டும் நிதிநிலை அறிக்கை தரப்பட்டது. அந்த நிதிநிலை அறிக்கையில் பல செய்திகள் சொல்லப்பட்டன. பல செய்திகள் சொல்லப்பட்டு, அந்தத் திட்டங்கள் வரும் என்று அச்சில் இருந்தாலும் அது இதுவரை

அரங்கேறவில்லை என்பதை நான் இந்த அவைக்கு, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக "விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு விரயமின்றியும், உரிய விலை கிடைக்கும் வகையிலும் உலகத்தரம் வாய்ந்த சேகரிப்பு மையங்கள், குளிர்விக்கும் சாதனங்கள், தரம் பிரிப்பு, பதப்படுத்துதல் மற்றும் மின்னணு ஏல முறை போன்ற அனைத்து வசதிகளுடன்கூடிய மூன்று வணிக முனையங்கள் (Terminal Markets) சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய பெருநகரப் பகுதிகளில் அமைக்கப்படும்" என்றும், "இலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் வேளாண் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பை அதிகரிப்பதுடன் ஏற்றுமதிக்கும் வழிவகுக்கும்" என்றும், "அத்துடன் கோவை மாவட்டம் பல்லடத்தில் வெங்காயத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழத்திற்கும், தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைப் பழங்களுக்கும் ஏற்றுமதிக்கேற்ற வகையில் குளிர்பதன வசதிகளுடன்கூடிய விற்பனைக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்" என்றும் சொல்லியிருந்தீர்கள். இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)**

"தரிசு நிலங்களில் முந்திரி சாகுபடியை ஊக்குவித்து அதிக விளைச்சல் தரும் முந்திரி வகைகளை அறிமுகப்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்படும்" என்றும், "கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய முந்திரி விளைநில ஏற்றுமதி மண்டலத்தின் பணிகள் முந்திரி விவசாயிகளுக்கு மேலும் பலன் தரக்கூடிய வகையில் செம்மைப்படுத்தப்படும்" என்றும் சொல்லி இருந்தீர்கள். இதுவரை செம்மைப்படுத்தப்படவில்லை.

*முற்பகல் 11-45*

"கோழி மற்றும் முட்டை உற்பத்தியில் தமிழகம் அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாகத் திகழ்கின்றது. இவ்வகையில், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பறவைகளினால் ஏற்படும் நோய் குறித்த ஆய்வுக் கூடம் அமைக்கப்படுவதுடன், நாகப்பட்டினம், கரூர், விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கால்நடை நோய்கள் குறித்த நுண்ணறிவுப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்" என்று சொல்லியிருந்தீர்கள். இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.



"தொடர் மழை ஏற்படும் காலங்களில், சென்னை மாநகரில் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், கூவம், அடையாறு, கொசத்தலையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம்—அரும்பாக்கம் வடிகால், பள்ளிக்கரணை சதுப்பு நில ஏரி ஆகியவற்றின் வழியாக வெள்ள நீர் சீராகக் கடலில் கலக்க வகை செய்யும் வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூ.279.01 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்" என்று சொல்லியிருந்தீர்கள். இன்னும் ஆவன செய்யப்படவில்லை.

"திருச்சி புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள கோரையாறு, உய்யக்கொண்டான் கால்வாய், குடமுருட்டி ஆறு மற்றும் அரியாறு ஆகியவற்றில் தொடர் மழையின்போது ஏற்படும் வெள்ள நீரும், அதே சமயத்தில் காவிரியில் பெருகும் வெள்ள நீரும் சேர்ந்து எளிதில் வடிய முடியாமல் நகர்ப் பகுதிகளில் தேங்கி, பொதுமக்கள் அவதியுறும் நிலை உள்ளது" என்றும், "இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, வெள்ளம் வரும் காலங்களில் வெள்ள நீரின் பெரும் பகுதியைத் தடுத்துத் திருப்பி, தெற்கேயுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வறண்ட பகுதிகள் பயன்பெறும் வகையில், கால்வாய்கள்மூலம் ஏரிகளை நிரப்பி, எஞ்சிய உபரி நீரை அக்கினியாற்றில் கொண்டு சேர்க்கும் திட்டம் ஒன்றினை, ரூ.295 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றும் சொல்லியிருந்தீர்கள். நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். காரணம், 10 மாதங்களுக்கு முன்னாலேதான் நாங்கள் பட்ஜெட் போட்டோம். பிறகு investigation இருக்கிறது; Design இருக்கிறது; அதற்குப் பிறகு approval இருக்கிறது. இவையெல்லாம் என்னைவிட அவருக்கு நன்றாகத் தெரியும். அவர், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர். இவையெல்லாம் கடந்து இப்போது tender stage-க்கு வந்திருக்கிறது. விரைவில் tender விடப்படும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி அமைச்சர் அவர்களுக்கு. "மதுரை மாநகரில் வைகை ஆற்றினை ஒட்டியுள்ள செல்லூர் ஏரி, பரவை ஏரி, தத்தனேரி, ஆனையூர், முடக்கத்தான் குளம் ஏரிகள், அவற்றின் கால்வாய்கள் மற்றும் சாத்தியாறு ஓடை ஆகியவற்றின் வெள்ளநீரை வைகையில் வடிக்கும் வண்டியூர் குளம் மற்றும் அதைச் சார்ந்த ஏரிகள், தொடர் மழை மற்றும் வெள்ளக் காலங்களில் மதுரை மாநகரின் பல பகுதிகளை வெள்ளத்தால் பாதிப்படையச் செய்கின்றன" என்றும், "வெள்ள நீரை வடிக்கும் கால்வாய்களைத் தூர் வாரி சீரமைத்து, கரைகளை உயர்த்தி, வெள்ள நீரை வைகை ஆற்றில் சேர்க்கவும், புதிய மழை நீர் வடிகால்களை அமைக்கவும் ரூ.12 கோடி மதிப்பீட்டில் ஒரு வெள்ளப் பாதுகாப்புத் திட்டத்தை நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றும் சொல்லியிருந்தீர்கள். இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

"மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திலுள்ள 58 கிராமங்களுக்கான நீர்ப்பாசன வசதி பெறும் திட்டம் மற்றும் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள 18 ஆம் கால்வாய்த் திட்டம் ஆகியவற்றுக்கான பணிகளை முடிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளன" அதாவது சென்ற வரவு-செலவுத் திட்டத்தில்—செய்யப்பட்டுள்ளன என்று சொல்லியிருந்தீர்கள். போதிய நிதி ஒதுக்காமல் அந்தத் திட்டம் ஆமை வேகத்தில் நகர்ந்துகொண்டிருக்கின்றது.

"மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும், கள்ளத்தனமாக மணல் அள்ளுதல், பொது வினியோகத் திட்டத்தின்கீழ் வினியோகிக்கப்படும் அரிசியைக் கடத்துதல் போன்ற குற்றங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று சொல்லியிருந்தீர்கள். இது வரை யார் யார்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை—அரிசியைப் பொறுத்தவரை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்—மணலைப் பொறுத்தவரை இனிமேல்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். ஆகவே, சொல்வார் என்று நம்பி என்னுடைய உரையை தொடர்கின்றேன்.



"ஆசிரியர்களுக்கான மாறுதல்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு முறையினை அரசுத் துறைகள் அனைத்திற்கும் விரிவுபடுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது" என்று சொல்லியிருந்தீர்கள். 10 மாத காலமாக ஆலோசனை செய்துகொண்டு வருகின்றீர்கள். எப்போது உங்களுடைய தூக்கம் கலையும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த சில தினங்களுக்கு முன்பாக நான் செய்திப் பத்திரிகையில் பார்க்கின்றபோது சென்னை கமிஷனர் அலுவலகம் முன்பு, அமைச்சுப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார்கள். என்னவென்று விசாரித்தபோது, '20 வருடங்களாக நடைமுறையில் இருந்த ஒரு முறையை மீறி, முறையற்ற இடமாறுதல்களைத் தந்துகொண்டிருக்கின்றார்கள், அதைக் கண்டிக்கின்ற வகையில் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கிறோம்' என்ற தகவலை அவர்கள் சொன்னார்கள். ஆகவே, இம்மாதிரியான ஒரு சூழ்நிலை வருவதை இந்த அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் மெத்த பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-50*

"கிராமப் பகுதிகளிலே உள்ள மாணவ, மாணவியர்கள் விரைவாக வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு ஏற்ற வழிவகைகளை உருவாக்கித் தரும் நல்ல நோக்கத்துடன் ஊரகப் பகுதிகளில் பல் மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், உடல் இயக்க மருத்துவக் கல்லூரிகள் (Colleges of Physiotherapy) அமைந்திட தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்" என்று சொல்லியிருந்தீர்கள். எத்தனை பல் மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், உடல் இயக்கக் கல்லூரிகளை உருவாக்கினீர்கள் என்று தெரியவில்லை. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்குத் தக்க பதிலை, பின்பு சொல்வார்கள் என்று எண்ணி என்னுடைய உரையைத் தொடர்கின்றேன்.

"திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, கோவை மற்றும் வேலூர் ஆகிய அரசு மருத்துவமனைகளில் ரூ.23.95 கோடி செலவில் M.R.I. Scan மையங்கள் அமைக்கப்படும்" என்று சொன்னீர்கள். இதுவரை அமைக்கப்படவில்லை. "மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று தேர்தல்

அறிக்கையில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க, விழுப்புரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும்" என்று சொன்னீர்கள். இன்னும் அமைக்கப்படவில்லை. ஆனால், இந்த வருடம.... (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விழுப்புரத்திலே மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான இடம் தேர்வு செய்ய வேண்டி இருந்தது. அங்கே மெயின் ரோட்டில் இடம் கிடைப்பது பிரச்சினையாக இருந்தது. இப்போது இடம் எல்லாம் போய்ப் பார்த்து தேர்வு செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஒரு வாரம் அல்லது 10 தினங்களுக்குள்ளாக அடிக்கல் நாட்டு விழா நடைபெற இருக்கிறது. Dean, Special Officer ஆகியோரை நியமித்து, அந்த ஆஸ்பத்திரியை D.M.S.-இடமிருந்து D.M.E.-க்கு transfer பண்ணிக் கொடுத்தாகிவிட்டது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நல்ல செய்தியைச் சொல்லி இருக்கின்றார்கள், நன்றி. "தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை முன்னணி மாநிலமாக ஆக்கிட இந்த அரசு இடையறாது பாடுபடும். புதிய அரசு பொறுப்பேற்றுள்ள இந்தச் சில நாட்களுக்குள்ளாகவே மோட்டோரோலா போன்ற பெரும் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன் வந்துள்ளன" என்றும், "உற்பத்தித் துறையில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும்; தமிழகத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சர்வதேசச் சந்தையில் தரத்திலும், விலையிலும் போட்டியிடக்கூடிய அளவிற்கு மேம்படுத்தவும்; அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும்; மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் தொழில் துறையில் வளர்ச்சி அடையவும்; மாநிலத்தில் உள்ள தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளைக் கலந்தாலோசித்து ஒரு புதிய தொழில் கொள்கை நடப்பு ஆண்டிலேயே அறிவிக்கப்படும்" என்று சொல்லி இருந்தீர்கள். எந்தத் தொழில் கொள்கையும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த தொழில் கொள்கையைத்தான் அமல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு மிக்க நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



"மாநிலத்தில் சிறப்புத் தொழில் பெரு வழிச்சாலை (Industrial Corridor of Excellence) ஒன்றினை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது" என்றும், இந்தச் சிறப்புப் பெருவழிச்சாலையில், "தொழில் பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நகரியங்கள் அமைக்கப்பட்டு, அவை துறைமுகம் மற்றும் விமான நிலையங்களுடன் விரைவு நெடுஞ்சாலைகள் மற்றும் இரயில் பாதைகள் மூலம் இணைக்கப்படும்" என்றும், "இச்சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை, உலகத் தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதியுடன் அமையும்" என்றும் சொல்லியிருந்தீர்கள். எந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதியும் இதுவரை ஏற்படவில்லை.

"வேளாண்மைத் துறையில் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மருத்துவத் துறையில் பல்வேறு நோய்களுக்கு புதிய மருந்துகளைக் கண்டறியவும், பெரிதும் பயன்படும் உயிரியல் தொழில்நுட்பத் துறைக்கு உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றை இவ்வரசு அமைக்கும்" என்று சென்ற ஆண்டு சொல்லியிருந்தீர்கள். இந்த ஆண்டு வரை இன்னும் அமைக்கவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மதுரை மாநகரப் பகுதியின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, மதுரை ஆரச்சாலையின் இரண்டாவது கட்டப் பணிகள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்" என்று சொல்லி இருந்தீர்கள். இதுவரை செயல்படுத்தப்படவில்லை.

"ஊரகப் பகுதிகளில் தடையின்றித் தரமான மின்சாரம் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் நடப்பு ஆண்டில்"—அதாவது சென்ற ஆண்டில்—"ரூ.195.54 கோடி மதிப்பீட்டில் மின் பகிர்மானத் திட்டங்களை மேற்கொள்ளும்" என்றும், "இதற்காக, ஊரகப் பகுதிகளில் 25 புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் 2,706 புதிய மின் பகிர்வு மின் அழுத்த மாற்றிகள் நிறுவப்படும்" என்றும், "24 துணை மின் நிலையங்களில் மின் அழுத்த மாற்றிகளின் திறன் அதிகரிக்கப்படும்" என்றும் சொல்லி இருந்தீர்கள். எதைச் செய்து முடித்து இருக்கின்றீர்கள், எதைச் செய்யவில்லை என்ற விவரம இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மின் வாரியம் சம்பந்தப்பட்ட இந்தச் செய்திகள், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே முழுமையாக இடம் பெறாது. 2003 ஆம் ஆண்டு மின் துறைச் சட்டத்தில் விவாதமே நடத்தக்கூடாது என்று வந்திருக்கிறது. ஆனால், கடந்த ஆண்டு என்னென்ன அறிவித்தோமோ அதைவிட அதிகமாக, 60 துணை மின் நிலையங்களும், இன்னும் கிட்டத்தட்ட 4,000 transformer-களும் இந்த 10 மாதக் காலத்தில் வாங்கி பொருத்தப்பட்டு முறையாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-55

இன்னும் நமக்குத் தேவைப்படுவது 10,000 transformers, ஏனென்றால் கடந்த காலத்திலே 5 ஆண்டு காலத்திலே அதிகமான transformers புதுப்பிக்காத காரணத்தால் அத்தனையும் சேர்ந்து இப்போதுதான் இந்த அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை எடுக்கிறது. ஒரே நேரத்திலே transformers வாங்கிவிட முடியாது. அவை கடையிலே விற்பதல்ல. அந்த நிறுவனங்கள் அவற்றை உற்பத்தி செய்து கொடுக்க வேண்டும். அதற்கான முயற்சிகளிலே அரசு ஈடுபட்டு இதுவரையிலே 4,000 transformers பொருத்தப்பட்டிருக்கின்றன.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு. சென்ற ஆண்டு நிதிநிலை அறிககையில் "தமிழ்நாட்டில் உள்ள 81,787 ஊரகக் குடியிருப்புகளில் 55,149 ஊரகக் குடியிருப்புகளில், வசிப்போர் நாளொன்று ஒரு நபருக்கு 40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் பெறும் நிலை உள்ளது" என்றும், "இக்குடியிருப்புகள் அனைத்தும் மூன்று ஆண்டுகளில் முழுமையான குடிநீர் வசதி பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்" என்றும் சொல்லியிருந்தீர்கள். மூன்று ஆண்டுகளில் ஒரு ஆண்டு முடிந்து விட்டது. குடிநீர் வசதி பெறாத. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். என்னுடைய மானியக் கோரிக்கையில் அவற்றுக்கெல்லாம், எதிர்பார்த்ததைவிட அதிக அளவிற்கு விவரம் அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டு வருவதற்கு கடமைப்பட்டிருக்கின்றேன். சென்ற ஆண்டு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைக்கும், இந்த ஆண்டு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைக்கும் முரண்பாடான தகவலை அவர்கள் அச்சிலே ஏற்றியிருக்கின்றார்கள். அதாவது, மொத்த ஊரகக் குடியிருப்புகள் 81,787. ஆனால், சென்ற ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் 55,149 ஊரகக் குடியிருப்புகளில் வசிப்போர் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் பெறும் நிலை உள்ளது என்று அங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த ஆண்டு, 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 86,981 ஊரகக் குடியிருப்புகள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், 36,452 ஊரகக் குடியிருப்புகளில் தினந்தோறும் நபர் ஒன்றுக்கு சராசரியாக 40 லிட்டர் குறைவாக குடிநீர் கிடைத்து வருவதாக கண்டறியப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. சென்ற ஆண்டு 55,149 என்றும் இந்த ஆண்டு 36,452 என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதற்கும் நான் வருகிறேன். நீங்களே சொல்லியிருக்கின்றீர்கள். அதாவது இந்த ஆண்டு 7,000 ஊரகக் குடியிருப்புகளுக்குத்தான் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது என்ற தகவலையும் இந்த ஆண்டு சொல்லியிருக்கின்றீர்கள். ஆக, 36,452-ஒடு 7,000-ஐக் கூட்டினால் 43,452 தான் வரும். ஆனால், சென்ற ஆண்டே நீங்கள் 55,149 குடியிருப்புகள் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இந்த முரண்பாடு ஏன் என்பதனை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து ஆய்வு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மீதம் இருக்கின்ற ஊரகக் குடியிருப்புகளுக்கு, 3 ஆண்டுகளில் அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் தேவையான 40 லிட்டர் தண்ணீர் வழங்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள் ஆனால், ஒரு வருடம் கழிந்ததற்குப் பின்னால் இந்த ஆண்டு தந்த வரவு-செலவுத் திட்டத்தில்,

நிதிநிலை அறிக்கையில், 4 ஆண்டுகளாக அதை ஆக்கியிருக்கின்றீர்கள். சென்ற ஆண்டு சொல்லும்போது 3 ஆண்டுகள் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இந்த ஆண்டு சொல்லுகின்றபொழுது 4 ஆண்டுகள் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஒரு ஆண்டு முடிந்த பின்னால் 2 ஆண்டுகள்தான் வருமேயொழிய மீண்டும் 3 ஆண்டுகளுக்கு என்றது ஒரு ஆண்டு கூடுதலாக 4 ஆண்டுகளுக்கு என்று வருகிறது என்ற நிலை இருக்கின்றது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இந்தப் பிழை எங்கே நேர்ந்தது என்பதனையும் ஆய்வு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், "பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசால் வழங்கப்படும் ரூ.250 கோடி நிதியுதவியின்மூலம் குடிசைப் பகுதிகளில் புதிய குடியிருப்புகள் கட்டப்படும்" என்று சொல்லியிருந்தீர்கள். அதே ரூ.250 கோடியை, அதேமாதிரி, அதே அச்சிலே, இந்த நிதிநிலை அறிக்கையிலும் அச்சடித்து இருக்கின்றீர்கள். 10 மாதம் முடிந்துபோய் விட்டது. எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. எப்போது குடிசைகளுக்குப் பதிலாக வீடுகள் வரும் என்கிற ஏக்கம் குடிசையிலே வாழ்கின்ற மக்களுக்கு தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கின்றது என்பதனையும் அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

"சுனாமி நிவாரணப் பணிகளுக்கு நிதியாக மத்திய அரசுமூலம் இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் என்ற தலைப்பில் 2,347.19 கோடி ரூபாயும், உலக வங்கியின்மூலம் 1,852.74 கோடி ரூபாயும், ஆசிய வளர்ச்சி வங்கியின்மூலம் 629.64 கோடி ரூபாயும், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் 67.50 கோடி ரூபாயும் என மொத்த நிதி ஒதுக்கீடு 4,897.07 கோடி ரூபாய் ஆகும்" என்றும், "அதில் கடந்த ஆட்சிக் காலத்தில் செலவிடப்பட்ட தொகை 806 கோடியே 38 இலட்சம் ரூபாய் ஆகும்" என்றும், "அந்தத் தொகை நிவாரணப் பணிகளுக்கு மட்டும் செலவிடப்பட்டு, நிரந்தர வீடுகள் கட்டுதல், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல் போன்ற மறுசீரமைப்புப் பணிகளுக்கென எதுவும் செலவிடப்படாத நிலையில், 24-6-2006 அன்று முதலமைச்சர் அவர்கள் சுனாமினால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் நடந்தவை; நடக்க வேண்டியவை குறித்து ஆய்வு செய்தார்கள்" என்றும், "ஆய்வின் முடிவில் சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை



மேற்கொள்வதற்கென இந்த நிதியாண்டில் மேலும் ஆயிரம் கோடி ரூபாய் செலவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன" என்றும் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருந்தீர்கள். ஆயிரம் கோடி ரூபாயை செலவழித்திருக்கின்றீர்களா, அந்தச் சாதனையை நீங்கள் எட்டியிருக்கின்றீர்களா என்பதையும் நான் அறிய விரும்புகின்றேன்.

இன்னொன்று, சுனாமியைப் பொறுத்தவரையில் நிவாரண உதவிகளுக்கு மட்டும்தான் சென்ற ஆட்சிக் காலத்தில், அதாவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பணம் செலவழிக்கப்பட்டதேயொழிய, சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை என்று சென்ற நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வின்போது, அதாவது 24-6-2006-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வின்போது, 8,406 நிரந்தர வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டிருந்தது என்று சொல்லியிருக்கின்றீர்கள். சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை கடந்த ஆட்சிக் காலத்தில் செய்யவில்லை என்று நீங்களே சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் 8,406 நிரந்தர வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆகவே, இந்த முரண்பாட்டுக்கான உண்மையான காரணம் என்ன என்பதையும் நான் அறிய விரும்புகின்றேன்.

அதோடு, மத்திய அரசின் நிதியுதவி பெற்று கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். இன்னும் அந்தப் பணி முடிக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்ததாக, 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மெட்ரோ இரயில் பற்றி சொல்லப்பட்டு, அது மெல்ல, மெல்ல மெதுவாக நகர்ந்து, இந்த ஆண்டும் அதைச் சொல்லியிருக்கின்றீர்கள். 9,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 ஆண்டுகளில் முடிக்கப்படும் என்று மெட்ரோ இரயில் திட்டத்தைப் பற்றி நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். இந்த மெட்ரோ இரயில் திட்டம் நடைமுறைக்கு வந்தால் பஸ்களில் பயணம் செய்வோர் நெரிசலைச் சமாளிக்கின்ற வகையில் மட்டுமே அந்த இரயில் திட்டம் இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

ஆனால், இன்று சென்னையில் பெரும் பிரச்சினையாக இருப்பது வாகனப் போக்குவரத்துக்குத் தேவையான கட்டமைப்பு வசதி இப்போது சென்னை மாநகரிலே இல்லை. அதிலும் இரு சக்கர வாகனங்கள் பெருமளவில் அதிகரித்துக்கொண்டு வருகின்ற சூழ்நிலையில் கார், வேன், பஸ் போன்ற வாகனங்களில் அவர்கள் செல்கின்ற இடத்தை, குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இலக்கினை அடைய முடியவில்லை. அதற்குக் காரணம், மிக அதிக அளவில் பெருகிவரும் இரு சக்கர வாகனங்கள் மற்றும் ஆட்டோக்கள். உதாரணமாக, 30 கிலோ மீட்டர் தூரத்தை காரில் கடக்க 30 நிமிடங்கள் தேவைப்படும். ஆனால், இன்றைக்கு ஒரு மணி நேரம் ஆகிறது. அதற்குக் காரணம் வாகனப் போக்குவரத்து நெரிசல். இதனால் நேரம் அதிகமாகிறது; எரிபொருள் அதிகமாகிறது; மன உளைச்சல் ஏற்படுகின்றது. 100 ஆண்டுகளுக்கு முன் சாலையின் அகலம் என்ன இருந்ததோ அதேதான் சென்னையில் இன்றும் இருக்கின்றது. இனி மேலும் அகலப்படுத்த முடியாது என்ற அளவுக்கு இருபுறமும் உயர்ந்த கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அப்புறப்படுத்த முடியாத சூழ்நிலையும் இன்றைக்கு இருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை இந்த மெட்ரோ இரயில் திட்டம் தராது என்பதனை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாற்றாக, சாலையினுடைய மையப் பகுதியில் தொடர்ச்சியாக centre median-ல், இரு சக்கர வாகனங்களுக்காகவும், ஆட்டோக்களுக்காகவும் மட்டும் ஒரு elevated road-ஐப் போட்டு இரு சக்கர வாகனங்களையும், ஆட்டோக்களையும் தனியாக நாம் மேலே அனுப்பி போக்குவரத்தைச் சீர்படுத்தலாம் என்ற கருத்தினை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-05*

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 500 கோடி வீதம், 2,500 ஊராட்சிகளில், தலா ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீட்டில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று சென்ற நிதியாண்டில் சொல்லப்பட்டிருந்தது. இதுவரை அந்தப் பணிகளினுடைய முன்னேற்றம் என்ன என்பதனை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய பதிலுரையில் தந்தால் போதும்.



அதேபோல, வருகின்ற இந்த நிதியாண்டிலும் ரூபாய் 500 கோடி நிதி செலவழிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆக, இந்த நிதியாண்டிற்குள் ஆயிரம் கோடி ரூபாய், ஒவ்வொரு கிராமத்திற்கும், ஊராட்சிக்கும் தலா ரூபாய் 20 இலட்சம் என்ற அளவில் செலவழிக்கப்படுமா என்ற உத்தரவாதத்தினையும் நான் அரசிடமிருந்து எதிர்பார்க்கின்ற ஒரு சூழ்நிலையில் நின்று கொண்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு உலக வங்கியிடம் 597.17 கோடி ரூபாய் பெற்று, முதல்கட்டமாக 5 மாவட்டங்கள், அதாவது தேனி, புதுக்கோட்டை, தருமபுரி, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் எடுக்கப்பட்டு, பின்னர், ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து மாவட்ட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், வட்டம் சாராத மருத்துவமனைகள் என மொத்தம் 270 மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டு, அவற்றிற்குத் தேவையான அனைத்துக் கட்டட வசதிகள், அவசரகால ஊர்திகள், மருத்துவர் நியமனம், செவிலியர் நியமனம் போன்ற பணிகள் செய்யப்பட்டிருந்தன என்பதனைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தப் பணிகளின் செயலாக்கம் எந்த நிலையில் உள்ளது என்பதனை நான் அறிய விரும்புகின்றேன்.

அதோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயுர்வேதக் கல்லூரிக்கு நிதியொதுக்கம் செய்து, அரசாணையும் தந்தார்கள். அங்கு ஆயுர்வேதக் கல்லூரி செயல்பட இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதனையும் நான் அறிய விரும்புகின்றேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இந்த அரசு மீனவர்களுக்கு நல வாரியம் அமைக்க ஆளுநர் உரையில் அறிவித்தது என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. நல வாரியம் எப்போது அமைப்பீர்கள் என்பதும், எப்போது அது செயல்படத் துவங்கும் என்ற செய்தியும் அதில் இல்லை.

சுனாமி என்னும் ஆழிப் பேரலைகளிலிருந்து மீனவர்களைக் காப்பாற்ற, கடலோர மாவட்டங்களில் தடுப்புச் சுவர்களை நிரந்தரமாகக் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்கின்றபோது, இலங்கைக் கடற்படை மற்றும் இலங்கை மீனவர்களால் தாக்கப்படுகின்ற அவல நிலைக்கு

உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். மத்திய அரசிலும் நீங்களே ஆட்சி செய்கின்றீர்கள். ஆகவே, மத்திய அரசிடம் சொல்லி, தாக்குதல்களிலிருந்து மீனவர்களைக் காக்க, மீனவர்களின் நலன் காக்க, அவர்களை இலங்கைக் கடற்படை மற்றும் இலங்கை மீனவர்களின் அச்சுறுத்தல்களிலிருந்து காப்பாற்றி, மீனவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றும்படி நான் இந்த அரசினைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தலைவர் அவர்களே, இன்னும் எவ்வளவு நேரம் பேசலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12-10-க்குள்ளேயே உரையை முடித்தீர்கள் என்றால் சரிதான். (குறுக்கீடு) 12-10-க்கு முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 12-10-க்குள்ளே முடிக்க முடியாது. (குறுக்கீடுகள்) பல பொதுவான பிரச்சினைகளை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியதிருந்தாலும்—காவிரிப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, பாலாறு பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன—அவற்றையெல்லாம் மானியக் கோரிக்கைகள் வருகின்ற நேரத்தில் பேசிக்கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். ஏனென்றால், இன்றைக்கு 1-30 மணிக்கு கில்லட்டின் நேரம் வருகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, நிறைவாக, இந்த மாநிலத்தினுடைய நிதிநிலை குறித்து, 2007-2008 ஆம் ஆண்டுக்கான வருவாய் இனத்தில் வரவு ரூபாய் 44,532.28 கோடியாகவும், வருவாய் இனத்தில் செலவு 44,633.66 கோடி ரூபாயாகவும், வருவாய் இனத்தில் பற்றாக்குறை 101.38 கோடி ரூபாயாகவும் பட்ஜெட்டில் கணக்கிடப்பட்டுள்ளது. கடன்கள் மற்றும் முன்பணம் உள்ளிட்ட முதலீட்டு இனத்தில் செலவு ரூபாய் 7,699.18 கோடியாகவும் காட்டப்பட்டிருக்கின்றது. மொத்த நிதிப் பற்றாக்குறை ரூபாய் 7,800.56 கோடி என்று கூறப்பட்டிருக்கிறது. மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் இது 2.84 விழுக்காடு. இதையே 2005-2006 ஆம் ஆண்டுக்கான கணக்கோடு ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், அப்போது மொத்த வருவாய் இனத்தில் வரவு ரூபாய் 33,651.19 கோடி, வட்டியில்லாத செலவு ரூபாய் 31,346.52 கோடி. எனவே, ஆதார மிச்சம் ரூபாய் 2,304.67 கோடி.

பிற்பகல் 12-10

கடன்களுக்கான வட்டி முதலீடுகள், மொத்தக் கடன் வழங்குதல் ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு பார்த்தால், வருவாய் இனத்தில்



மிச்சம் ரூபாய் 1,951.33 கோடி. அதாவது வருவாய் இனத்தில் மொத்த வரவுகளில் இது 58 விழுக்காடு மிச்சம். ரூபாய் 2,250.61 கோடி மட்டுமே நிதிப் பற்றாக்குறை. அதாவது மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் இது 1.06 சதம் மட்டுமே. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே மாநிலத்தின் நிதிநிலை சிறப்பாக இருந்தது. அந்த நிதி ஆதாரத்தை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிக்கன நடவடிக்கையின் மூலமும், திறமையான நிதி நிர்வாகம் மூலமும் சேர்த்து வைத்த நிதியாதாரத்தையெல்லாம் தி.மு.க.-வினுடைய அரசு வீணான, விரயமான செலவுக்குப் பயன்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்றது. 2006-2007 ஆம் ஆண்டுக்கான உத்தேசச் செலவில் ரூபாய் 1,129.84 கோடி அடிப்படைப் பற்றாக்குறையாக காட்டப்பட்டிருக்கின்றது. வருவாய் ரூபாய்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வருவாய் ரூபாய் 40,275.19 கோடியாக இருக்கின்ற நேரத்திலும் இவ்வளவு பெரிய பற்றாக்குறை கணக்கிடப்பட்டிருக்கின்றது. 2006-2007-க்கான வருவாய் இனத்தில் செலவுப் பட்டியலில் வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் 246.62 கோடியாகவும், நிதிப் பற்றாக்குறை ரூபாய் 6,614.24 கோடியாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 2.74 விழுக்காடு. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெரும் நிதி மிச்சத்தை விட்டுச்சென்ற போதிலும் தி.மு.க. அரசு ஆட்சியின் முதல் வருடத்திலேயே தமிழக அரசினுடைய நிதிநிலை மோசமடையத் தொடங்கிவிட்ட நிலையை இது காட்டுகின்றது என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஒட்டுமொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கை குறைப் பிரசவம் ஆகப்போகும் அரைகுறைத் திட்டங்களின் தொகுப்பு; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களைக் குப்புறக் கவிழ்ப்பதோடு குழிபறிக்கவும் முயல்கின்ற குருட்டுக் குதிரைகளின் அணிவகுப்பு; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தைப் பற்றிய எதிர்கால நோக்கில்லாத குப்பை; தமிழ் மக்களின் நலன் குறித்த தொலைநோக்குப் பார்வையில்லாத சத்தை; இலவசம் என்னும் பெயரால் காட்டப்படும் செப்படி வித்தை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைத் தரைமட்டமாக்கி, அதனை இன்னும் ஒரு முறை அதலபாதாளத்தில் கிடத்தி, ஒவ்வொரு தமிழனையும் மீளமுடியாத கடனாளியாக்குகின்ற ஆயுதம்.

(மேசையைத் தட்டும் ஒலி) சாக்லெட் கொடுத்து குழந்தையின் கழுத்திலே கிடக்கின்ற தங்கச் சங்கிலியைப் பறித்ததைப் போல எங்கள் வாக்குகளை இழந்துவிட்டோம் என்றும், இதற்கு மாற்று காண்போம் என்றும் மக்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கப்புறம் நீங்கள் நேரம் தரவில்லை என்று சொல்லக்கூடாது. 1 மணி 32 நிமிடங்கள் எடுத்து இருக்கிறீர்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதி வரவு-செலவுத் திட்ட விளக்க அறிக்கையின்மீது இந்த அவையிலே நிறைவான விவாதம் நடைபெற்று இருக்கிறது. இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் 42 பேர் கடந்த நான்கு நாட்களிலேயும், இன்றையதினம் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சித் தலைவரும், நேற்றைய தினம் உரையாற்றித் தொடர்ந்த திரு. கோ.க. மணி, பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அவர்களும் சேர்த்து 44 பேர் உரையாற்றியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையின்படி நாற்பத்து நான்காயிரம் கோடி வரவு-செலவு; 44 பேர் உரையாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இப்பொழுது விடையளிப்பது அந்த 44 ஆயிரம் கோடிக்கு மேலும் 532 கோடி. அந்தப் பகுதிக்கு நான் விடையளிக்கிறேன். நேரமும் அந்த அளவுக்குத்தான் உள்ளது. எழுப்பப்பட்ட எல்லாப் பிரச்சினைகளுக்கும் முழு அளவுக்கு விடை சொல்லக்கூடிய வாய்ப்பு இப்பொழுது எனக்கில்லை. எனக்கு அந்த வாய்ப்பு இல்லாவிட்டாலும் இந்த அவையிலே உள்ள அமைச்சர்களுக்கு மானியங்களின்மீது விவாதம் நடைபெறுகிறபோது விடையளிக்கிற அந்த வாய்ப்பு நிரம்ப இருக்கிறது. அப்பொழுது அவற்றுக்கு விளக்கம் தரப்படும்.

இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தன்னுடைய விவாதத்தில், பல விளக்கங்கள் சொல்லப்பட்டும் பல கடமைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை; அவை கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டவை என்று தெரிவித்தார்கள். அவர்கள் அதிக அனுபவம் இல்லாதவர் என்று என்னால் கருத முடியாது. 10 மாத காலத்தில் நிறைவேறவில்லை, 10 மாத காலத்தில் நிறைவேறவில்லை என்று மிகுந்த வருத்தத்தோடு அவர்கள் பேசுகிறார்கள். 5 ஆண்டு

---



காலத்தில் நிறைவேறாத காரியங்கள் எவ்வளவு என்பதற்கு என்னிடத்திலே பட்டியல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

அறிவிக்கப்பட்டு நிறைவேறாத காரியங்கள் எவ்வளவு என்பது மட்டும் அல்ல. அறிவிக்கப்பட்டு அதற்கு மாறாக நடைபெற்ற காரியங்கள் எவ்வளவு என்பதும் (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதற்கு நேர்மாறாக செய்யப்பட்ட காரியங்கள் என்ன என்பதன் பட்டியலையும் நான் வைத்திருக்கிறேன். இப்பொழுது இல்லாவிட்டாலும், தொடர்ந்து இந்த அவையில் நான் அவற்றை விளக்கிப் பேச முடியும் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்த விவாதம், பொதுவாகவே, மிகுந்த தரமான வாதமாக இருந்தது. எதிர்க்கட்சியிலே இருந்துகொண்டு, ஆளுங்கட்சியை ஆதரித்துப் பேச எந்த உறுப்பினராலும் முடியாது. பேசினால் அந்தக் கட்சியிலே இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர்கள் கடுமையாக எதிர்த்துப் பேசினாலும், துணைத் தலைவர் அவர்கள் மிகக் கடுமையாகப் பேசினால்தான், அவர் மறுபடியும் முதலமைச்சராகிற வாய்ப்பு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அப்படி மிகக் கடுமையாக, அவர் கடைசியிலே கண்டித்துப் பேசினார். அவருடைய குரலிலே கடுமை இல்லாவிட்டாலும், சொற்களிலே அந்தக் கடுமை இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த விவாதத்திலே கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த நிதிநிலை அறிக்கையினுடைய நோக்கத்தை, மேலும் செம்மைப்படுத்தக்கூடிய முறையிலே பல்வேறு செய்திகளைச் சொன்னார்கள்.

குறிப்பாக, நிதிநிலை அறிக்கையைப் படித்ததற்காகவே திரு. கோ.க. மணி அவர்கள்--நான் அடைமொழிகளோடு சொல்லாததற்குக் காரணம் நேரம் இல்லாதது--பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர், பேசுகிறபோது 2½ மணி நேரம் நான் படித்ததை அவர் பாராட்டினார். அவரைப் பொறுத்தவரையில், 2½ மணி நேரம் படிப்பதுகூட, சுவையாகத்தான் இருந்தது, படிக்கிற முறை காரணமாக என்று தெரிவித்தார்கள். மற்றும் பல உறுப்பினர்கள் இந்த அறிக்கையை வரவேற்றார்கள். குறிப்பாக, சமூக நல அடிப்படையிலே உள்ள அறிக்கை இது என்பது அவர்களாலே பாராட்டி எடுத்துச் சொல்லப்பட்டது. பொது மக்களுடைய நலன்

நாடி பல அறிவிப்புகள் இந்த அறிக்கையிலே வந்திருக்கின்றன என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

நான் தெரிவிக்க விரும்புகிறேன், இந்த விவாதத்திலே கலந்துகொள்வதற்கு எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்கள் வரவில்லை. அவர் வருவதும், வராததும் அவருடைய வசதிகளைப் பொறுத்தது, எண்ணங்களைப் பொறுத்தது. ஆனால், அவரது அறிக்கையிலே தெரிவிக்கிறபோது, தமிழக சட்டப் பேரவையில் எதிர்க்கட்சிகளுக்குப் போதிய நேரம் ஒதுக்கப்படுவதில்லை. எனவே, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்கவில்லை என்று அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். அறிக்கையாக இல்லாவிட்டால், வருவது அவருடைய விருப்பம் என்றுதான் நான் கருதியிருப்பேன். அறிக்கையிலே தெரிவித்திருக்கிற காரணத்தினால், இந்த எதிர்க்கட்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரம் எவ்வளவு என்பதை நான் கணக்கிட்டுப் பார்த்தபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 3 மணி 10 நிமிடம், உறுப்பினர்கள் பேசுகிறபோது. இப்பொழுது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசியதையும் சேர்த்தால் 4 மணி 43 நிமிடங்கள், அந்த ஒரு கட்சிக்கே ஒதுக்கப்பட்டுப் பேசியிருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சி, நேற்றுவரை 3 மணி 9 நிமிடம். இன்று 47 நிமிடங்கள். பாட்டாளி மக்கள் கட்சியும் அப்படித்தான். நேற்றுவரை 1 மணி 50 நிமிடம். அப்புறம் இன்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் தொடர்ந்து பேசிய நேரம் 18 நிமிடங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். ஆக, எல்லாக் கட்சிகளுக்கும் சேர்த்து, சுமார் 18 மணி நேரம் விவாதம் நடைபெற்றிருக்கிறது.

எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தந்த அந்த இடம், அந்த நேரம், எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்த அவையிலே எப்போதும் தரப்பட்டுதான் இருக்குமே தவிர, தர மறுக்கப்பட்டதில்லை. ஆனால், அவர்கள் வந்து பேசுவதற்கு முன்னால், எனக்கு நேரம் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கேட்பதற்கு இது ஒன்றும் இரயில்வே சீட் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-20*

சட்டமன்றத்திலே நேரம் ஒதுக்கி வைக்கப்படுவது என்ற மரபு கிடையாது. சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, இயங்குகின்ற, ஒரு போக்கையொட்டி என்ன நிலைமையோ அதற்கேற்ப



நேரம் தரப்படும். இப்பொழுது எனக்குக்கூட ஒன்றரை மணி நேரம் பேசுவதற்குத் தருவதாகத்தான் பேரவைத் தலைவர் அவர்கள் முதலிலே தெரிவித்தார்கள். ஒன்றரை மணி நேரம் அளவிற்கு நான் பதில் அளிக்கலாம் என்றார்கள். ஆனால், இப்போது நேரம் இல்லை. ஒரு மணி நேரம்தான் இருக்கிறது. நேரம் என்பது நம் கையில் இல்லை. அந்த நேரமும், பல பேர்களுக்குப் பங்கிட்டுத் தருகிறபோது, ஒருவர் நினைக்கிறபடி அவருக்கு நேரத்தை ஒதுக்குவதற்கு சபாநாயகராலேகூட முடியாது. இருக்கிற நேரத்தைத்தான் பங்கிட்டுத் தரமுடியும். அந்த வாய்ப்பு தனக்கு இல்லை என்பதற்காகத்தான் நான் வரவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது எவ்வளவு தவறு என்பதை இந்த அவை உணரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் ஒன்று. இந்த நிதிநிலை அறிக்கையைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், அதேபோல பத்திரிகைகள் எல்லாம் மிகச் சிறந்த முறையிலே தலைப்பிட்டுச் செய்திகளை வெளியிட்டு இருக்கின்றன. குறிப்பாக, வரிகள் இல்லை என்பதை வரவேற்றுச் சில பத்திரிகைகள், முற்போக்கான கருத்துகளை வரவேற்றுச் சில ஏடுகள், அப்படி ஏராளமான பத்திரிகைகளிலே பொதுவாக வரவேற்கப்பட்டு இருக்கிறது.

ஒரு பத்திரிகையிலே மட்டும் ஒரு சிறப்பான வரவேற்பாக இந்த நிதிநிலை அறிக்கையிலே நாமக்கட்டிக்கும் வரி இல்லை என்பது பெரிய தலைப்பிலே வெளியிடப்பட்டுள்ளது. ஒருவேளை நாமக்கட்டி அவர்களுக்கு அதிகம் தேவையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மிகுந்த மகிழ்ச்சியோடு நாமக்கட்டிக்கும் வரி இல்லை என்று போட்டிருக்கிறார்கள். இன்னொரு தலைப்பிலே, செய்தி வெளியிடுகிறபோது, அந்த ஏட்டில், ஏதோ எதிர்க்கட்சிக்காரர்களே தலைப்பிட்டுச் சொல்வதைப்போல தலைப்பிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு மாறாக ஜன சக்தி போன்ற ஏடுகளில், தினமணி போன்ற ஏடுகளில்—'போன்ற ஏடுகள்' என்று சொல்வதற்குக் காரணம் ஏடுகள் முழுவதையும் சொல்ல நேரம் இல்லாதது—Indian Express போன்ற ஏடுகளில் இந்த நிதிநிலை அறிக்கை மற்றும் அதனுடைய பல்வேறு சிறப்பு அம்சங்கள், மிக நல்ல முறையிலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறையாக அறிவிக்கப்பட்ட தொகை ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்ட

பற்றாக்குறையைவிட அதிகமாக இருப்பதாக ஒரு தவறான கருத்து இந்த அவையில் பேசப்பட்டது. நான் அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன், இந்த 7,800 கோடி ரூபாய் அளவிற்கு உள்ள பற்றாக்குறை இந்த ஆண்டு மட்டும் ஏற்பட்ட பற்றாக்குறை அல்ல. இந்தப் பற்றாக்குறையினுடைய அளவு 2002-2003 ஆவது ஆண்டு 6,965.85 கோடி, 2003-2004 ஆவது ஆண்டில் 6,791 கோடி. அந்தப் புள்ளி 97 என்பதை எல்லாம் நான் படிக்க விரும்பவில்லை. அப்போது பற்றாக்குறை என்ன விகிதம் என்று கேட்டால் மாநில மொத்த உற்பத்தியில் 2002-2003 ஆவது ஆண்டில் 4.5 விழுக்காடு பற்றாக்குறை; 2003-2004 ஆவது ஆண்டில் 4.1 விழுக்காடு பற்றாக்குறை; 2004-2005 ஆவது ஆண்டில் 6,764 கோடி ரூபாய் பற்றாக்குறை; அது 3.8 விழுக்காடு. 2005-2006-ல் பற்றாக்குறை 6,441 கோடி ரூபாய்; மொத்தத்திலே அந்தப் பற்றாக்குறை விழுக்காடு 3.3. 2006-2007-ல் 7,231 கோடி ரூபாய் பற்றாக்குறை; மொத்தத்திலே அதன் விழுக்காடு 2.6. கடந்த ஆண்டு விழுக்காடு 3-க்குக் கீழே கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்னாலே அந்த பற்றாக்குறை விழுக்காடு 4.5, 4.1, 3.8, 3.3 என்ற அளவிலேதான் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இருந்ததாகக் கணிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 2007-2008-ல் 7,800 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்படுகிற இந்தப் பற்றாக்குறை விழுக்காடு, கணக்கிட்டுப் பார்க்கிறபோது 2.84 விழுக்காடு அளவுக்கு வருகிறது. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கை, ஏதோ அளவு கடந்து, முறையின்றிச் செலவு செய்தது காரணமாக, பெரும் பற்றாக்குறையிலே கொண்டுபோய் விட்டுவிட்ட ஒரு நிதிநிலை அறிக்கை என்ற குற்றச்சாட்டு உண்மையல்ல; புள்ளி விவரத்தின்படி அது மறுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த காலத்திலே இருந்த விழுக்காடுதான், அந்த இலக்கணத்தைக் கடந்து மூன்று விழுக்காடு அளவிற்குள் இருக்க வேண்டியது 4, 4.5 என்ற அளவுக்கு அப்போது அந்த விழுக்காடு இருந்தது.

பிற்பகல் 12-25

அதுமட்டுமல்ல, ஏதோ இந்த ஆட்சியிலே பொறுப்பற்ற முறையிலே நிதி செலவிடப்படுவதுபோல ஒரு கருத்தை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது சொன்னார்கள், அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த முறை அவர்கள் ஆட்சியில் இருந்தபோது சொன்ன குற்றச்சாட்டு என்னவென்றால், 'கஜானா காலியாக வைத்துவிட்டார்கள்; களஞ்சியமும் காலியாகிவிட்டது; எல்லாம் காலியான இடத்திலேதான் எங்களை ஆட்சியிலே வரவிட்டிருக்கிறார்கள்' என்று குறை சொன்னார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்று, ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, நிலுவையிலேயிருந்த கடன் ரூ.2,800 கோடி, தி.மு.க. மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்குக் காரணமாக இருந்த அந்தக் கடன் ரூ.2,800 கோடி. (குறுக்கீடு) ரூ.28,000 கோடி, தயவுசெய்து மன்னித்துக்கொள்ளவும். 28,000 கோடி ரூபாய். 2006-ஆவது ஆண்டிலே, அவர்கள் ஆட்சியை விட்டு நீக்கப்பட்டு, தி.மு.க. ஆட்சிக்கு வந்து, கலைஞர் மறுபடியும் ஐந்தாவது முறை முதலமைச்சராக அமர்கிறபோது, அந்த அம்மையார் நமக்குத் தந்திருக்கிற சீதனம் ரூ.56,000 கோடி கடன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முதலமைச்சர் எங்களுக்கு விட்டிருக்கிற அந்த மொத்தக் கடன் ரூ.56,000 கோடி (குறுக்கீடு) எல்லாவற்றையும் வளர்த்து வைத்துவிட்டுப் போயிருக்கிறீர்கள் என்றுதான் நான் சொல்கிறேன். ஆக, கடன் 56,000 கோடி ரூபாய். இந்த 56,000 கோடி ரூபாய் கடன் என்பதை நான் எதற்காக இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், இந்த நிதி நிருவாகம் அழிவுப் பாதையில் செல்கிறது என்று முன்னாள் முதலமைச்சர் குற்றம் சாட்டியிருக்கிறார், அவருடைய அறிக்கையிலே. எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் ஏறத்தாழ அவர்கள் சொன்னதை அப்படியே பின்பற்றி, முறையாக (மேசையைத் தட்டும் ஒலி)—தலைவர்—துணைத் தலைவர் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். ஆகவே, அது ஒன்றும் தவறில்லை—எனவே, அப்படி அவர்கள் பேசினார்கள். ஆகவே, 2007-2008 ஆம் நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தவரை, அகில இந்திய அளவிலே நிதி வரவு-செலவிலே என்ன வரம்புகள் கட்டப்பட்டிருக்கின்றனவோ, அந்த வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் இந்தப் பற்றாக்குறை இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகிறபோது, தரிசு நிலத்தைப் பற்றி விவாதம் நடைபெற்று, சில விளக்கங்களை அவர்கள் கேட்டார்கள். நான் அப்பொழுது பதில் சொன்னேன். அப்படிச் சொல்கிறபோது, படித்ததிலேகூட விட்டுப்போன ஒரு பகுதியை இப்பொழுது சொல்ல விரும்புகிறேன். எவ்வளவு நிலம், என்னென்ன வகையிலே, எந்தெந்த வகையான நிலம் வழங்கப்பட்டது என்று கேட்கப்பட்டது. ஆக்கிரமிப்பு இல்லாத, ஒப்படை செய்யக்கூடிய, அரசு புறம்போக்கு தரிசு நிலம் 1,95,000 ஏக்கர்; சிறு, குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலம் 67,000 ஏக்கர்; சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம்

7 இலட்சம் ஏக்கர் இருப்பதும் கண்டறியப்பட்டது. ஏற்கெனவே சொல்லப்பட்ட அந்தப் பெரிய அளவிலே உள்ள 55 இலட்சம் ஏக்கர் என்ற அந்த பரப்பளவு உள்ள நிலம் இல்லாவிட்டாலும், கண்டறியப்பட்ட நிலம் இவ்வளவு என்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையிலேதான் இப்போது அவற்றைப் பண்படுத்தி, வழங்குகிற அந்தக் கடமை நடைபெறுகிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே அவர்களால் அகவிலைப்படிகூட 13 மாதங்கள் காலந்தாழ்த்தி வழங்கி வந்த அந்த நிலை தற்போது மாறியுள்ளது. அதாவது, மத்திய அரசு உயர்த்துகிறபோது உடனடியாக உயர்த்தி வழங்காமல், 13 மாதங்கள் காலந்தாழ்த்தித்தான் கடந்த கால ஆட்சியிலே வழங்கப்பட்டது. தற்போது மத்திய அரசு அறிவித்துள்ள 6 விழுக்காடு அகவிலைப்படியை அதே தேதியிலிருந்து, 1-1-2007 முதல் வழங்குவதுடன் (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் ஏற்படக்கூடிய நிலுவையை ரொக்கமாகவும் வழங்குவதற்கு ஆணையிடப்பட்டிருப்பதை அரசு அலுவலர்கள் எல்லாம் வரவேற்று, பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். பல அரசு அலுவலர்கள் கடந்த கால ஆட்சியிலே அல்லல்பட்டு, தங்களுடைய பணியை இழந்து, வேலை நீக்கம் செய்யப்பட்டு, நீதிமன்றங்களுக்குச் சென்றும், மொத்தமாக உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றும் நீதி கேட்ட அந்தக் காரணத்தால், தங்களுக்கு மறுபடியும் வேலை கிடைத்து, வேலையிலே அமர்ந்து தொடர்கிற அந்த நிலையிலே உள்ள அந்த அரசு அலுவலர்களும், அவர்களுடைய சங்கங்களும் இந்த நிதிநிலை அறிக்கையை மிகப் பெரிய அளவிலே வரவேற்று பலவகையான தீர்மானங்கள்மூலமாக நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-30

அரசு தலைமைச் செயலக அலுவலர் சங்கம், அரசு தலைமைச் செயலக அடிப்படையாளர் சங்கம் மற்றும் ஓட்டுநர் சங்கம், ஆதி திராவிடர் நலப் பள்ளி ஆசிரியர்கள் உரிமைப் பாதுகாப்புச் சங்கம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி போன்ற இந்த அலுவலர் சங்கங்களைச் சார்ந்தவர்கள் எல்லாம் பாராட்டுவதற்கு மிக முக்கியமான காரணம், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அரசுப் பணியாளர்கள் எல்லாம் ஏதோ எதிர்ப்பாகவும் தங்களுடைய குறைகளை எடுத்து வைத்து போராடிக்கொண்டிருப்பதாகவும் இங்கே பேசுகிறபோது



தெரிவித்தாலும்கூட, இந்த நிர்வாகத்தில், இந்த ஆட்சியில் தங்களுடைய குறைகள் எவ்வளவு வேகமாக நிவர்த்திக்கப்படுகின்றன, அரசால் கவனிக்கப்படுகின்றன என்பதைத்தான் அவர்கள் எல்லாம் பாராட்டித் தெரிவித்திருக்கிறார்கள். அவை அமைப்புகள் என்பதன் காரணமாக, அதை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று நான் கருதுகின்றேன்.

இங்கே உரையாற்றிய நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்—பல பேர் உரையாற்றியதைப் பற்றியெல்லாம் குறிப்பு வைத்திருக்கிறேன்—இருந்தாலும் இதை அவசியம் சொல்ல வேண்டுமென்று கருதி, நான் தெரிவிக்கிறேன். ஆதி திராவிடர் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு அரசு இப்போது வழங்கியிருக்கிற நிதி போதுமானது அல்ல, இன்னும் அதிக அளவிற்கு நிதி ஒதுக்க வேண்டும்; குறிப்பாக அவர்களுடைய population, அதாவது, மக்கள் தொகைக்கேற்ற அளவிற்கு ஒதுக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை இங்கே எடுத்து வைத்தார்கள். கடந்த ஆண்டும் அவர்கள் பேசினார்கள். ஆதி திராவிட மக்களுக்காகச் செய்யப்படுகின்ற சில பணிகள் பிரித்துக் காட்டக்கூடியதாக அமைந்திருக்கின்றன; சில துறைகளுடைய பணிகள் அப்படிப் பிரித்து நிதி ஒப்படைக்கக்கூடியதாக அமைகின்றன. ஆனால், பல பணிகளில் அவர்களுக்கு அதனாலே பயன் உண்டு என்றாலும் பிரித்துக் கணக்கைக் காட்டக்கூடிய வாய்ப்பு இல்லை. அதை நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்திலுள்ள மொத்த மக்கள் தொகையான 624 இலட்சத்தில் ஆதி திராவிடர்கள் 118 இலட்சம்; 19 விழுக்காடு உள்ளனர். அவர்களுள் 70 விழுக்காடு ஆதி திராவிட மக்கள் ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர். பெரும்பாலான ஆதி திராவிடர் குடும்பங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளனர். தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக, பல்வேறு துறைகள் மூலம் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

சிறப்புக் கூறு திட்ட வழிகாட்டுதல்களின்படி மாநிலத்தின் மொத்த திட்ட ஒதுக்கீட்டில், அந்த மாநிலத்தில் வாழ்கிற ஆதி திராவிட மக்களின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்கள் தொகை 19 விழுக்காடாகும். ஆதி திராவிடர்களின் கல்வி, வீட்டு வசதி, சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை

மேம்படுத்துவதற்கான தனியான திட்டங்களை ஆதி திராவிடர் நலத் துறையே செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் பலன்கள் முழுமையாக, *100* சதவீதம், ஆதி திராவிட மக்களையே சென்றடைகின்றன. இதுதவிர, ஏனைய துறைகள், தனி நபர் சமுதாயம் மற்றும் கிராமம் அல்லது குடியிருப்புகளுக்காக நேரடியாகச் செயல்படுத்தும் திட்டங்கள் ஆகியவை அவர்களுக்கென்று அடையாளம் காட்டக்கூடிய திட்டங்களாக, Divisible pool என்று அழைக்கக்கூடிய முறையிலே அமைந்திருக்கின்றன. மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவுதல், மாநில நெடுஞ்சாலைகள் அமைத்தல், அரசு நிறுவனங்களில் முதலீடு செய்தல், நகரக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சாலைகள் மற்றும் போக்குவரத்து போன்ற திட்டங்கள் பொதுவாக அனைத்துப் பிரிவு மக்களுக்கும் பயனளிக்கும் திட்டங்களாகும். அதிலேயும் ஆதி திராவிட மக்கள் வாழ்கிற பகுதிகள் இயல்பாகவே இடம் பெறுவதுடன், அவர்களும் பயனடைகின்றனர். ஆகவே, இத்திட்டங்கள் பிரித்துக் காண இயலாத திட்டங்கள். எனவே, தமிழ்நாட்டில் பிற பொது நலத் திட்டங்கள் என்ற முறையிலே அமைகின்ற திட்டங்களும் ஏறத்தாழ 10 விழுக்காடு அளவிற்கு, அந்த மொத்தத் தொகையிலே ஆதி திராவிட மக்களுக்கு அதனுடைய பயன் கிடைக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

தமிழக அரசு ஒரு வரலாற்றுப் பாரம்பரியமாகவே 'திராவிடர்' என்ற பெயரை வைத்தே, ஆதி திராவிடரைப் பெருமையாகக் கருதுகிற அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில், ஆதி திராவிட மக்களுடைய நலனுக்காக எப்பொழுதுமே முன்னின்று பல கடமைகளைச் செய்து பழக்கப்பட்டதொரு அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேயும், இந்த அரசு, குடிசை மாற்று வாரியத் திட்டம் தொடங்கிய அந்தக் காலத்திலேயிருந்து, கை ரிக்ஷா ஒழிப்பை மேற்கொண்ட அந்தக் காலத்திலேயிருந்து, ஆதி திராவிட மக்களை உயர்த்தக்கூடிய பல பணிகளை நிறைவேற்றியிருக்கிறது. எனவே, அகில இந்திய அளவிலே, ஆதி திராவிட மக்களுக்கு எந்தவகையான பங்கீடு கிடைக்கிறதோ, அதைவிட அதிகமாகவே தமிழகத்திலே அவர்கள் உரிமையோடு, அந்தப் பலனை அடைந்து வருகிறார்கள்.

அதிலேயும் குறிப்பாக—நான் அரசியல் கண்ணோட்டத்திலேகூட இதைச் சொல்லவில்லை—குறிப்பாக, தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே



இந்த அரசு நடைபெறுகிறது என்பதற்கு அடையாளம் காட்டுவதற்கே மிக முக்கியமாக, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் கொண்டு வந்ததைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்கள் பிறருடன் சமத்துவ நிலையில் வாழ்வதற்கான எல்லா வழிகளிலும், தன்னால் முடிந்தவகையிலே எல்லாம் நிறைவேற்றி வருகிறவர் என்பதை நான் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கையில் மனிதக் கழிவை மனிதனே அள்ளும் கொடுமையை நீக்கும் வகையில் இந்தப் பணியில் ஈடுபட்ட 11,691 துப்புரவுப் பணியாளர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கும் திட்டம் ரூ.58.4 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ், இதுவரை 3,199 துப்புரவுப் பணியாளர்கள் மாற்றுத் தொழிலுக்கான நிதியுதவியைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேனும் இப்படியொன்று நிறைவேறுகிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இது மிக அவசியமான ஒன்று என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதிலேயும் குறிப்பாக, மனிதத் தன்மையை, உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கு அவர்களுக்குத் தருகிற ஓர் உயர்ந்த வாய்ப்பு இது என்பதையும் அதற்காக அரசு ஆற்றுகிற ஒரு சிறந்த கடமை என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த ஆதி திராவிட சமூகத்திற்குத் திட்டச் செலவினங்களில், தனியாகப் பிரித்துக்காட்டக்கூடிய இனங்களின்கீழ், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நலத் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு, 2006 ஆம் ஆண்டில் இருந்த ரூ.549 கோடி என்ற அந்த அளவிலிருந்து, இந்த ஆண்டு திருத்திய மதிப்பீடுகளில் ரூ.1,267 கோடியாக உயர்ந்துள்ளது. அது இந்த அரசினுடைய தனி ஈடுபாட்டைக் காட்டும். 2007-2008 ஆம் ஆண்டில், இந்த ஒதுக்கீடு ரூ.1,525 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசினுடைய திட்டங்கள் திரு. ஜெயக்குமார் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்ன அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருக்கின்றன என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றும் ஒன்றை இங்கே பேசிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டார்கள்; பல்வேறு தொழிற்சாலைகள் கடந்த கால ஆட்சியிலேயே வந்துவிட்டது போலவும், இந்த ஆட்சியிலே வருவதாகச் சொல்வதெல்லாம் அவர்கள் செய்த ஏற்பாட்டினுடைய

அடிப்படையிலே வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது முழு உண்மையல்ல. ஏதோ அடிப்படையாக எதுவுமே செய்திருக்கமுடியாது என்றும் நான் வாதாட வேண்டிய அவசியமில்லை. அரசாங்கம் என்றால், அது ஒரு தொடர்ச் சங்கிலி. ஆகவே, ஏற்கெனவே நடைபெற்ற காரியங்களுடைய நன்மை, தீமை ஆகிய இரண்டு விளைவுகளையும், இப்போது இருக்கிற அரசாங்கம் ஏற்றுச் செயல்படுத்தியாக வேண்டிய அவசியம் உண்டு. இருந்தாலும், இந்த மாநிலத்திலே கடந்த காலத்திலே, இங்கு வருவதற்கு முயன்ற எத்தனைத் தொழில்கள், வந்து, வாசற்படிவரையிலே எட்டிப்பார்த்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டன என்பது (மேசையைத் தட்டும் ஒலி) பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, மறுபடியும்கூட, தேவையானால், அரசியல் பேசுகிறபோது பேசிக் கொள்ளலாம். ஆனால், இந்த அரசு, இப்போது ஏறத்தாழ 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மோட்டோரோலா போன்ற மிகப் பெரிய பல தொழிற்சாலைகளை இங்கே கொண்டு வந்ததும், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர், தொழில் முனைவோராக இங்கே வருகின்றவர்களுக்கு, உடனடியாக அரசாங்கத்தினுடைய முடிவைத் தெரிவிக்கக்கூடிய அளவிற்கு, மாண்புமிகு முதலமைச்சரைச் சந்திக்கக்கூடிய அளவிற்கு ஒரு நல்ல வாய்ப்பு உருவாகியுள்ளதும், அதிகாரிகள் எல்லாம் முதலமைச்சருடைய ஆணையை ஏற்று, ஒருங்கிணைந்து செயல்படுகிற ஒரு தன்மை உருவாகியிருப்பதும், தொழிற்சாலை தொடங்குகிறவர்களுக்கு அடிப்படையான வசதிகளை, கட்டமைப்புகளை செய்து தருவதற்கு இந்த அரசு முன்வருவதாக அறிவித்ததும், அவர்களுடைய விண்ணப்பங்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு single window system என்ற முறையில் உடனடியாக அவர்களுக்கு எல்லாத் தரப்பு அதிகாரிகளிடமிருந்தும் கிடைக்க வேண்டிய மொத்த பதிலும் ஒரே இடத்தில் கிடைக்கும் என்று அறிவித்ததும் ஆகிய அந்த முறைகளின்மூலமாகப் பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கின்றன.

*பிற்பகல் 12-40*

கடந்த காலத்திலே வந்திருக்குமானால், அவற்றினுடைய துவக்க விழாவையாவது அந்தக் காலத்திலே அந்த முதலமைச்சரோ, மற்ற அமைச்சர்களோ நடத்தியிருப்பார்கள். துவக்க விழா நடத்தவில்லை என்பதுகூட அல்ல. அவர்கள் எல்லாம் தெரிவித்த ஒரு மிக முக்கியமான கருத்து, பெரிய தொழிற்சாலை தொடங்குவதற்குத்தான்



நாங்கள் தமிழகத்திலே முயற்சித்துப் பார்த்தோம். முதலமைச்சரையே நாங்கள் சந்திக்க முடியாத காரணத்தினால் நாங்கள் திரும்பிப் போய்விட்டோம் என்று பின்னர் வருகிறபோது தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அரசியல் பேசுவதற்கு வேறு இடம் இருக்கின்றது என்று சொன்னாலும், அரசியலைப் பேச இங்கு முனைந்து, அதிலும் தன்னுடைய ஆசையையெல்லாம் இங்கே கொட்டித் தீர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த நேரத்திலும், தொழில் முதலீட்டாளர்கள் சந்திக்க நேரம் கேட்கும்போதெல்லாம், அவர்களைச் சந்தித்து அவர்களுக்கு நேரத்தையும், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து கட்டமைப்பு வ்சதிகளையும் உறுதியளித்ததன் அடிப்படையில்தான் கடந்த காலங்களில் தொழில் முதலீட்டில் இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ்ந்தது என்பதனை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியிருந்தால் ரொம்ப மகிழ்ச்சி. ஏனென்றால், நாட்டுக்கு நல்லது நடைபெற்றால் அதனால் பயன்பெறுபவர்களில் நானும் ஒருவன்தான் என்று கருதிக்கொள்கிறவன் நான். இருந்தாலும்கூட, தொழில்கள் எல்லாம் அண்மைக் காலத்திலே வர முற்பட்டிருக்கின்றன என்பதும், தமிழகத்தை பல பெரிய தொழிலதிபர்கள் தேடி வருகிறார்கள் என்பதும், போதுமான அளவுக்கு நிலம் கிடைக்கவில்லை சில தொழில்களுக்கு என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு நிலை இன்றைக்கு உருவாகி இருக்கிறது என்பதும் நான் தெரிவிக்க விரும்புவதாகும்.

இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுகிற அந்தத் தொகை தமிழகத்தைவிட வேறு சில மாநிலங்களிலே ஏதோ அதிகம் வழங்கப்படுவதைப்போல, அவர்கள் அறிந்ததாகச் சில செய்திகள்ள இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், மூன்றாவது

மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2007-2008 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து—மாநில வரி வருவாய்களை பல தலைப்புகளில் பிரிக்கிறபோது, நேரடியாக மாநிலத்திலே வசூலிக்கப்படுகிற அந்த வரி வருவாயிலிருந்து—9 சதவிகிதம், அதாவது 2,734 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வுத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது; அதாவது devolution வரவு-செலவுத் திட்ட உரையில் விளக்கியுள்ளபடி, இத்தொகை தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களுக்கான திட்ட உதவிகள் மற்றும் ஒப்படைக்கப்பட்ட வருவாய் என்னும் உரிமையாக்கப்பட்ட வருவாய் இனங்கள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

கேரள மாநிலத்தை ஒப்பிடும்போது அங்கும் இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து 9 சதவிகிதம் நிதி பகிர்வுத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 5.5 சதவிகிதம் சொத்துக்களைப் பராமரிப்பதற்காகவும், மீதமுள்ள 3.5 சதவிகிதம் பொது நோக்க மானியமாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்காளத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையாக ரூ.350 கோடி மட்டுமே, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 278 கோடியும், ரூ.72 கோடி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நேரடி மானிய உதவியாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தமிழ்நாட்டிலே உள்ளாட்சி மன்றங்களுக்காக வழங்கப்படுகிற தொகை குறைவல்ல என்பதற்காகவும், இப்பொழுது 9 விழுக்காடு வரையில் வழங்கப்படுகிற இந்தத் தொகை அடுத்த ஆண்டுகளில் 10 விழுக்காடு தொகை வழங்கப்படக்கூடிய நிலை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

இங்கே ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. தேர்வுப் பணிக் குழு இப்பொழுது என்ன பணியாற்றிக்கொண்டிருக்கிறது என்ற கேள்வி எழுப்பப்பட்டது. கடந்த காலத்திலேதான் யாரும் வேலைக்கு எடுக்கப்படுவதில்லை என்று அறிவிக்கப்பட்டு தடைவிதிக்கப்பட்டு அது காரணமாக தமிழக அரசினுடைய தேர்வுப் பணிக் குழு—Public Service Commission—அந்தப் பணிக் குழு யாரையும் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியமே இல்லாமல் அந்தக் காலகட்டம் அமைந்துவிட்டது.



இப்பொழுது மறுபடியும் அந்தத் தடை நீக்கப்பட்டுவிட்ட காரணத்தால் உள்ளாட்சித் துறையிலே இப்பொழுது நியமிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கையை நான் சொல்கிறேன். உள்ளாட்சித் துறையிலே 12,783 பேர்; பள்ளிக் கல்வித் துறையிலே 10,237 பேர்; சமூக நலத் துறையிலே 8,600 பேர்; மக்கள் நல்வாழ்வுத் துறையிலே 3,466 பேர்; வருவாய்த் துறையிலே 1,390 பேர்; ஆதி திராவிட நலத் துறையிலே 963 பேர்; மற்ற துறைகளையும் சேர்த்து மொத்தம் 38,432 பேர் இந்த ஆட்சியிலே புதிதாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே தற்காலிக ஊழியர்களாகப் பணியிலே இருந்தவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் இருந்தது. அந்த வேண்டுகோள் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறைமூலமாக மட்டும், இடைநிலை ஆசிரியர்கள் 19,241 பேர் நிரந்தரம் செய்யப்பட்டார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் 29,292 பேர் நிரந்தரம் செய்யப்பட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம், பிற வகையின்மூலம் மொத்தம் 38,432 பணியிடங்கள் நிரப்பப்பட்டதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார்கள், அரசுப் பணியிடங்கள் மூன்று இலட்சம் காலியாக உள்ள நிலையில் அதை நிரப்புவதற்கு எப்போது நடவடிக்கை எடுப்பார் என்பதை அறிய விரும்புகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நீங்கள் பணியிடங்களை நிரப்பாமல் விட்டுவிட்டீர்கள். அதை மெல்ல மெல்ல நாங்கள் ஐந்து வருடங்களுக்குள் நிரப்பிவிடுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட புள்ளி விவரங்களோடுகூடிய விடை மாண்புமிகு உறுப்பினருக்குத் தேவையென்றால் குறிப்பிட்ட அந்த மானியத்திலே அவற்றுக்கெல்லாம் விடை அளிக்கப்படும். எனவே, பணி நிரந்தரம் செய்வது என்பதை மட்டும் பார்த்தாலே மொத்தம்

53,005 பேர் பணி நிரந்தரம் பெற்றிருக்கிறார்கள். இந்த பதில் எனக்குக் கிடைத்து சில காலம் ஆகிறது. இதிலே போக்குவரத்துத் துறையிலே மட்டும் அதுவரை 916 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பணி நிரந்தரம் செய்யப்பட்ட மருத்துவர்கள் 3,010 பேர், செவிலியர்கள் 2,636 பேர், மருந்தாளுநர்கள் 420 பேர், சுகாதாரப் பணியாளர்கள் 742 பேர். ஆகவே இந்த அரசு கடந்த காலத்தில் அரசு நிர்வாகத்திற்கு ஏற்பட்ட பல்வேறுவிதமான குந்தகமான நிலைமைகளையெல்லாம் இப்பொழுதுதான் சரி செய்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால் பள்ளிகளோ, மருத்துவமனைகளோ, உரிய தகுதியுள்ளவர்கள் பணியிலே அமர்த்தப்படாத நிலையிலேயும், உரிய அளவிற்கு ஊதியம் வழங்கப்படாத நிலையிலேயும், அவர்களுடைய பணி நிரந்தரம் என்ற நம்பிக்கை ஏற்படாத சூழலிலேயும் எந்த வகையிலேயும் தங்களுடைய கடமைகளை நிறைவாகச் செய்ய முடியாது. அது பொது நலனுக்கு எந்தவகையிலேயும் உகந்தது ஆகாது; மக்களுடைய நலனுக்கு ஏற்றது ஆகாது.

பிற்பகல் 12-50

மற்றும் ஒன்று. இந்த அவையிலே இன்று காலையிலே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம். பிற்படுத்தப்பட்டோர் நலனைப் பாதுகாப்பதற்காக, நாம் இந்த அவையில் அனைவரும் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கிற அந்தத் தீர்மானம், அகில இந்திய அளவிலேயே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கும் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு உரிமை அளிப்பதற்கும், வாழ்வளிப்பதற்கும் உரிய அடிப்படைக் கோட்பாட்டோடு தொடங்கப்பட்ட இயக்கம்தான், திராவிட இயக்கம். நீதிக் கட்சியே சமூக நீதி இயக்கம்தான். தேசியப் பாரம்பரியத்திலேகூட, சமூக நீதி இயக்கத்தினுடைய தாக்கம் ஏற்பட்டுத்தான் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், டெல்லியிலே பிரதமர் பண்டித நேரு அவர்களைப் பார்த்து, சென்னை மாநிலத்தில் 1951 ஆம் ஆண்டிலே உயர் நீதிமன்றத் தீர்ப்பாலே பிற்படுத்தப்பட்ட மக்களுடைய உரிமைக்குப் பாதிப்பு ஏற்பட்டபோது, வகுப்பு வாரி உரிமை செல்லாது என்று நீதிமன்றம் அறிவித்தபோது, அதை எதிர்த்து, அதற்கு மாற்றுவழி காண வேண்டுமென்று பண்டித நேரு அவர்களைச்



சந்தித்து அவர்களுடன் உரையாடியபோது, "அப்படி நான் செய்யமுடியாவிட்டால் என்ன செய்வது" என்பதுபோலப் பண்டித நேரு அவர்கள் கேட்க, அதற்குரிய சட்டத்தை நாடாளுமன்றத்திலே நிறைவேற்ற முடியாவிட்டால் என்ன செய்வது என்று கேட்டபோது, "தமிழ்நாட்டிலே காங்கிரஸ் இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டியிருக்கும்" என்ற கருத்தை காமராஜர் சொன்னதாக, நான் பின்னர் அவர்களிடத்திலே உரையாடுகிறபோதுகூட, அப்படிப்பட்ட கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, பண்டித நேரு அவர்களேகூட ஒப்புக்கொண்ட அந்த சமூக நீதி, இப்பொழுது மறுபடியும் தகர்க்கப்படுகிறது.

இந்த அவையிலே 1957 ஆம் ஆண்டு முதல், நான் தொடர்ந்து இல்லாவிட்டாலும்கூட, விட்டுவிட்டு 1957 ஆம் ஆண்டு முதல், எனக்கும் இந்த அவையோடு உறவு இருந்து வந்துள்ளது. 1951 ஆம் ஆண்டு நடைபெற்ற சமூக நீதிப் போராட்டத்தில் நான் ஓர் ஆசிரியராக இருந்தாலும்கூட, என்னுடைய இயக்கத் தொடர்பு காரணமாக நான் கலந்து கொண்டு, மேடைகளிலே உரையாற்றி வந்தாலும், இன்னும்கூட சமூக நீதியை எப்படியாவது ஆங்காங்கே தடுத்து நிறுத்த, அதனுடைய கழுத்தை நெரிக்க பல முயற்சிகள் இந்த நாட்டிலே தொடர்ந்து நடைபெறுவதை நான் காண்கிறேன். அடித்தட்டு மனிதன் மேலே எழுந்து வருவதை ஏற்றுக்கொள்ள மனமில்லாத ஒரு சூழ்நிலையும், மனப்பான்மையும், ஒருவிதமான மனு ஸ்மிருதியினுடைய நச்சுப் பாய்ச்சலும், விஷக் கொடுக்குத் தன்மையும் இன்றைக்கும் தொடர்கின்றன. எனவே, நான் இந்த அவையில் இந்தத் தீர்மானத்தையொட்டி, பேசுகிற ஒரு வாய்ப்பு ஏற்பட்ட காரணத்தால், கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் தீர்மானத்தில், இந்த அவையிலேயுள்ள அனைவரும் கருத்துவேறுபாடுகளைக் கடந்து ஒன்றுபட்டிருக்கக்கூடிய ஒரு நிலை உருவானதை நான் காண்கிறபோது மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக நான் நன்றி செலுத்துகிறேன்.

இங்கே பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் சுதர்சனம் அவர்கள், அதைச் சுட்டிக்காட்டினார்கள். அதிலே ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்றார்கள். அதிலே ஏதோ, கட்சிகள் வேறுபாடு என்பது காரணமாக, எந்தக் கட்சியையும் நாம் புறக்கணித்து, இந்தப் பொது நோக்கத்திற்கு அவர்களுடைய ஆதரவைப் பெறாமல் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நேற்று நடைபெற்ற கூட்டத்தில், ஒத்துழைக்குமாறு அழைப்பு விடப்பட்டது. அது கட்சிகளுடைய கூட்டணிக் கூட்டமாக

அமைந்த காரணத்தாலும், அந்தக் கூட்டத்திற்கு அழைக்கிறபோது, மாற்று அணியாக இருக்கிற காரணத்தால், அதற்கு உடன்பட்டு வருவதற்கு அவர்களுக்கு இடர்ப்பாடாக இருக்கும் என்பதாலும், அவர்கள் அழைக்கப்படாவிட்டாலும், முதலமைச்சர் என்ற முறையில் எல்லோரையும் அழைக்கிற அந்த உணர்வோடுதான் கலைஞர் அவர்கள், அந்த அறிக்கையிலே, அ.தி.மு.க. ஆதரவு, ம.தி.மு.க. ஆதரவு, தே.மு.தி.க. ஆதரவெல்லாம் இதற்குத் தேவையென்று கேட்டார்கள். முதலமைச்சர் என்ற முறையில் அவர்கள் அழைத்திருப்பார்களேயானால், எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்திருப்பார்கள். அந்த வாய்ப்பு நேற்று நிகழவில்லை. அவர்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால், மறுபடியும் முதலமைச்சர் என்ற முறையில் எல்லோரையும், எப்பொழுதும் அழைப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-55*

அதேபோல, காவிரிப் பிரச்சினையைப் பற்றி இங்கே பேசுகிறபோதும், நாமெல்லாம் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதை சுதர்சனம் அவர்கள் வலியுறுத்தினார்கள். நான் அதை வழிமொழிய விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் எல்லோரும் முக்கியமானவர்கள்தான்; சட்டமன்றமும் ஜனநாயகத்தினுடைய மிகப் பெரிய தூண்களிலே, மிக முக்கியமான ஒரு தூண். மூன்று தூண்களான சட்டமன்றம், நீதிமன்றம், நிர்வாக அமைப்பு ஆகிய இந்த மூன்று தூண்களைக் கொண்டு நடைபெறுகிற ஜனநாயகத்தில் நாம் மிக முக்கியமான இடத்தில் இருக்கிறோம். நாம் இருக்கிற இடம் மிக முக்கியமான இடமே தவிர, தனிப்பட்ட முறையில் நாம் ஒவ்வொருவரும் அவ்வளவு முக்கியமானவர்கள் அல்ல. தனிப்பட்ட முறையில் பார்த்தால் முக்கியம் நாமல்ல, நாம் சேர்ந்திருக்கிற காரணத்தாலேதான் சட்டமன்றம். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, வேறு பல கட்சிகள் என்ற அமைப்புகளோடுகூடிய சட்டமன்றம் என்ற ஒரு அமைப்பு இருக்கிற காரணத்தால்தான் ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தில் நம்முடைய முக்கியத்துவம் உயருகிறதேதவிர, தனிப்பட்ட முறையில் யாருக்கும் மிக உயர்ந்த முக்கியத்துவம், சட்டமன்றத்தைவிடப் பெரிய முக்கியத்துவம் இருக்கமுடியாது, நாடாளுமன்றத்தைவிட மிகப் பெரிய முக்கியத்துவம் எவருக்கும் இருக்கமுடியாது. இந்த மூன்று தூண்களையும் மதிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வோடுதான் நான் பேசுகிறேன் என்றாலும்கூட, நாடாளுமன்ற



உரிமை, சட்டமன்ற உரிமைதான் ஜனநாயகத்தில் தலையாய உரிமையாக இருக்கமுடியும். இந்தத் தலையாய உரிமை, சட்டமன்ற உரிமை, நாடாளுமன்ற உரிமை என்று சொல்கிறபோது, அது மக்கள் கருத்துக்குரிய மதிப்பு. சில நாடுகளிலே நாடாளுமன்றம் தீர்மானித்து, யாரை அமர்த்துகிறதோ அவர்கள்தான் நீதிபதிகளாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, நீதிமன்றத்தைவிட நீதியைப் பாதுகாக்கக்கூடிய அடிப்படையாக இருக்கிற, நாடாளுமன்ற உரிமை போற்றிக் காக்கப்படவேண்டும். அப்படிக் காக்கிறபோது, நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், நாடு, மொழி, பொது நலன் இந்த மூன்றின் அடிப்படையில் ஏற்படுகிற பிரச்சினைகளில், நம்முடைய தனிப்பட்ட உணர்வுகளைவிட நாடுதான் பெரிது, மொழிதான் பெரிது, நம்முடைய பொது நலன்தான் பெரிது என்ற அந்த உணர்வை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டுகிறேன்.

ஒருவகையிலே சொல்வதாக இருந்தால், poetic முறையிலே நான் சொல்வதாக இருந்தால், நாம் மிக மிகச் சாமானியர்கள், அண்ணா சொன்னதுபோல. நாம் ஒவ்வொருவரும் ஓர் இயக்கத்திலே இருக்கிறோம், அந்த இயக்கம் நமக்குப் பெரிது. ஆகவே, இயக்கத்தைவிட, பொது இலட்சியம், பொது மக்களுடைய நலன், நியாயங்கள், நீதிகள் அவைதான் மிக முக்கியமானவை. எனவே, அந்த முறையில் இங்கே திரு. சுதர்சனம் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல காவிரி போன்ற பிரச்சினையில் நாம் அதிகம் பேசிக் கெடுத்துவிடாமலும், தனிப்பட்ட கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன் காரணமாக பொதுக் கருத்து மங்கிப் போகாமலும், ஒட்டுமொத்தமாக, ஒன்றுபட்டு, ஒரேமாதிரி இயங்கமுடியாத நிலைமை இருந்தாலும்கூட, பொது நலனுக்கு மாறாக நாம் ஒவ்வொருவரும் எந்தவகையிலும் இயங்கி விடாமலும், மாறுபட்ட யாருக்கும் நாம் துணை போய்விடாமலும்— துரோகம் செய்துவிடாமல் என்று நான் சொல்லத் தயாராக இல்லை—வேறு யாருக்கோ துணை போய்விடாமல், அதன் காரணமாக பொது நலன் இழக்கப்படாமல், இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் துணைநிற்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அரசமைப்புச் சட்டம் மறுபடியும் திருத்தப்படவேண்டும், புதிய வடிவம் பெறவேண்டும் என்ற ஒரு கருத்து இந்த அவையிலே ஆளுங்கட்சியினாலே எடுத்துவைக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கருடைய உயர்ந்த நோக்கில் உருவான அரசியல்

சட்டத்தை மாற்றுவதா? அதிலேயா அவ்வளவு பெரிய மாற்றம் என்ற கருத்து இங்கே எழுப்பப்பட்டது. அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன், டாக்டர் அம்பேத்கர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அரசியல் சட்ட அடிப்படைதான் அரசியல் சட்டங்களுக்கே அடிப்படை. எந்த அரசியல் சட்டமாக இருந்தாலும் இந்த அடிப்படை இல்லாவிட்டால் அது அரசியல் சட்டமல்ல. எனவே, அந்த அடிப்படைகளிலே equality, fraternity, liberty என்னும் குறிக்கோளுக்காக ஏற்றுக்கொள்ளப்படுகிற ஜனநாயக, சமதர்ம சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஓர் அரசியல் சட்டமாக உருவாக்கப்பட்ட அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே எந்த மாறுபாடும் இல்லை. டாக்டர் அம்பேத்கருடைய நினைவு, அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த அடிப்படை, எந்தப் புதுச் சட்டம் வந்தாலும் அந்த அடிப்படையிலிருந்து மாறி எவரும் சட்டம் இயற்றமுடியாது. சட்டத்திற்கே அது அடிப்படை. சட்டம் என்றாலே அந்த அடிப்படைதான். ஆகவே, அம்பேத்கருக்கு எந்தவிதத்திலேயும் குறைபாடு ஏற்படக்கூடிய முறையிலேயோ, அவரை மறக்கக்கூடிய முறையிலேயோ, வேறு யாரோ நமக்கு அரசியல் சட்டம் தந்ததாக எண்ணிவிடக்கூடிய ஒரு நிலைமையோ ஏற்பட திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் இடம் தராது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கைமீது எல்லா கருத்துகளையும் நான் தெரிவிக்காவிட்டாலும், இந்த நேரத்திலே அதை வகைப்படுத்தித் தெரிவிக்க என்னால் இயலாமல் போனாலும், மறுபடியும் இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய எல்லாப் பிரச்சினைகளும் தகுந்த முறையில் அரசால் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், நிறைவேற்றப்படாத பணிகள் என்று சுட்டிக்காட்டப்பட்ட பணிகள், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பணிகள் எல்லாம் இந்த அரசாங்கத்தால் விரைந்து நிறைவேற்றப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-00*

அதேபோல, இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளில், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது அவருடைய பேச்சிலே மிகவும் சுவையாக ஒன்றைச் சொன்னார்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சென்ற கிராமத்திலே ஒரு குழந்தை அவரைப் பார்த்து, "நான்



கேட்கிறதை கலைஞர் தாத்தா வாங்கித் தருவாரா?" என்று கேட்டு, என்ன வேண்டும் என்று அவர் கேட்டபோது, "ஐஸ்கிரீம் வாங்கித் தருவாரா" என்று குழந்தை கேட்டதாக அவர்கள் சொன்னார்கள். அவர் உரைநடையிலே பேசினாலும்கூட, அவருடைய இமேஜினேஷன் ஒரு கவிஞனுடைய கண்ணோட்டத்திலே அமைவதால், அந்தக் கற்பனையிலே, அந்த அழகான செய்தியைச் சொன்னார்கள். அப்படி ஒரு குழந்தைகூட நம்பிக்கை வைத்திருக்கின்ற அளவிற்கு, கலைஞர் தாத்தா அவர்களுடைய செல்வாக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் சொல்வது சரியாக இருக்குமா, தவறா என்று எனக்குத் தெரியாது. ஒரு காலத்திலே, தாத்தா என்று மகாத்மா காந்தியைத்தான் அழைத்தார்கள். அப்போது பெரியாரையும் தாத்தா என்று அழைப்பார்கள், இப்போது அந்த இடத்தையும் கலைஞர், தாத்தாவாகவும் நிரப்புகிறார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதிலே கொஞ்சம் எனக்குப் பொறாமைதான். (சிரிப்பு) அவரைவிட என்னுடைய வயது அதிகமென்றாலும் அந்த தாத்தா என்று மக்களுடைய கண்களிலேபடுகின்ற அந்த வாய்ப்பைப் பெற்று, இன்றைக்கு ஏராளமாக பொதுநலனை நிறைவேற்றுகின்ற அந்தப் பணிகளைச் செய்கின்ற காரணத்தினால், மக்களுடைய மனதிலே அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தாத்தாவிடத்திலே யாரும் சாதாரணமாகச் சண்டை போடமாட்டார்கள். மோதிக்கொள்ள மாட்டார்கள். அது சமூகப் பழக்கம். அது இந்தச் சட்டமன்றத்திலே சாதாரணமாக நடைமுறையாகி சட்டமன்றத்தினுடைய நன்மைக்கு ஏற்றதாக அமையும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இங்கே திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது பல நல்ல கருத்துகளைச் சொன்னார்கள். அதிலே ஒன்று, அவர்கள் சொன்னதிலே மிக முக்கியமான கருத்து, தலைநகர் சென்னையே விலை போய்க் கொண்டிருக்கிறது என்பது. சென்னையே விலை போகின்ற அளவிற்கு மொத்தமாக யாராவது விலை பேசி வாங்கினாலும் வாங்கிவிடுவார்கள். ஆக, அப்படி விலை போகின்ற அளவிற்கு எவ்வளவோ கோடிக்கணக்கான பணம் எப்படி, எப்படியோ தமிழ்நாட்டிலே வந்து நம்முடைய நிலத்தை எல்லாம் அபகரித்துக் கொண்டது. காஷ்மீர் மாதிரி நமக்கு ஒரு பாதுகாப்பு கிடைக்குமா என்று எண்ணக்கூடிய அளவிற்கு நம்முடைய நிலத்தை யார் வாங்கலாம் என்பதை நாம் தீர்மானிக்க முடியுமா என்பது அரசியல்.

இருந்தாலும்கூட இந்தப் பொது உணர்வு நம் எல்லோருக்கும் வருமானால், அந்த அளவிற்கு ஏதேனும் நியாயங்களைப் பெறுவதற்கு வழி கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அவர் சொன்னதிலே ஒன்று, அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் இளங்கலைப் பட்டப் படிப்பிற்கு கல்விக் கட்டணத்தை இரத்து செய்யலாம் என்ற ஆலோசனையைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனை உடனே ஏற்றுக்கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், படிக்கின்ற பிள்ளைகள் எந்த இடத்திலே படித்தாலும் அவர்களுக்கு எந்தவகையிலேனும் உதவி செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தாலும் அந்த உதவியைச் செய்வது கலைஞருடைய அரசாங்கத்தினுடைய ஒரு குறிக்கோள். எனவே, அது இந்த .அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதி திராவிடர் சமூகத்தைப் பற்றி சொல்கிறபோது, திரு. செல்வம் அவர்களும் குறிப்பிட்டதாக நான் நினைக்கிறேன். அரசு, பல்கலைக்கழகங்கள் முதலானவற்றில் ஆதி திராவிடர்கள் நிரப்பப்பபட்டிருக்க வேண்டிய பணிகளில் காலியாக இருக்கிற இடங்களுக்கு விரைவில் அவர்களை பணியில் அமர்த்துவோம் என்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அந்த காலகட்டத்திலே ஆட்சியிலே இருந்தபோது கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். தி.மு.க. தொடர்ந்து அப்போது ஆட்சியில் இல்லை. அதனால், தொடர்ந்து நிறைவேற்றப்படவில்லை. அந்தக் காலிப் பணியிடங்களுக்கு ஆதி திராவிடர்கள் எவ்வளவு பேர் அந்த இடங்களில் நிரப்பப்பட வேண்டுமோ அந்தப் பணிகளிலே அவ்வளவு பேரையும் வேலையில் அமர்த்தவேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் இங்கே தெரிவிக்கப்பட்டது. அப்படித் தெரிவிக்கப்பட்ட அந்த வேண்டுகோள் இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு எவ்வளவு விரைவில் அந்தப் பணிகளுக்கு உரிய தகுதியுடையவர்களை, நியமிக்க முடியுமோ, அவர்களை நியமித்து அந்தப் பணியை இந்த அரசு நிறைவேற்றும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் ஒன்று. பொம்பலூர், வேலூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மழையின்மையாலும், மழை குறைவாலும் குடிநீர்ப் பற்றாகுறை ஏற்பட்டிருப்பதைத் தெரிவித்தார்கள். அந்தக் குடிநீர்ப் பற்றாகுறையைப் போக்குவதற்கு, அந்த வறட்சியினால் ஏற்படக்கூடிய பாதிப்பைப் போக்குவதற்கு இயற்கை இடர் நிவாரண நிதியிலிருந்து



(Calamity Relief Fund) மாநில அரசு அதிகாரிகளால் 29 கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தின்படி மழையில்லாத அந்தப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்ற வறட்சிக்கு ஈடுசெய்யக்கூடிய அளவிற்கு குடிநீர் கிடைப்பதற்கு வழி செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை முழு அளவில் நீங்கள் ஏற்றிருப்பதாகத்தான் நான் நம்புகிறேன். அதற்குரிய நிதி ஒதுக்கத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று சொன்ன அந்த வார்த்தைகளுக்கு ஏற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) நியாயமான கோரிக்கைகள் எவை இருந்தாலும், அவை எவ்வளவு பெரிய நிதிச் சுமையைத் தந்தாலும், கோரிக்கை நியாயமாகவும், தேவைப்பட்டதாகவும் இருந்தால் அதை நிறைவேற்றித் தருகின்ற நம்பிக்கையைத் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியிலும் உருவாக்கி வைத்திருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த மாமன்றத்திலே வைத்த கோரிக்கையை ஏற்று, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகளிலும் படிக்கின்ற அத்தனை மாணவர்களுக்கும் இலவசமாக உயர் கல்வியைத் தந்த இந்தப் பெருந்தன்மைக்கு தமிழக காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியினை இந்த மாமன்றத்திலே பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையின்போது, தமிழகம் முழுவதும் இருக்கின்ற அரசு தரும் உயர் கல்விக்கும், அதேபோல் அரசு உதவி பெறும் தனியார் உயர் கல்விக்கும்,

அரசு நிதியைத் தருவதற்கான அறிவிப்பை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேவேளையில், உயர் கல்வி, தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, நடுநிலைக் கல்விக்கும் ஊக்கமளிக்கின்ற இந்த அரசு, அந்தப் பள்ளிகளில் இருக்கின்ற மின்சாரக் கட்டணத்திற்கும் அலுவலகத்தில் இருக்கின்ற தொலைபேசிக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்க வேண்டும். தற்போது தலைமை ஆசிரியராலும், ஆசிரியப் பெருமக்களாலும் அந்த மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை.

100 ஏக்கர், 50 ஏக்கர் வைத்துள்ள சிறு, குறு, பெரு விவசாயிகளுக்கெல்லாம் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அரசு இலவச மின்சாரம் தந்துகொண்டிருக்கிற இந்த வேளையில், தங்கள் ஆட்சிக் காலத்தில் பள்ளிகளுக்குக் கணினி வழங்கப்பட்டது. அப்படி அந்தக் கணினிகளை இயக்குகின்ற சூழ்நிலைகளில் அந்த மின்சாரக் கட்டணத்தை அந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியராலும், அரசுப் பள்ளி ஆசிரியப் பெருமக்களாலும் கட்ட முடியாத ஒரு நிலைமை தொடர்ந்துகொண்டிருக்கிற காரணத்தினால், இவ்வளவு சலுகைகள் அறிவிக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய நிதியமைச்சர் அவர்களும் பரிசீலித்து, துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் செலுத்த வேண்டியுள்ள மின்சாரக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை இரத்து செய்யக்கூடிய ஒரு நல்ல அறிவிப்பை இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கான பதிலுரையிலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்கும், அதேபோல, இட ஒதுக்கீட்டின்படி நிரப்ப வேண்டிய காலி இடங்களைப் படிப்படியாக இந்த அரசு உரிய முறையில் நிரப்பும் என்று அறிவித்தமைக்கும், தமிழகத்தில் ஆங்காங்கே நிலவுகின்ற தீண்டாமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்த அரசு உரிய கவனம் எடுக்கும் என்று அறிவித்தமைக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்கள் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியையும், இட ஒதுக்கீட்டுக் கொள்கையையும் உயிர் மூச்சாகக் கொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள், அதற்கு ஆதாரமாக இருக்கக்கூடியது கல்வி என்ற காரணத்தினாலே, உயர் கல்வி வரையில் இலவசமாக மாணவ மாணவிகள் பயன்பெறத்தக்க வகையிலே அரசுக் கல்லூரிகளுக்கு அந்தச் சலுகைகளை வழங்கியதுபோல, உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, அரசு உதவி பெறுகிற தனியார் கல்லூரிகளிலேயும் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதார வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் பதிலுரையிலே, ஆதி திராவிட மக்களுக்கான பின்னடைவு காலியிடங்களை இந்த அரசு பூர்த்தி செய்யும் என்று அறிவித்திருப்பது, மீண்டும் நம்முடைய தமிழக அரசு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசுதான் ஆதி திராவிட மக்களுக்கு இன்னும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் மீண்டும் நன்மை செய்ய முடியும் என்ற உறுதியை ஏற்படுத்தியிருக்கிறது. விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாக அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினத்திலே மீனவர்களை சுட்டுக்கொன்ற இலங்கை பேரினவாத அரசைக் கண்டித்து, கச்சத் தீவை மீட்டெடுப்போம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அதையும் நாளைய கடை அடைப்புப் போராட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டம், குடிநீர்ப் பிரச்சினையில் சிக்குண்டு தவிப்பது குறித்து நான் இந்த அவையிலே எடுத்து வைத்ததை ஏற்று, பெரம்பலூர், வேலூர் மாவட்டங்களுக்கு ரூ.29 கோடி வளர்ச்சி நிதிக்காக C.R.F.-லே நீங்கள் பணத்தை ஒதுக்கி இருக்கிறீர்கள்.

பிற்பகல் 1-10

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நீங்கள் எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கு 1,500 கோடி ரூபாயில் நிறைவேற்றினால்தான் நாங்கள் தண்ணீரே குடிக்க முடியும் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எம்.எல்.ஏ. காலனி குறித்தும் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். கோரிக்கையை நான் வைத்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெங்களூர், ஹைதராபாத்தில் இருக்கக்கூடிய எம்.எல்.ஏ. காலனியைப்போல ஏன் தமிழகத்திலும் ஒரு எம்.எல்.ஏ. காலனியை உருவாக்கக்கூடாது? அதற்கு ஒரு விடையை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இப்போதே அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிவுற்றது.

## 5. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006-2007, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006-2007 ஆம் ஆண்டின் கூடுதல் மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:



"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2006-2007."

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006-2007, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006-2007 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006-2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29-3-2007 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2006-2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**நிறைவேற்றப்பெற்ற 2006—2007 ஆம் ஆண்டிற்கான "கூடுதல் செலவிற்கான" மானியக் கோரிக்கைகள்**

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 48,80 | — | — |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2 | — | — |
| 3 | நீதி நிருவாகம் | 12 | — | — |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 43,62,84 | 79,52 | — |
| 5 | வேளாண்மைத் துறை | 56,72,29 | 10,13,93 | 1,64,04 |
| 6 | கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு | 30 | 36,37 | — |
| 7 | கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் | 8 | — | — |
| 8 | கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் | 52,38 | 1 | — |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 48,94,19 | 12,99,53 | — |
| 10 | வணிக வரி மற்றும் பதிவுத் துறை-வணிக வரிகள் | 18 | — | — |
| 11 | வணிக வரி மற்றும் பதிவுத் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு | 16,14,01 | — | — |



(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு | 90,05,65 | 519,02,20 | 419,40,92 |
| 13 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 5 | — | 400,00,00 |
| 14 | எரிசக்தித் துறை | 2 | — | — |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 6 | 86,65 | — |
| 16 | நிதித் துறை | 10 | — | 1,30,00 |
| 17 | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் | 8 | — | — |
| 18 | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 4,94,30 | — | — |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,07 | 1 | — |
| 20 | உயர் கல்வித் துறை | 9,23,60 | 1 | — |
| 21 | நெடுஞ்சாலைகள் துறை | 8 | 10 | — |
| 22 | உள் துறை-காவல் | 148,73,77 | 17,32,89 | — |
| 23 | உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 5 | — | — |
| 24 | உள் துறை-சிறைச்சாலைகள் | 8 | 1 | — |
| 25 | உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 15,92,03 | — | — |

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 5 | — | — |
| 27 தொழில் துறை | 5 | — | 73,39,25 |
| 28 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 2,15,63 | — | — |
| 29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா | 12,98,09 | 4,89,96 | — |
| 30 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு | 7,16,24 | 10,00 | — |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 5,97,66 | 3,73,56 | — |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 35,14,63 | 4 | 75,82,25 |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 3 | — | — |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 5 | 1 | — |
| 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 3,61,18 | — | — |
| 38 பொதுத் துறை | 41 | — | — |
| 39 பொதுப் பணித் துறை-கட்டடங்கள் | 6 | 14 | — |
| 40 பொதுப் பணித் துறை-பாசனம் | 7 | 16 | — |
| 41 வருவாய்த் துறை | 59,04,54 | 2,03,42 | — |



(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 14 | 42,33,57 | — |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 168,57,06 | — | — |
| 44 சிறுதொழில்கள் துறை | 7 | 50,00 | — |
| 45 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 32,35,45 | 1,15,20 | — |
| 46 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 6 | — | — |
| 47 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 58,28 | — | — |
| 48 போக்குவரத்துத் துறை | 66,35 | 49,99,90 | 50,00,00 |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 2,06,95 | — | — |
| 50 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 3 | — | — |
| 51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 178,89,36 | — | — |
| **பெருமொத்தம்** | **944,58,59** | **666,27,19** | **1,021,56,46** |

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2007-2008, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007-2008 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:



"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial Year 2007-2008."

## 8. முன்பண மானியக் கோரிக்கைகள், 2007–2008, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007-2008 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 30-3-2007 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2007-2008 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

[2007 மார்ச் 30

நிறைவேற்றப்பெற்ற 2007-2008 ஆம் ஆண்டிற்கான **"உடனடிச் செலவிற்கான"** முன்பண மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 1. மாநிலச் சட்டமன்றம் | 4,97,16 | — | — |
| 2. ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 4,31,99 | — | — |
| 3. நீதி நிருவாகம் | 56,53,13 | — | — |
| 4. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 153,63,78 | 5,74,90 | — |
| 5. வேளாண்மைத் துறை | 271,99,08 | 20,32,23 | — |
| 6. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 54,78,22 | 31,29 | — |
| 7. மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 24,01,13 | 3,71,39 | — |
| 8. பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 4,63,71 | 1 | 7,18,25 |
| 9. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 88,38,06 | 8,11,93 | — |
| 10. வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 46,88,02 | — | — |
| 11. முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 33,65,22 | — | — |



2007 மார்ச் 30]

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 12. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 100,14,83 | 331,41,79 | 54,94 |
| 13. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 840,41,96 | 77,20 | 240,00,00 |
| 14. எரிசக்தித் துறை | 289,57,42 | 25,00,00 | 1 |
| 15. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 73,30,26 | 57,39,53 | — |
| 16. நிதித் துறை | 116,15,02 | 1 | 4,20,88 |
| 17. கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 130,74,78 | — | 1 |
| 18. கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 14,37,61 | 27,50 | — |
| 19. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 557,79,98 | 13,66,95 | — |
| 20. உயர் கல்வித் துறை | 258,57,75 | 5,03,45 | — |
| 21. நெடுஞ்சாலைகள் துறை | 480,72,91 | 1,102,30,38 | — |
| 22. காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 481,87,70 | 51,75,00 | 25,00 |
| 23. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 28,72,84 | 2,22,35 | — |

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 24. சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 22,49,95 | 1,59,36 | — |
| 25. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 15,39,12 | — | — |
| 26. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 76,94,28 | 129,96,97 | 27,12,50 |
| 27. தொழில் துறை | 17,29,57 | 12,20,25 | 28,00,00 |
| 28. செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 8,35,59 | 21,90 | — |
| 29. சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 16,29,71 | 3,47,25 | — |
| 30. எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 16,33,27 | 2 | — |
| 31. தகவல் தொழில்நுட்பவியல் துறை | 191,74,87 | — | — |
| 32. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 90,53,32 | 88,79 | — |
| 33. சட்டத் துறை | 3,30,83 | — | — |
| 34. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 481,59,65 | 145,60,07 | 37,98,37 |
| 35. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 8,14,34 | 3,95 | — |





(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 36. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 9,79,01 | 3,90,94 | — |
| 37. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 10,86,65 | — | — |
| 38. பொதுத் துறை | 33,60,26 | 1,25,00 | — |
| 39. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 52,56,99 | 121,44,54 | — |
| 40. பாசனம் (பொதுப் பணித் துறை) | 258,42,56 | 219,66,82 | — |
| 41. வருவாய்த் துறை | 587,27,64 | 23,65 | — |
| 42. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 666,06,62 | 201,52,54 | — |
| 43. பள்ளிக் கல்வித் துறை | 1,723,65,07 | 40,47,71 | 1,37 |
| 44. சிறுதொழில்கள் துறை | 15,78,22 | 8,92 | — |
| 45. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 369,67,42 | 21,25 | — |
| 46. தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 6,14,59 | — | — |
| 47. இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 9,62,61 | 26,81 | — |
| 48. போக்குவரத்துத் துறை | 84,11,22 | 18,80,64 | 18,75,00 |
| 49. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 11,27,37 | 1 | 62,50 |

[2007 மார்ச் 30

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 50. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 1,546,04,78 | — | — |
| 51. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 69,61,50 | — | — |
| பெருமொத்தம் | 10,519,19,57 | 2,529,93,30 | 364,68,83 |

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-15

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2007 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானம்

### பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2007) மற்றும் 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2007) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2007), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

@ 30-03-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2007 மார்ச் 30

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2007), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2007)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 30-03-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2007 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (2-4-2007) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-19 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

32. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

33. 2005-2006 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

34. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

25. 2006-2007 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

26. 2006-2007 ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

27. 2006-2007 ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

227562

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.